# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1973 - 2016 ජූනි මස 24 වැනි සිකුරාදා - 2016.06.24

*1973 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 890 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 927 |


**கவனிக்க.**- மத்தியஸ்த சபை (திருத்தம்) சட்டமூலம் 2016, மே மாதம் 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, யூலை மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, யூலை மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - அநுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய முஸ்லிம் விவாகப் பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, யூலை மாதம் 25 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, யூன் 02.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | கல்னேவ | கலாகம் பலாத பிரிவின் நேகம்பக பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம் |
| அநுராதபுரம் | கெக்கிராவ | கலாகம் பலாத பிரிவின் கெக்கிராவ மற்றும் திப்படுவெவ பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம் |

6-806

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - புத்தளம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, யூலை மாதம் 25 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, யூன் 06.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| புத்தளம் | கல்பிட்டி | தலவில பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கல்பிட்டி பிரிவில் விவாக (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம் |

6-807

## இலங்கைப் பொலிஸ்

### பொலிஸ் கொஸ்தாபல் பதவி - விசேட அதிரடிப்படை

இலங்கை பொலிஸ் சேவையில் விசேட அதிரடிப் படையின் பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2016.08.24 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸினால் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

3. ***சம்பள அளவுத்திட்டம்***.- ரூபா 3,54,480 - 7 x 3,600 - 27 x 4,440 - ரூபா 4,99,560.

2016.01.01 ஆந் திகதி முதல் 2020.01.01 வரை சம்பளம் பொது நிர்வாக சுற்றுநிருபம் இலக்கம் 3-2016 இன் பட்டோலை II இன் பிரகாரம் வழங்கப்படும். மேலும் 2020.01.01 முதல் முழுமையான சம்பள அளவுத் திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.

மேலும், இவ்வுத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்றுநிருப இலக்கம் 2416/ 2013 இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்களாவர். மேற்குறிப்பிடப்பட்ட சம்பள அளவுத்திட்டத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் கொடுப்பனவுகளை மாதந்தோறும் பெறுவதற்கும் உரித்துடையவராவர் :

(அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு : 7,800 ரூபா ;

(ஆ) ஊக்குவிப்புக் கொடுப்பனவு : 1,500 ரூபா

(இ) சீருடைகளைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு 250 ரூபா ;

(ஈ) மாதாந்த சம்பளத்தில் 1/ 4 கொடுப்பனவு 3,570 ரூபா ;

(உ) கடினக் கொடுப்பனவுகள் : 2,000 ரூபா ;

(ஊ) இணைந்த கொடுப்பனவுகள் : 10,500 ரூபா (350 x 30 நடவடிக்கை பிரதேசம்)

(எ) இணைந்த கொடுப்பனவுகள் : 8,400 ரூபா (350 x 24 நடவடிக்கையற்ற பிரதேசம்)

இந்தக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக :

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடுகளிலும் வைத்திய சிகிச்சைகளைப் பெறுவதற்கு நிதி மூலமான உதவித்தொகைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்வதற்கான வசதிகள் வழங்கப்படும் ;

(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகளுடன், கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

(ஊ) விசேட அதிரப்படையின் அடிப்படை பயிற்சியை முடித்து விசேட அதிரடிப் படையின் சேவையில் ஈடுபடும் காலப்பகுதியில் மாத்திரம் விசேட அதிரடிப் படையின் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் விசேட கொடுப்பனவுகளைப் பெறுவதற்கான உரிமையுண்டு.

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) வயதெல்லை.- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்ப முடிவுத் திகதியன்று 27 வயதிற்கு உட்பட்டவர்களாக இருந்தால் அவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

(ஆ) கல்வித் தகைமைகள்.- க. பொ. த. (சா. தர) பரீட்சையில் கணிதம் மற்றும் தாய்மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்கள் முதலாவது தடவையில் ஒரே முறையில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் :

**குறிப்பு 1**.- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2**.- க.பொ. த. (சா. தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராகக் கருதப்படும்.

**குறிப்பு 3**.- விருப்பத்திற்குரிய தமிழ்/ ஆங்கிலம்/ சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

(இ) பௌதிக தகைமைகள் :

* உயரம் : 5 அடி 4 அங்குலம் (ஆகக் குறைந்தது)

* மார்பு : 30 அங்குலம் (ஆகக் குறைந்தது மூச்சு விட்ட நிலையில்)

**குறிப்பு 1**.- சிறந்த விளையாட்டுத் திறமையுடன் தேசிய விளையாட்டுக் குழாத்திலிருந்து தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் பௌதீக தகைமைகள் சற்று குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின்படி தகைமை பெறுவர்.

(ஈ) பார்வை தொடர்பான தேவை.- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/ 6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பினும் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் சேவைக்கு தகைமை அற்றவராவார்.

(உ) பிற தகைமைகள்.- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும் (விவாகரத்து பெற்றவர்கள் விவாகமானவர்களாகக் கருதப்படுவர்). மற்றைய தகைமைகள் உடைய ஏற்கனவே இலங்கை பொலிஸில் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இந்நிபந்தனை மாத்திரம் ஏற்புடையதாகாது.

5. **ஆட்சேர்ப்பு முறை**.- விண்ணப்பங்களின்படி தகைமைபெறும் விண்ணப்பதாரிகள் பொலிஸ் சேவையில் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமைப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.-

உடற் தகுதிப் பரீட்சை :

| பயிற்சி | தடவைகள் | நேரம் (நிமிடத்தில்) |
|---|---|---|
| 1000 மீற்றர் ஓட்டம் | - | 04 |
| சின்அப்ஸ் (Chin ups) | 05 | 01 |
| புஷ் அப்ஸ் (Push ups) | 15 | 01 |
| சிடப் (Sit ups) | 15 | 01 |
| ஸ்கொட் டிரஷ் (Scott thrush) | 12 | 01 |

- உடற் தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(i) எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை :

* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக கட்டுரை எழுதுதல்.
* பொது அறிவும் நுண்ணறிவும் (1 மணித்தியாலம்)

6. **மருத்துவப் பரிசோதனை** :

* விண்ணப்பதாரர் தனது நியமனத்தைப் பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். மருத்துவ பரிசோதனையானது ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, முன்னுரிமை மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலின்படி தெரிவுசெய்யப்படுவர். மருத்துவ பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

7. **பின்னணி விசாரணைகள்**.- (அ) விண்ணப்பதாரியின் நன்நடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங்குவது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

8. **அரச கரும மொழிக் கொள்கையை அமுல் படுத்துதல் :**

- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/ 2007ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம், 2007.07.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவைக்கு/ மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழித் தேர்ச்சியை சேவையில் இணைந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் பெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் உரிய இரண்டாம் மொழித் தேர்ச்சியைப் பெறாத உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

9. **நியமனக் கொள்கைகள்.**- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/ தபுதாரர்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்.**- (அ) நியமனம் 3 ஆண்டு கால பயிலுநர் அடிப்படையில் இருக்கும்.

(ஆ)தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கைக்கு இணங்க ஏற்கனவே விதிக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் விதிக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபன விதிக்கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள், நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்படல் வேண்டும்.

(ஈ) பதவி உறுதிப்படுத்தப்படுவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் இலங்கை பொலிஸினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்தியெய்தல் வேண்டும். குறித்த பரீட்சைகளில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு இடமுண்டு.

(உ) நியமனம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்கம் கொண்ட பகுதி II பொலிஸ் வர்த்தமானியின் பிரகாரமும் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய 1952/ 2006 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரமும், 2007.08.09 ஆந் திகதிய திருத்தஞ் செய்யப்பட்ட அச்சுற்றுநிருபத்தின் பிரகாரமும் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களைத் தெரிவித்து பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட பயிலுநர் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் இப்பயிலுநர் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதியானது இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக்கொள்ளலானது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் உடனடியாக 1693/ 2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்று கோவையினை பின்பற்றுவதாக சத்தியப்பிரமாணம்/ உறுதி செய்தல் வேண்டும்.

(ஏ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/ 2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அபிமானம்மிக்க அரச சேவைக்கான அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக சுய உறுதி செய்தல் வேண்டும்.

(ஒ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் தமது பதவியில் உறுதிப்படுத்திய பின் இலங்கை பொலிஸில் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவார்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இன் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட அரச சேவை பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய பொது நிபந்தனைகள் செல்லுபடியாகும்.

(ஆ)1990.03.10 ஆந் திகதிய மற்றும் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய 15/ 90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது) ;

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது ஏனைய புறக் கிருத்தி செயற்பாடுகள் பற்றிய சான்றிதழ்கள் ;

(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்) ;

(ஊ) தேசிய ஆள் அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி ;

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்ப தாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" x 8" அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ்களது பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை பிரத்தி யேகமாக கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப் படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பொலிஸ் மா அதிபர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

**இலங்கை பொலிஸ்**

பொலிஸ் கொஸ்தாபல் பதவி - விசேட அதிரடிப் படை

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----. (பிரதியை இணைக்கவும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பிரதேச செயலகப் பிரிவு :-----.
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.
(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் : -----.
(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு : -----. பிரதேச செயலகம் :-----.

(ஊ) தொலைபேசி இலக்கம் (இருப்பின்) வதிவிடம் :-----, கையடக்கத் தொலைபேசி இலக்கம் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வரு பவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தைவழி பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தைவழி முப்பாட்டன் : -----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----; மார்பு : (அங்குலம்) :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப் பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/ திருமணம் ஆகாதவரா ? :-----.

12\. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? : -----.

13\. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/ தகைமைகள் உண்டா ? :-----.

14\. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ)-----.
(ஆ)-----.

15\. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ? (ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக) ? :-----.

16\. (அ) நீங்கள் ஆயுதப்படை சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட ஆயுதப்படை சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப்படையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

17\. (அ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருக்கின்றீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட படைத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும் :-----.

(ஆ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

18\. நீங்கள் ஏதாவது தவறு தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? அல்லது தண்டனை பெற்றுள்ளீரா ? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

19\. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அவ்வாறாயின் ஏதேனும் குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின் விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் இலங்கைப் பொலிஸ் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

20\. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :

இந்த விண்ணப்பதாரி ....................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கிறேன்.

................,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பதவி :-----.
திகதி :-----.

6-697

---

## இலங்கை நிரந்தர வான்படை

பயிலிளவல் அலுவலர்களுக்கான வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர வான்படையில் பொதுக்கடமை விமான ஓட்டுநர் பிரிவில் பயிலிளவல் அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன.

2\. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஆண்பாலாரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

BSc. (Aviation Studies) பட்டப் பயிற்சிக்கு உட்செல்வதற்கான தகைமை (ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவலை பல்கலைக்கழகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட)

**பொதுக்கடமை விமான ஓட்டுனர் :**

குறைந்தபட்சம் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக (பௌதீகவியல், இரசாயனவியல், இணைந்த கணிதம்)/ உயிரியல் (பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல்) பிரிவுகளில் (தேவையைப் பொருத்து) மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

3. **வேறு தகைமைகள்**.- இவற்றுக்கு மேலதிகமாக விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தர வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொது நிபந்தனைகளை கட்டாயமாக பூர்த்திசெய்தல் வேண்டும் :-

(அ) தேசிய இனம் :- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) வயது :- 2016, நவெம்பர் மாதம் 15 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 22 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) உயரம் :- ஆண்- 5 அடி 6 அங்குலத்திற்கு குறையாதிருத்தல் வேண்டும் ; பெண்-5 அடி 4 அங்குலத்திற்கு குறையாதிருத்தல் வேண்டும்.

(ஈ) உடல் நிறை :- ஆண் 17 < உடற்பருமன் சுட்டி (BMI) < 26
பெண் 17 < உடற்பருமன் சுட்டி (BMI) < 25

$$\text{உடற்பருமன் சுட்டி } (BMI) = \frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம் (மீ)}^2}$$

(உ) மார்பு :- ஆண் 32" (குறைந்தது)

(ஊ) பார்வை வர்ணப்பதிவு மட்டம் :- CP2

(எ) தொலை பார்வை :- இரண்டு கண்களிலும் 6/ 6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்)

(ஏ) குடியியல் நிலை :- விண்ணப்பதாரர்கள் திருமண மாகாதவர்களாக இருத்தல் வேண்டும். பயிலிளவல் எவரும் பயிற்சியின் போதும் ஆணைபெற்ற திகதியிலிருந்து ஓராண்டு காலத்துக்கும் திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

4. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள சாதனைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

5. இரண்டாம் மூன்றாம் பந்தியின் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யாத தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், நிறை, பார்வை மட்டம் என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உயரம், நிறை, பார்வை மட்டம் ஆகியவற்றிற்கு குறைவானவர்களும் உடற்தகைமை மட்டத்தை கொண்டிராதவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள். தேவையான உயரம் இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

6. **சேவை நிபந்தனைகள்** :

(அ) தேர்வுநாடி தொடக்கத்தில் ஏனைய பதவி வரிசைகளுக்குப் போன்ற அதே விதத்தில் வான்படையில் ஒரு பயிலிளவலாகச் சேர்க்கப்பட்டு அடிப்படை யுத்தப் பயிற்சியொன்றை மேற்கொள்வர். அடிப்படை பயிற்சி திருப்திகரமாக முடிவடைந்ததும் மற்றைய பயிற்சிக்கான காலப்பகுதி பயிலிளவல் சேவையின் கிளையைப் பொருத்து இருக்கும். பின் ஏனைய பதவி வரிசையிலான ஆட்சேர்ப்பு நீக்கப்பட்டு பைலட் ஒபிசர் பதவி வரிசையில் நிரந்தர ஆணையொன்றை பெறுவர்.

(ஆ) பயிலிளவல் பாதுகாப்பு அமைச்சின் கலந்தாலோசனையுடன் வான்படை ஏவுநரினால் தீர்மானிக்கப்பட்டவாறான இலங்கையினுள் அல்லது வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்குத் தேவைப்படுத்தப் படுவர்.

(இ) பயிலிளவல்களாகப் பயிற்சி பெறும் காலப்பகுதியின்போதும் அதன் பின்னரும் ஆளணியினர் வான்படைச் சட்டத்திற்கு ஆளாவர்.

(ஈ) ஒவ்வொரு பயிலிளவலுக்கும் அனைத்து வகை சீருடைகள், உபகரணங்கள், மருத்துவ வசதிகள் என்பனவும் அளிக்கப்படும்.

(உ) பயிலிளவலின் பயிற்சிக் காலத்தின்போது பயிலிளவலுக்கு வான்படை உணவு விடுதியொன்றில் இடவசதியளிக்கப்பட்டு உணவும் வழங்கப்படும்.

(ஊ) ஒரு பயிலிளவல் பயிற்சியின்போது ஆணையொன்றைப் பெறுவதற்கான தேர்வை நாடும் நிலையில் இருந்து தாமாகவே விலகிக்கொள்ளுமிடத்து அத்தகைய பயிலிளவலின் பொருட்டு அதுகால வரையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செலவுகள் யாவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவர்.

(எ) ஒரு பயிலிளவல் தமது பயிற்சியின்போது எச்சமயத்திலும் பிறழ்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஏதுக்களுக்காக ஆணை பெறுவதற்கான தகைமைக்குப் பொருத்த மற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை இடப்படுமிடத்து அவர் பயிற்சியில் இலங்கைக் குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாச் செலவுகளையும் இலங்கைக் குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது

பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவரென்பதுடன் இதற்காக இலங்கை அரசின் சார்பில் வான்படை ஏவுநருடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்யும்படியும் தேவைப்படுத்தப்படுவர்.

(ஏ) பெற்றோர் அல்லது பாதுகாவலர் உட்பந்திகள் ஊ, எ தொடர்பாக விண்ணப்பப்படிவத்தின் 27 ஆம் சுட்டில் தரப்பட்டுள்ளதைப் போன்ற வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிட்டு அவற்றை விண்ணபத்துடன் சேர்த்து அனுப்பி வைத்தல் வேண்டும். இத்தேர்வுநாடிகள் பயிலிளவல்களாக நியமிக்கப்படுவதற்கு முன்பு பெற்றோர் அல்லது பாதுகாவலர் இந்தப் படிவத்தில் பின்தொடரும் ஒரு ஒப்பந்தத்தை இலங்கைக் குடியரசுடன் செய்து கொள்ளும்படி தேவைப்படுத்தப்படுவர்.

(ஐ) பந்தி 02 இலும் 03 இலும் உள்ள தேவைகளைக் கொண்டிருக்கும் தேர்வுநாடிகள் முதலாவது நேர்முகப்பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டுவதுடன் இதில் சித்தி பெறுபவர்கள் அலுவலர் தரப் பரீட்சைக்கும் அழைக்கப்படுவர். அலுவலர் தரப்பரீட்சையில் சித்தி பெறும் தேர்வுநாடிகள் மருத்துவப் பரிசோதனைக்கும் உட்படுத்தப் படுவதுடன். (எல்லா விண்ணப்பதாரிகளும் இலங்கை வான்படை யினால் ஒழுங்கு செய்யப்பட்ட மருத்துவச் சபைக்கு உட்படுத்தப்படுவர்.) தேவைப்படின் விமானத்தில் செல்லும் திறமையும் பரீட்சிக்கப்படும். ஒவ்வொரு கிளைகளுக்கும் தேவைப்படும் தேர்வுநாடிகளின் எண்ணிக்கை அவரவர்கள் இந்த நேர்முகப் பரீட்சைகளிலும் தேர்வுகளிலும் காண்பித்த திறமைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

(ஒ) திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

(ஓ) திருமணமாகிய அலுவலராயின் (கிடைக்குமாயின்) மணமானோர் குடிமனை வழங்கப்படும். பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தாவது போன்று வாடகை அறவிடப்படும்.

(ஔ) எல்லா அலுவலருக்கும் உலகின் எப்பாகத்திற்கும் எந்நேரத்திலும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

(அஅ) எல்லா அலுவலருக்கும் வான் படைச் சட்டத்தினாலும் காலத்திற்கு காலம் வழங்கப்படும் கட்டளையினாலும் ஆளப்படுவர்.

7. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்** :- தேர்ந் தெடுக்கப்பட்ட தேர்வு நாடிகள் இலங்கைக் குடியரசின் மொழிக் கொள்கைக்கு உடன்பட்டவர்களாகவும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன்பின்னர் ஆக்கப்பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

8. **சம்பளமும் கொடுப்பனவுகளும்** :

(அ) இலங்கை வான் படையில் பயிலுனர்களுக்கும் ஆணைபெற்ற அலுவலர்களுக்கு மான சம்பளம் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு) -

| | |
|---|---|
| பயிலிளவல் | : ரூபா 1,87,620 |
| பைலட் ஆபீசர் | : ரூபா 2,23,500 (பயிலிளவல் நுழைவு) |
| பைலட் ஆபீசர் | : ரூபா 2,42,700 (பயிலிளவல் அல்லாத நுழைவு) |
| பிளையிங் ஆபீசர் | : ரூபா 2,75,220 - 34 X 7,740 = ரூபா 5,38,380 |
| ப்ளையிட் லெப்டினன்ட் | : ரூபா 3,21,660 - 28 X 7,740 = ரூபா 5,38,380 |
| ஸ்குவாட்ரன் லீடர் | : ரூபா 3,52,620 - 24 X 7,740 = ரூபா 5,38,380 |
| விங் கமாண்டர் | : ரூபா 3,62,100 - 20 X 9,480 = ரூபா 5,51,700 |
| குறூப் கப்ரின் | : ரூபா 4,41,060 - 18 X 12,600 = ரூபா 6,67,860 |

(ஆ) **ஏனைய கொடுப்பனவுகள்**.-

(1) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா 7,800.

(2) உற்சாகமூட்டும் கொடுப்பனவு ஐந்து வருடங் களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250 வீதம் வழங்கப்படும்.

(3) கடினப்படி : மாதமொன்றுக்கு ரூபா 600.

(4) விசேட கொடுப்பனவு : யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 4,400.

(5) விசேட கொடுப்பனவு ரூபா 3,000 (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 100 வீதம் கொடுப்பனவு வழங்கப்படும்.)

(6) இடைக்காலக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 1,000.

(7) சீருடை பேணுதல் படி (மாதமொன்றுக்கு ரூபா 255).

(8) சேவையாளர் படி : மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்)

(9) உணவுப்படி மாதமொன்றுக்கு ரூபா 16,138.20 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்)

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாத மொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை).

(11) விசேட கொடுப்பனவு 20% அடிப்படைச் சம்பளத்தில்

(12) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும் துணைவிக்கும் பிள்ளைகளுக்கும்)

(13) உணவு விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின் மீளளிப்பு.

(14) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும்.

(15) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடையதாயின் குடும்பத்தினருக்கும்).

(16) திருமணமான அலுவலருக்கு மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து 30 மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ. போ. ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும்.

(17) பொதுக்கடமை விமான ஓட்டுனர் கிளையில் உள்ளவர்களுக்கு பறத்தல் சம்பளம் வழங்கப் படும்.

(18) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் பைலற் ஆபீசர் இல் இருந்து குறுப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு ரூபா 1,600 இலிருந்து ரூபா 4,250 வரை வாடகைப்படிகள் கொடுபடற்பாலனவாகும்.

(19) வரவுசெலவுத் திட்டத்தின்படி ரூபா 10,000 மாதாந்தம்.

9. **ஓய்வூதியங்கள்/பணிக்கொடைகள்.**- காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆண்டின் வான்படை ஓய்வூதிய அத்துடன் பணிக்கொடைகள் கோவையின் நியதிகளின்படி கொடுபடற்பாலனவாகும். எல்லா அலுவலர்களும் விதவைகள், அநாதைகள் (ஆயுதந் தாங்கிய படைகள்) ஓய்வூதிய திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துபவராவர். உதவுதொகை 1970 ஆம் ஆண்டின் விதவை, அநாதைகள் (ஆயுதந் தாங்கிய படைகள்) ஓய்வூதியத் திட்டத்தில் உள்ளபடியனவாகும்.

10. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்** :

(அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப் பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2016, யூன் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "கட்டளை ஆட்சேர்ப்பு அதிகாரி, தொழிற்துறை பயிற்சிப் பாடசாலை, இலங்கை விமானப்படை, ஏக்கல, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "பொதுக்கடமை விமான ஓட்டுநர் பிரிவில் பயிலிளவல் அலுவலர்களுக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் தேதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை வான்படையை வந்தடைவனவும் இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப் பங்கள் கவனிக்கப்படமாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில்/கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பக் காரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின்/சபையின்/ குடியியல் தாபனத்தின் தலைமை யதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) தேர்வுநாடி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது அல்லது அவ்வாறு செய்யும்படி தேவைப் படுத்தப்படும் போது பின்வருவனவற்றின் மூலப்பிரதிகளை காண்பிக்குமாறு தேவைப்படுத் தப்படுவர் :-

(1) பிறப்புப்பதிவுச் சான்றிதழ் (கல்விச் சட்டக் கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(2) விண்ணப்பித்த கிளைக்குத் தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்.

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில்/ தொழில்நுட்பப்பயிற்சி அத்துடன்/ அல்லது அனுபவச் சான்றிதழ் (எவையேனுமிருப்பின்).

(4) இரு குணநலச் சான்றிதழ்கள். இதில் ஒன்று விண்ணப்பதாரர் கடைசியாகக் கல்வி கற்ற பாடசாலை அதிபரினதாகவும் மற்றையது இரண்டு வருடங்களுக்கு மேலாக விண்ணப்பக்காரரை அறிந்துள்ளவரான பொறுப்புவாய்ந்த ஒருவரினதாக அல்லது தொழில் செய்பவராயின் அப்போதைய தொழில் தருநரினதாக இருத்தல் வேண்டும்.

(5) விளையாட்டுத்துறைகள், பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களைக் காண்பிக்கும்படி வேண்டப்படும் போது அவற்றைக் காண்பிக்கத் தவறியவர்களான தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக் கெடுக்கப்படமாட்டா.

(உ) ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளோ விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு வான்படை பொறுப்பல்ல.

11. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்கு பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவிநீக்கத்திற்கும் விண்ணப்பதாரரை ஆளாக்கிவிடும்.

12. **தேர்ந்தெடுத்தல், நேர்முகப்பரீட்சை முதலியன :**

(அ) மேற்கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் தேர்வுநாடிகளிலிருந்து பூர்வாங்கத் தெரிவுகள் செய்யப்படும். ஒவ்வொரு தேர்ந்தெடுக் கப்படும் தேர்வுநாடிகள் வான்படை ஏவுநரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய சோதனைகளுக்கு உட்படுத்தப்படும்படி தேவைப்படுத் தப்படுவார்கள். இதன் பின்னர் தெரிவுச் சபை ஒன்றினாலான நேர்முகப் பரீட்சையின் பின்னர் இறுதித் தெரிவு நடைபெறும்.

(ஆ) நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவுசெய்யப்படும் தேர்வுநாடிகளுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம், நேரம், திகதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இது சம்பந்தமாகப் பயண அல்லது பிற செலவுகள் வழங்கப்படமாட்டா.

(இ) விண்ணப்பக்காரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும்.

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைகளைத் தொடர்ந்து பொருத்தமாகக்கூடியவரான தேர்வுநாடிகள் வான்படை மருத்துவச் சபைக்கு சமுகமளிக்கும்படி தேவைப்படுத்தப்படுவர்.

(உ) ஒரு தேர்வுநாடியைச் சிபாரிசு செய்ய விரும்புவதாயின் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பதாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஊ) சேர்த்துக்கொள்வதற்குப் பொருத்தமற்றவராகக் காணப்படும் தேர்வுநாடிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப் படமாட்டா.

ஜீ. பி. புலத்சிங்ஹல,
எயர் மார்ஷல்,
வான் படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான் படை,
த. பெ. எண் 594,
கொழும்பு 2.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிரந்தர வான்படை**

பொதுக் கடமை விமான ஓட்டுநர் பிரிவில் பயிலிளவல் அலுவலர் பதவி

1. தேசிய இனம் :----.

(இலங்கைப் பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா, பதிவுமுறையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக) :----.

2. முழுப்பெயர் (தேசிய ஆளடையாள அட்டையிலுள்ளபடி) : ----.

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.

4. நிரந்தர முகவரி :----.

5. தற்போதைய அஞ்சல் முகவரி :----.

6. பிறந்த திகதி :----.

வயது (2016, நவெம்பர் 15 ஆந் திகதியன்று) :-

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

7. உயரம் : ---- அடி, ---- அங்குலம்.

8. நிரந்தர முகவரிக்கு அண்மையிலுள்ள பொலிசு நிலையம் :----.

9. மாவட்டம் :----.

10. தேர்தற் தொகுதி :----.

11. கிராம அலுவலர் பிரிவு :----.

12. தொலைபேசி இலக்கம் :----.

13. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :----.

14. பால் :----.

15. பாடசாலை பற்றிய விபரங்கள் :----.

16. பாடசாலை அத்துடன்/அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :----.

| பாடசாலை/ பல்கலைக்கழ கத்தின் பெயர் | பரீட்சையின் தன்மை | பரீட்சை யின் ஆண்டு | சித்தியடைந்த பாடங்கள் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.)<br>க.பொ.த. (உ.த.)<br>வேறு | | |

17. பாடசாலை/ பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதி லிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

18. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

19. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.

20. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் : ----.
(குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக).

21. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும்பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.

22. இதற்கு முன் ஆயுதப் படையில், தொண்டர் படையில், பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை :----.

23. இலங்கை வான்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்துள் ளீரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக :----.

24. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப் பட்டீரா ? அல்லது பிணையில் விடப்பட்டீரா ? அப்படியாயின் விபரங்கள் தருக :----.

25. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/ சபையில்/ கூட்டுத் தாபனத்தில் (மத்திய வங்கி/ தேசிய வங்கி/ பல்கலைக் கழகங்கள்/ அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.

26. நற்சான்றிதழ்கள் வழங்கியோர் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

27. **விண்ணப்பக்காரரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப் படுத்துகை-**

மேலே என்னால் கொடுக்கப்பட்டுள்ள தரவுகள் யாவும் என் அறிவுக்கும் விசுவாசத்துக்கும் சரியானவை என என் மீது ஆணையாக உறுதிமொழிகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படைக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறைகளையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**28. விண்ணப்பக்காரரின் பெற்றோரால் அல்லது பாதுகாவலரால் கையொப்பமிடவேண்டிய வெளிப் படுத்துகை :**

(அ) இலங்கை வான்படையில் பயிலுனராக விண்ணப்பித்து மேலே கொடுக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் 26 ஆம் சுட்டின் வெளிப்படுத்துகையில் கையொப்ப மிடப்பட்டிருக்கும் ...................... என்பவருக்கு நான் பெற்றோர்/ பாதுகாவலர் ஆவேன்.

(ஆ) மேற்கூறப்பட்டிருக்கும் விண்ணப்பதாரர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுமிடத்து பின்வருவனவற்றுக்கு நான் பொறுப்பாளியாவேன் :-

(1) பயிற்சியின்போது ஆணைக்கான அவரது தேர்வு நாடும் நிலையிலிருந்து தாமாகவே விலகுமிடத்து இலங்கைக் குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவற்றையும் இலங்கைக் குடியரசிற்கு திருப்பிக் கொடுப்பதற்கும்,

(2) பயிற்சியின்போது எச்சமயத்திலும் நடத்தை காரணமாக அல்லது அவரது சொந்த கட்டுப்பாட்டுக் காரணங்களுக்காக ஆணை வழங்கப்படுவதற்குத் தகுதிபெற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை விடப்படுமிடத்து இலங்கைக் குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவும் இலங்கை குடியரசுக்கு திரும்பச் செலுத்துவதற்கும் உடன் படுகிறேன்.

----,
பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
திகதி :----.

----,
முதலாம் சாட்சியின் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
திகதி :----.

----,
இரண்டாம் சாட்சியின் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
திகதி :----.

6-830

## இலங்கை வான்படை

*அரசாணையமர்வு அலுவலர் வெற்றிடங்கள்*

இலங்கை நிரந்தர/ தொண்டர் வான்படையில் ஆண்/ பெண் நேரடி அரசாணையமர்வு அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் கீழ்க்காணும் பிரிவுகளில் உள்ளன :

(அ) தொழில்நுட்ப பொறியியல் பிரிவு
(ஆ) உபகரணப் பிரிவு
(இ) விமானத்தள நிர்மாணப் பிரிவு
(ஈ) வைத்தியப் பிரிவு
(உ) பரிபாலன வைத்தியப் பிரிவு
(ஊ) பல் வைத்தியப் பிரிவு
(எ) பரிபாலன கால்நடை வைத்தியப் பிரிவு
(ஏ) பரிபாலன விவசாயப் பிரிவு
(ஐ) பரிபாலன இசைப் பிரிவு

2. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய விண்ணப்ப தாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

***(அ) தொழில்நுட்ப பொறியியல் பிரிவு.- தொழில்நுட்ப பொறியியல் அதிகாரி - ஆண் (நிரந்தர) :***

*இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் பெற்ற 4 வருட முழுநேர வானூர்தி பொறியியலில் பிஎஸ்சி பட்டச் சான்றிதழ், வானூர்தி பொறியியல் சம்பந்தமாக 2 வருட தொழில் தகைமை, சேவை அனுபவம் இருத்தல் வேண்டும்.

***தொழில்நுட்ப பொறியியல் அலுவலர் (Mechanical/ Automobile) - ஆண் (நிரந்தர) :***

இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற 4 வருட முழுநேர Mechanical/Automobile பொறியியல் பட்டச் சான்றிதழ் இருத்தல் வேண்டும் அல்லது மொரட்டுவ பல்கலைக் கழகத்தில் பெற்ற 3 வருட முழுநேர (NDT) தேசிய தொழில்நுட்பவியலில் டிப்ளோமா இருத்தல் வேண்டும். இலங்கை உயர் தேசிய பொறி யியல் டிப்ளோமா (HNDE) பெற்ற 3 வருட முழுநேர தேசிய தொழில்நுட்பவியலில் டிப்ளோமா இருத்தல் வேண்டும். உயர் தொழில்நுட்பவியல் தொடர்பாக 2 வருட தொழில் தகைமை, சேவை அனுபவம் இருத்தல் வேண்டும்.

(தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பிளைட் லெப்டினன்ட் அல்லது பிளையின் ஒபீசர் நிலையில் நிரந்தர அலுவலராக அவர்களின் தொழில் தகைமை, சேவை அனுபவத்திற்கு அமைவாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.)

***(ஆ) உபகரணப் பிரிவு.- உணவக முகாமையாளர் - ஆண் (நிரந்தர)***

*ஹோட்டல் முகாமைத்துவ டிப்ளோமா பட்டச் சான்றிதழ் அல்லது தேசிய/சர்வதேசத்தில் அங்கீகரிக் கப்பட்ட நிறுவனத்தில் விருந்தோம்பல் உபசரணைக்

கல்வியில் 4 தரத்திலும் முழுநேர அடிப்படை பட்டச் சான்றிதழ் மற்றும் பயிற்சி பெற்றி ருப்பதுடன் நட்சத்திர ஹோட்டலில் போசனசாலையும் உணவு முகாமைத்துவம் சம்பந்தமாக 2 வருட அதிகார அனுபவம் இருத்தல் வேண்டும்.

***ஆடைத் தொழில்நுட்ப பொறியியலாளர் - ஆண் (நிரந்தர)***

*தொழில்நுட்பம் அல்லது பொறியியல் விஞ்ஞானத்தில் பிஎஸ்சி பட்டம் பெற்றிருத்தல், ஆடையணிகள் மற்றும் உடை தொடர்பாக டிப்ளோமா பெற்றிருத்தில் விசேட தகைமையாகக் கருதப்படும். ஆடையணிகள் மற்றும் உடை தொடர்பாக 5 வருட சேவை அனுபவம் மற்றும் 3 வருடம் பயிற்று விப்பாளராக அல்லது அறிவுரையாளராக இருத்தல் ; ஆடையணிகளின் தயாரிப்பு மற்றும் விருத்தி செய்தலில் அனுபவம் இருத்தல் வேண்டும்.

*இலங்கை ஆடை மற்றும் புடவை நிறுவனத்தில் அங்கீகாரம்பெற்ற டிப்ளோமா இருத்தல் வேண்டும். ஆடை மற்றும் புடவை தொடர்பாக 2 வருட சேவை அனுபவம் இருத்தல் வேண்டும்.

(பட்டதாரிக்கு 33 வயதை விடவும் டிப்ளோமா உரியவருக்கு 26 வயதை விடவும் 2016, நவெம்பர் 15 ஆந் திகதியன்று அதிகரிக்காமல் இருத்தல் வேண்டும்.)

(தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பிளைட் லெப்டினன்ட் அல்லது பிளையின் ஒபீசர் நிலையில் நிரந்தர அலுவலராக அவர்களின் தொழில் தகைமை, சேவை அனுபவத்திற்கு அமைவாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.)

(இ) ***விமானத்தள நிர்மாணப் பிரிவு :***

***கட்டிட கலை பொறியியல் அதிகாரி - ஆண் (நிரந்தர/ தொண்டர்) :***

* தற்காலிக ஸ்கொட்ரன் லீடர்.- கட்டிடக் கலை பொறியியல் துறையில் சிவில் பொறியியல்/ இலத்திரனியலில் BSc பட்டம் இருத்தல் வேண்டும். பகுதி அங்கத்துவராக (IE) இலங்கையில் (Charter Qualification).

* ப்ளைட் லெப்டினன்ட்.- சிவில்/ பொறியியல்/ இலத்திரனியலில் BSc பட்டம் இருத்தல் வேண்டும். கட்டிடக் கலை பொறியியல் தொடர்பில் Msc பட்டம் இருத்தல் வேண்டும்.

*சிவில்/ இயந்திரவியல்/ மின்னியல் பொறியியல் அதிகாரி - ஆண் (நிரந்தர/ தொண்டர்) :*

* ப்ளைட் லெப்டினன்ட்.- சிவில்/ இயந்திரவியல்/ மின்னியல் பொறியியலில் BSc பட்டத்துடன் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமைகள் இருத்தல்.

* **ப்ளையிங் ஒபீசர்**.- சிவில்/ இயந்திரவியல்/ மின்னியல் பொறியியலில் NDT/NDES/HNDE அல்லது அதற்குச் சமமான தகைமைகள் இருப்பதுடன் 3 வருட துறைசார்ந்த அனுபவம் இருத்தல் வேண்டும்.

* **ப்ளைட் ஒபீசர்**.- சிவில்/இயந்திரவியல்/மின்னியல் பொறியியலில் NDT/NDES/HNDE அல்லது அதற்குச் சமமான தகைமைகள் இருப்பதுடன் 3 வருட துறைசார்ந்த அனுபவம் இல்லாத விண்ணப்ப தாரிகள் இத்துறைக்கு விண்ணப்பிக்கலாம்.

***நிலஅளவையாளர்*** *- ஆண்/ பெண் (தொண்டர்) :*

* **ப்ளைட் லெப்டினன்ட்**.- மொரட்டுவை பல்கலைக் கழகத்தில் பெற்ற நிலஅளவையாளர் BSc பட்டம் இருத்தல் வேண்டும். அல்லது இலங்கை நிலஅளவையாளர் திணைக்களத்தில் இரண்டு (02) வருட துறைசார்ந்த அனுபவம். பட்டதாரி உறுப்பினராக இருத்தல் வேண்டும். இலங்கை நிலஅளவையாளர் திணைக்களத்தில் மூன்று (03) வருட துறைசார்ந்த அனுபவம். தொழில்நுட்ப உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

*அளவையாளர் - ஆண் (நிரந்தர/ தொண்டர்) :*

* **ப்ளைட் லெப்டினன்ட்**.- சப்ரகமுவ பல்கலைக் கழத்தில் பெற்ற அளவையாளர் BSc பட்டம் இருத்தல் வேண்டும். அல்லது தியத்தலாவை அளவு மற்றும் வரைபட தாபனத்தில் ISM பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

* **ப்ளையின் ஒபீசர்**.- தியத்தலாவை அளவு மற்றும் வரைபட தாபனத்தில் ISM டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும்.

(ஈ) ***வைத்தியப் பிரிவு.- வைத்திய அதிகாரி - ஆண்/ பெண் (நிரந்தர/ தொண்டர்)***

***ப்ளயிட் லெப்டினன்ட்*** - ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்ற MBBS பட்டம் அல்லது அதற்குச் சமனான தகைமைகளுடன் இலங்கை வைத்திய சபையில் பதிவுசெய்திருத்தல் வேண்டும்.

***பயிற்சி பெறும் (Pre-Intern) வைத்தியர் - ஆண்/ பெண் (நிரந்தர)***

MBBS பட்டம் அல்லது அதற்குச் சமனான தகைமைகளுடன் இலங்கை வைத்திய சபையினால் அனுமதிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற (Sri Lanka) அல்லது அதற்குச் சமமான பட்டம், தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் 5 ஆண்டு சேவைக்காலத்திற்குள் ERPM பரீட்சையில் சிததிபெற்று இலங்கை வைத்திய சபையில் அங்கீகாரம் பெறல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு இயலாத விண்ணப்பதாரிகள் (5) வருட சேவைக்குப் பின் நிறுத்தப்படுவார்கள்.

* தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் **ப்ளயின் ஒபீசர்** தரத்தில் அதிகாரியாக சேர்த்துக் கொள்ளப்படுவதோடு ERPM பரீட்சையில் சித்தி யடைந்து இலங்கை வைத்திய சபையின் நிரந்தர சான்றிதழின் பின் **ப்ளயிட் லெப்டினன்ட்** தரத்திற்கு கொண்டுவருவது பற்றி கவனத்தில் கொள்ளப்படும்.

***(உ) பரிபாலன வைத்தியப் பிரிவு.- உளவியலாளர் (Phycologist) - ஆண் (நிரந்தர/தொண்டர்)***

* உளவியல் தொடர்பாக பெற்ற Bsc பட்டம் இருத்தல் வேண்டும். அல்லது உளவியலும் ஒரு பாடமாக பெற்ற Bsc பட்டம் இருத்தல் வேண்டும்.

***(ஊ) பல் வைத்தியப் பிரிவு.- பல் அறுவை மருத்துவர் - ஆண் (நிரந்தர/தொண்டர்)***

*ப்ளயிட் லெப்டினன்ட்* - பிடீஎஸ் அல்லது அதற்குச் சமனான தகைமையுடன் எஸ்எல்எம்சி அங்கீகாரம் பெற்றிருத்தல் வேண்டும்.

***பல் வைத்திய மாணவர் - ஆண் (நிரந்தர)***

*ப்ளையிங் ஒபீசர்* - இறுதி பிடீஎஸ் முதற்கட்டம் முழுமையான பிறகு இறுதி வருடம் BDS பயிலும் மாணவர் இத்துறைக்கு விண்ணப்பிக்கலாம்.

*பைலட் ஒபீசர்* - பிடீஎஸ் 2 ஆவது பகுதியை முடிவுசெய்து 3 ஆம் வருட ஆரம்பத்தில் இருக்கும் மாணவர் இத்துறைக்கு விண்ணப்பிக்கலாம்.

**குறிப்பு**.- தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் ப்ளையிட் லெப்டினன்ட் நிலையில் நிரந்தர அலுவலராக தேர்ந்தெடுக்கப்படுவதோடு அவர்கள் அன்றிலிருந்து பத்து வருடங்கள் கட்டாய சேவையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

*தேர்ந்தெடுக்கப்படும் பல் வைத்திய மாணவர்கள் இறுதி வருடம் முடிவடையும் வரை வான்படையிலிருந்து விடுவிக்கப்படுவார்கள். பல் வைத்திய பிடீஎஸ் பட்டத்தினை முடித்த பின்னும் வைத்திய சபையில் (எஸ்எல்எம்சீ) பதிவாகியதும் அவர்கள் பிளையிட் லெப்டினன்ட் நிலையில் நிரந்தரப்படுத்தப் படுவார்கள்.

*கல்வித் தொழிற்பாடுகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப் படும்.

பல் வைத்திய மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் வருடங்களைக் காட்டக்கூடிய ஆவணங்களை விண்ணப்பத்துடன் அனுப்பி வைக்கவும்.

***(எ) பரிபாலன கால்நடை வைத்தியப் பிரிவு.- கால்நடை வைத்தியர் - ஆண் (நிரந்தர/தொண்டர்)***

*பிலைட் லெப்டினன்ட்.*- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற 4 வருட மிருக வைத்தியராக பிவீஎஸ்சீ பட்டம் பெற்றிருத்தல் அல்லது அதற்குச் சமமான பட்டம் இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டம் இருத்தல் வேண்டும். துறைசார்ந்த அனுபவம் இருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

***(ஏ) பரிபாலன விவசாயப் பிரிவு.- பரிபாலன விவசாய அதிகாரி - ஆண் (நிரந்தர/தொண்டர்)***

*இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விவசாய BSc பட்டம் அல்லது அதற்குச் சமமான தமைகமைகளுடன் இருத்தல் வேண்டும்.

***(ஐ) பரிபாலன இசைப் பிரிவு.- இசைக் கலைஞர் - ஆண் (நிரந்தர)***

*குறைந்தபட்சம் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

*றோயல் கல்லூரியில் அல்லது திரின்ரி கல்லூரியில் தரம் 5 வரை அல்லது அதற்கு மேலும் லண்டன் அல்லது அதற்கு சமனான தகைமை இருத்தல் வேண்டும்.

*இசைக்குழுவில் பயிற்றுவித்தல் மற்றும் இசைக் குழுவின ரோடு இணைந்து செயற்படும் ஆற்றல் மேலும் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சங்கீத பாடத்தில் திறமைச் சித்தி இருப்பின் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

மேலைத்தேய மற்றும் கீழைத்தேய சங்கீத உபகரணங்களைக் கையாளும் ஆற்றல் இருப்பின் விசேட தகைமையாகக் கருதப்படும்.

**3. வேறு தகைமைகள் :**

(அ) *தேசிய இனம்.*- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ஆ) *குடியியல் நிலை.*- விவாகமானவர்/விவாகமாகாதவர்;

(இ) *பால்.*- ஆண்/பெண் (தேவையைப் பொறுத்து)

(ஈ) *வயது.*- 2016, நவெம்பர் 15 ஆந் திகதிக்கு :

(1) தொழில்நுட்ப பொறியியல், உபகரண (உணவக முகாமையாளர்) பல் வைத்திய மாணவர் 18-30 வரை இருத்தல் வேண்டும் ;

(2) விமானத்தள நிர்மாணப் பிரிவு வைத்திய, பரிபாலன வைத்திய, பல் வைத்திய, பரிபாலன கால்நடை, பரிபாலன விவசாய, பரிபாலன இசைப் பிரிவு ஆகியவற்றுக்கு, வயது 18-35 வரை இருத்தல் வேண்டும்.

(உ) *உயரம்.-* ஆண்கள் 5 அடி 6 அங்குலமும் அதற்கு மேலும்

பெண்கள் 5 அடி 4 அங்குலமும் அதற்கு மேலும் ;

(ஊ) *வைத்திய, பல் வைத்திய, பரிபாலன வைத்திய.-* ஆண்கள் 5 அடி 4 அங்குலமும் அதற்கு மேலும் ;

பெண்கள் 5 அடி 3 அங்குலமும் அதற்கு மேலும் ;

(எ) *நிறை.-* 17 <உடற்பருமன் சுட்டி <26 (ஆண்)

17 <உடற்பருமன் சுட்டி <25 (பெண்)

$$\text{உடற்பருமன் சுட்டி (BMI)} = \frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம்}^2 \text{ (மீ)}}$$

(ஏ) *மார்பு.-* ஆண் 32'' (குறைந்தது) ;

(ஐ) *பார்வை வர்ணப் பதிவு மட்டம் .-* CP2

(ஒ) *தொலைப்பார்வை.-* இரண்டு கண்களிலும் 6/ 6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்) வைத்திய, பரிபாலன வைத்திய, பல் வைத்தியப் பிரிவுக்கு (மூக்குக் கண்ணாடியுடன் 6/ 18 அல்லது மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்).

4. தேவையான உயரம், நிறை முதலியவை இல்லா திருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்திற் கொள்ளப்படும்.

5. வான்படை ஆளுனரால் நியமிக்கப்படும் வைத்திய பரீட்சையில் தேர்ச்சி பெறக்கூடிய தேகாரோக்கியம் உடையவ ராயிருத்தல் வேண்டும்.

6. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள அதியுயர் சாதனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

7. **அரச கரும மொழித் தேவைப்பாடுகள்.-** தேர்ந்தெடுக் கப்பட்ட தேர்வுநாடிகள் இலங்கைக் குடியரசின் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன் பின்னர் ஆக்கப் பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

8. தகைமைகளையும் அனுபவத்தையும் பொறுத்து தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை வான்படையில் நிரந்தர/ தொண்டர் Pilot Officer/Flying Officer/ Flight Lieutenant/Squadron Leader தரத்தில் ஆணைபெற்ற பதவி வழங்கப்படும்.

9. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை தளபதியால் தீர்மானிக்கப்படும் காலங்களில் பயிற்சி பெறுவதற்கு தேவைப்படுத்தப்படுவார்கள். பயிற்சிக் காலங்களில் துர்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குள் உள்ள காரணங்களுக்காக அவர் தகுதியற்றவர் என எந்த நேரத்திலும் அதிகாரிகளினால் முறைப்பாடு செய்யப்பட்டால் அவருக்களிக்கப்பெற்ற ஆணை மீளப்பெறுவதற்கு அவர் ஆளாதல் வேண்டும். அத்துடன் அல்லது இலங்கை வான்படை ஒழுக்காற்று ஒழுங்குவிதிகளுக்கிணங்க வேறு ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

10. வான்படை அலுவலர்கள் வான்படைச் சட்டத்தினாலும் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் கட்டளைகளினாலும் ஆளப்படுகிறார்கள்.

11. இலங்கை வான்படை ஆணைபெற்ற அலுவலர் ஒருவரின் சேவை நிபந்தனைகள் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1951 ஆம் ஆண்டு ஏப்பிறல் 27 ஆந் திகதிய 10,240 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை வான்படை (நிரந்தர அத்துடன் நிரந்தர உப சேவை) ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி அலுவலர் ஒருவருக்கு பைலற் ஒபிசர் அல்லது ஏற்புடைத்தாயின் அதைவிட உயர்ந்த தரத்தில் நிரந்தர ஆணைபெற்ற பதவி வழங்கப்படும். வான்படைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் நியதிகளின்படி "அலுவலர் ஒவ்வொருவரும் சனாதிபதி விரும்பும் வரைக்குமே தமது நியமனத்தை வைத்திருத்தல் வேண்டும்." ஆயின் ஒருதலைப்பட்சமாக தமது ஆணைபெற்ற பதவியிலிருந்து விலகுவதற்கான உரிமை எதுவும் அலுவலர் ஒருவருக்குக் கிடையாது. ஆனால் வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அலுவலர் பதவியிலிருந்து விலகுவது சனாதிபதியினால் அனுமதியளிக்கப்படலாம். பயிற்சி மற்றும் அதைத் தொடர்ந்த கற்கைநெறிகள் தொடர்பிலான கட்டாய சேவைக்காலத்தைக் குறிக்கின்ற ஏதேனும் உடன்படிக்கை செய்திருப்பின் மேலே கூறப்பட்ட வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அனுமதிக்கப்படமாட்டா. வான்படையிலிருந்து ஓய்வு பெறுவது வான்படை ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள் சட்டக் கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்கீழ் 10 ஆண்டுகள் சேவைக்குப்பின் ஏற்புடையதாகும்.

12. அலுவலர் ஒருவர் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக எந்த நேரத்திலும் உலகத்தின் எப்பாகத்திற்கும் அனுப்பப் படுவதற்கு ஆளாவர்.

13. திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

14. திருமணமான அலுவலர் ஒருவருக்கு கிடைக்கக்கூடிய தாக இருந்தால் விவாகமானவர்களுக்கான மனை ஒன்று வழங்கப்படும். வாடகை அறவிடுதல் பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தானவாறு இருக்கும். விவாகமானவர்களுக்கான மனைகளில் வசிக்காத விவாகமான அலுவலர்கள் 15 (ஈ) (17) ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான வாடகைப்படிக்கு உரித்துடையவர்களாவார்கள்.

15. (அ) இலங்கை வான்படையில் ஆணைபெற்ற அலுவலர்களுக்கான சம்பளம் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு) :-

| | |
|---|---|
| *பைலட் ஒபீசர்* | - ரூபா 2,42,700 |
| *ப்ளையிங் ஒபீசர்* | - ரூபா 2,75,220-34 X 7,740 = ரூபா 5,38,380 |
| *ப்ளைற் லெப்டினனட்* | - ரூபா 3,21,660-28 X 7,740 = ரூபா 5,38,380 |
| *ஸ்குவாட்ரன் லீடர்* | - ரூபா 3,52,620-24 X 7,740 = ரூபா 5,38,380 |
| *விங் கமாண்டர்* | - ரூபா 3,62,100-20 X 9480 = ரூபா 5,51,700 |
| *குறூப் கப்ரன்-* | - ரூபா 4,41,060-18 X 12,600 = ரூபா 6,67,860 |

(ஆ) வைத்திய அதிகாரிகளுக்கான கொடுப்பனவுகள் மாதமொன்றுக்கு :

| | |
|---|---|
| *ஆரம்பப் பிரிவு* | - ரூபா 3,13,920-2 X 7,740 = ரூபா 3,29,400 |
| *தரம் II* | - ரூபா 3,37,140-8 X 7,800 = ரூபா 4,52,940 |
| *தரம் I* | - ரூபா 4,12,140-15 X 12,600 = ரூபா 6,01,140 |
| *விசேட பிரிவு* | - ரூபா 5,08,680-12 X 15,720 = ரூபா 6,97,320 |

(இ) பல் வைத்திய அதிகாரிகளுக்கான கொடுப்பனவுகள் மாதமொன்றுக்கு :

| | |
|---|---|
| *ஆரம்பப் பிரிவு* | - ரூபா 3,06,180-3 X 7,740 = ரூபா 3,29,400 |
| *தரம் II* | - ரூபா 3,37,140-8 X 7,800 = ரூபா 3,99,540 |
| *தரம் I* | - ரூபா 4,12,140-15 X 12,600 = ரூபா 6,01,140 |
| *பல் வைத்திய நிபுணர்* | - ரூபா 5,08,680-12 X 15,720 = ரூபா 6,97,320 |

(ஈ) வைத்திய/பல் வைத்திய அதிகாரிகளுக்கான வேறு கொடுப்பனவுகள் :

(1) ஓய்வூதியக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு :

| | |
|---|---|
| *ஆரம்பப் பிரிவு* | - ரூபா 1,700 |
| *தரம் II* | - ரூபா 1,700 |
| *தரம் I* | - ரூபா 3,400 |
| *விசேட பிரிவு* | - ரூபா 3,400 |

(2) ஓய்வூதியம் அல்லாத கொடுப்பனவு மாதமொன்றுக்கு :

| | |
|---|---|
| *ஆரம்பப் பிரிவு* | - ரூபா 2,125 |
| *தரம் II* | - ரூபா 1,700 |
| *தரம் I* | - ரூபா 400 |

(3) நட்ட கொடுப்பனவு மாதமொன்றுக்கு - ரூபா 35,000

(4) மேலதிக வேலை கொடுப்பனவு மணித்தியாலத்துக்கு :

| | |
|---|---|
| *ஆரம்பப் பிரிவு* | - ரூபா 335 |
| *தரம் II* | - ரூபா 383 |
| *தரம் I* | - ரூபா 528 |
| *விசேட பிரிவு* | - ரூபா 628 |

(5) மொழித் திறமை கொடுப்பனவு மணித்தியாலத்துக்கு :

| | |
|---|---|
| *ஆரம்பப் பிரிவு* | - ரூபா 795 |
| *தரம் II* | - ரூபா 800 |
| *தரம் I* | - ரூபா 1,200 |
| *விசேட பிரிவு* | - ரூபா 1,450 |

(6) தேவையைப் பொருத்து பந்தி 15 (உ) உள்ள சேவை கொடுப்பனவு வழங்கப்படும்.

(உ) *சேவைக் கொடுப்பனவுகள் :*

(1) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா 7,800 ;

(2) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250 வீதம் ;

(3) கடினப்படி மாதமொன்றுக்கு ஒவ்வொரு நாட்களுக்கும் 20 ரூபா வீதம் ;

(4) விசேட கொடுப்பனவு யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 4,380 ;

(5) விசேட கொடுப்பனவு ரூபா 3,000 (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 100 வீதம்) ;

(6) மேலதிகக் கொடுப்பனவு (மாதமொன்றுக்கு 1,000) ;

(7) சீருடை பேணுதல் படி (மாதமொன்றுக்கு ரூபா 255) ;

(8) சேவையாளர் படி : மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;

(9) உணவுப்படி மாதமொன்றுக்கு ரூபா 16,138.20 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால் ஒவ்வொரு நாட்களுக்கும் 537.94 ரூபா வீதம்) ;

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை) ;

(11) மேலதிகக் கொடுப்பனவு.- அடிப்படைச் சம்பளத்தில் 20% ;

(12) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும், மனைவிக்கும், பிள்ளைகளுக்கும்) ;

(13) அதிகாரி விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப் பத்திரம் அல்லது வசு வண்டிக் கட்டணச் செலவு மீளளிப்பு ;

(14) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும் ;

(15) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடைத்தாயின் குடும்பத்தினருக்கும்) ;

(16) திருமணமான அலுவலருக்கு (வெளியிலிருந்து வசிக்க அனுமதிபெற்றிருந்தால்) மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து 30 மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ. போ. ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும்.

(17) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் (பைலற் ஆபீசர் இலிருந்து குறூப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு 1,600 ரூபாவிலிருந்து 4,250 ரூபா வரை) வாடகைப்படிகள் கொடுபடற் பாலனவாகும்.

(18) சேவைக் கொடுப்பனவு ரூபா 300, ரூபா 400, ரூபா 500. (பல் வைத்தியர்களுக்கு முடிவுற்ற சேவைக் காலத்தைப் பொறுத்து).

(19) மேலதிக கொடுப்பனவு ரூபா 1,500 (வைத்திய, பல் வைத்தியர்களுக்கு மாத்திரம்).

(20) 1/20 கொடுப்பனவு, மாதமொன்றுக்கு - அடிப்படைச் சம்பளம் x 1/20 x 3 நாட்கள் மட்டும். (வைத்திய, பல் வைத்தியர்களுக்கு மாத்திரம்).

(21) மேலதிக கொடுப்பனவு 120 மணித்தியாலம்- ஒரு மாதத்திற்கு (வைத்திய, பல் வைத்தியர்களுக்கு மாத்திரம்).

(22) வரவு செலவுத் திட்டத்தின்படி ரூபா 10,000 மாதாந்தம்.

(23) தொலைபேசிக் கொடுப்பனவு மாதாந்தம் -

| | |
|---|---|
| விங் கமாண்டர் | - ரூபா 2,000 |
| குறூப் கப்ரன் | - ரூபா 4,000 |
| விசேட வைத்தியர் | - ரூபா 7,000 |
| வைத்தியர் | - ரூபா 4,000 |

(24) பொறியியல் அதிகாரிகளுக்கான கொடுப்பனவு மாதாந்தம்15,000 ரூபா (பொறியியல் அதிகாரிகளுக்கு மாத்திரம்).

(25) கால்நடை வைத்திய அதிகாரிகளுக்கான கொடுப்பனவு மாதாந்தம் 7,500 ரூபா (கால்நடை பல் வைத்திய அதிகாரிகளுக்கு மாத்திரம்).

16. ஓய்வூதியங்கள்/ பணிக்கொடுப்பனவுகள் என்பன காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச் சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படுமாகும். வான்படை அலுவலர் அனைவரும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர் களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

17. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்**.- (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2016, யூன் 30 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணிக்கு முன் "பிரதான ஆட்சேர்ப்பு அதிகாரி, தொழிற்துறை பாடசாலை, இலங்கை விமானப்படை, ஏக்கலை, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத் தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "அரசாணையமர்வு அலுவலர்களுக்கான விண்ணப்பம் ..................... பிரிவு" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை, வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில் /கூட்டுத்தாபனத்தில்/சபையில்/ குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பகாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் /சபையின்/குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பகாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றித ழொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை அனுப்புதல் வேண்டும் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் ;

(2) விண்ணப்பித்த பிரிவுக்கு தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ் ;

(3) விண்ணப்பதாரரை நன்கு அறிந்தவரான பொறுப்பு வாய்ந்த இருவரிடம் இருந்து அண்மையில் பெற்ற இரு குணநலச் சான்றிதழ்கள் ;

(4) விளையாட்டுத்துறைகள் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள்.

(5) விண்ணப்பத்தாரருக்கு உரித்தான வேறு சான்றி தழ்கள்.

* **குறிப்பு**.- சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் விண்ணப்ப தாரிகள் முதலாம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படும்பொழுது கட்டாயமாக வைத்திருத்தல் வேண்டும்.

18. விண்ணப்பத்தில் கூற்று எதுவும் பிழையானதெனக் காணப்படுமிடத்து, தெரிவுசெய்யப்படுமுன் கண்டுபிடிக்கப்

பட்டால் விண்ணப்பகாரரைத் தகைமையற்றவராக்கும். அத்துடன் தெரிவு செய்யப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

19. **தெரிவுசெய்தல் நேர்முகப்பரீட்சை முதலியன**.- (அ) மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனையைப் பூர்த்தி செய்பவர்களுள் இருந்து மட்டும் முதனிலை நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஏவுநரின் பணிப்பிற் கிணங்க வைத்திய சோதனைக்கு உட்படுத்தப்படுவர். இதில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட தெரிவுச்சபையொன்றினால் இறுதித் தேர்வு நடாத்தப்படும்.

(ஆ) நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் இறுதி தெரிவு செய்யப்படும் நபர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்படும் இடம், நேரம், திகதி ஆகியன பற்றி எழுத்தில் அறிவிக்கப்படும். இது தொடர்பாக எதுவித பயணச் செலவோ அல்லது வேறு செலவோ வழங்கப்பட மாட்டா.

(இ) விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும் ;

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்ட விண் ணப்பதாரிகள் வைத்திய சபையொன்றினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் ;

(உ) ஒரு தேர்வுநாடியைச் சிபார்சு செய்ய விரும்புவோர் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பகாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஊ) நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

ஜீ. பி. புலத்சிங்ஹல,
எயார் மார்ஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு 2.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிரந்தர/ தொண்டர் வான்படையில்**
**................. பிரிவில் அரசாணை பெற்ற அலுவலர் பதவி**

1. தேசிய இனம் :----.
(இலங்கைப் பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா பதிவுமுறையாயின் சான்றிதழின் இலக்கமும் திகதியும் குறிப்பிடுக.)

2. முழுப்பெயர் :----.
(தேசிய ஆளடையாள அட்டையில் உள்ளவாறு)

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.

4. விண்ணப்பிக்கும் துறை :----.

5. விண்ணப்பிக்கும் பிரிவு :----.

6. நிரந்தர முகவரி :----.

7. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிசு நிலையம் :----.

8. பாடசாலை பற்றிய விபரங்கள் :----.

9. அஞ்சல் முகவரி :----.

10. E-Mail (மின்-அஞ்சல்) முகவரி :----.

11. பிறந்த திகதி :----.

12. உயரம் :----.

13. மாவட்டம் :----.

14. தேர்தற் தொகுதி :----.

15. கிராம அலுவலர் பிரிவு :----.

16. தொலைபேசி இலக்கம் :----.

17. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :----.

18. பாடசாலை அத்துடன்/அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :----.

| பாடசாலை/ பல்கலைக் கழகத்தின் பெயர் | பரீட்சை | ஆண்டு | பொதுப் பாடசாலை களும் சித்தி யடைந்த பாடங்களும் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.)<br>க.பொ.த. (உ.த.)<br>தொழில் தகைமைகள்<br>வேறு | | |

19. பாடசாலை/ பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதி லிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

20. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

21. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் : ----.

22. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் : ----.
(குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக) :----.

23. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும்பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.

24. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை :----.

25. இலங்கை வான்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தீரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பெறுபேற்றினையும் தருக :----.

26. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப் பட்டவராயின் அல்லது பிணையில் விடப்பட்ட வராயின் விபரங்கள் தருக :----.

27. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/ சபையில்/ கூட்டுத் தாபனத்தில் (மத்திய வங்கி/ தேசிய வங்கி/ பல்கலைக் கழகங்கள்/ அரசாங்கத்தின் கட்டுப் பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.

28. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

29. **விண்ணப்பதாரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப் படுத்துகை.**- மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் என் அறிவிற்கும் விசுவாசத்துக்கும் சரியானவை என என் மீது ஆணையாக உறுதிமொழிகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படையினருக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

30. தயவுசெய்து பின்வருவனவற்றை இணைக்கவும் :
தொழில் தகைமை ;
கல்வித் தகைமை.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

12-831

---

**இலங்கை வான்படை**

வான்படை நிரந்தர வீரர்/ வீராங்கனைகளுக்கான தொண்டர் வீரர்களுக்கான வெற்றிடங்கள் மற்றும் தொண்டர் வீரர்/ தொண்டர் வீராங்கனைகளுக்கான நேரடி ஆட்சேர்ப்புக்கான வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர வான்படையில் கீழே தரப்பட்டுள்ள தொழில் துறைகளில் வான்படை வீரர்/ வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள் கோரப்பட்டுள்ளன :

1. (அ) தொழில் துறையும் தேவைப்படும் கல்வித் தகைமைகளும் :

(அ) வழங்குநர் உதவியாளர் - (ஆண்) :

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் சித்தியும், கணிதம்/ விஞ்ஞானம்/ வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒன்றில் திறைமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் கணினி அனுபவம் இருத்தல் விசேட தகைமையாகக் கருதப்படும்.

(ஆ) போசனசாலை மேற்பார்வையாளர் (ஆண்/பெண்).- க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் ஆங்கில மொழியில் சித்தியும் அல்லது ஆங்கில மொழி சரளமாகப் பேசும் திறமை இருப்பின் ஆட்சேர்ப்பின்போது முதலுரிமை வழங்கப்படும். சுற்றுலா துறையில் அனுமதிபெற்ற ஹோட்டல்களில் பெற்ற அனுபவம் துறைசார்ந்த தகைமை இருப்பின் ஆட்சேர்ப்பின்போது முதலுரிமை வழங்கப்படும். Waiter/Barman/House Keeper/Room Boy/ Room Attendance/ Room Steward (மேலதிகமாக உயர் பயிற்சிக்கு இலங்கை வான்படையில் இணைந்தவுடன் பிரசித்திபெற்ற ஹோட்டல்களில் வழங்கப்படும்.)

(இ) உணவக மேற்பார்வையாளர் (ஆண்).- க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள். ஆங்கில மொழியில் சித்தி இருத்தல் விசேட தகைமையாகக் கருதப்படும்.

கீழ்தரப்பட்ட தொழில்களுக்கான நேரடி நுழைவாக இலங்கை வான்படையின் தொண்டர் படைக்கான வீரர்/ வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள் :

3. (அ) தொழில் துறையும் தேவைப்படும் கல்வித் தகைமையும் :

(1) சிவில் பொறியியல் துறை (ஆண்) :

(அ) கட்டுமாண உபகரண இயந்திரவியலாளர்
(ஆ) தச்சன்
(இ) கட்டுமான உதவியாளர்
(ஈ) காய்ச்சி பொருத்தும் உதவியாளர்
(உ) மின்சார வேலையாளர்
(ஊ) இயந்திர தொழில்நுட்பவியலாளர்
(எ) நீர் வழங்குநர்
(ஏ) வளிசீராச்சி தொழில்நுட்பவியலாளர்

குறைந்தபட்சம் தரம் 8 இல் (9 ஆம் ஆண்டு) சித்திபெற்றிருத்தல். குறிப்பிட்ட துறையில் 3 மாதத்திற்குக் குறையாத கற்கைநெறி முடித்திருத்தல் வேண்டும் அல்லது குறிப்பிட்ட துறையில் 1 வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருக்கும் வகையில் சான்றிதழ் இருத்தல் வேண்டும்.

கட்டுமான உதவியாளர் துறை தொடர்பாக கட்டுமான துறையில் உபகரணங்களைச் சீரமைத்தல், பழுதுபார்த்தல், கட்டுமானத்திற்குப் பயன்படும் ஜெனரேட்டர், தண்ணீர் மோட்டர் மற்றும் கொங்கிரீட் இயந்திரத்தை சீராக்கல் போன்ற அனுபவம் இருப்பவர்கள் விண்ணப்பிக்கலாம்.

இலங்கை நிரந்தர விமானப்படை நிரந்தர வீரர்/ வீராங்கனைகளுக்கான நேரடி ஆட்சேர்ப்புக்கான வெற்றிடங்கள் :

(அ) தொழில் துறையும் தேவைப்படும் கல்வித் தகைமை மற்றும் தொழில் தகைமையும் :

(1) சிவில் பொறியியல் துறை :

(அ) நிலஅளவையாளர் (ஆண்/ பெண்).- தேசிய தொழில்நுட்பக் கல்லூரியில் அளவையியலில் (NCT/ QS) ஒரு வருட முழுநேரக் கற்கைநெறி அல்லது மூன்று வருட பகுதி நேர கற்கை நெறி சித்திபெற்ற சான்றிதழ் இருப்பவர்களில் முன்னணி விமான வீரர் தரத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். ரசீது தயாரிப்பு, டென்டர் ஆவணம் தயாரிப்பு, கண்ட்ரெக் ரசீது தயாரிப்பு குறிப்பிட்ட துறையில் 3 வருட அனுபவம் இருப்பின் கோப்ரல் தரத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

(ஆ) பொறிமுறை வரைதிறன் (ஆண்/பெண்).- தேசிய தொழில்நுட்ப கல்லூரியில் பொறிமுறை வரைதிறன் (National Engineering Draughtsmanship) ஒரு வருட முழுநேரக் கற்கைநெறி சித்திபெற்ற சான்றிதழ் இருப்பவர்களில் முன்னணி விமான வீரர் தரத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். குறிப்பிட்ட துறையில் 3 வருட அனுபவம் இருப்பின் கோப்ரல் தரத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

(இ) போர்மன் (Foreman) சிவில்/ இலத்திரனியல்/ பொறியியல் - ஆண்).- தேசிய தொழில்நுட்பக் கல்லூரியில் NCT (Civil/Electrical/Mechanical/Engineering) ஒரு வருட முழுநேரக் கற்கைநெறி அல்லது மூன்று வருட பகுதி நேர அரச அல்லது தனியார் நிறுவனங்களில் கற்கைநெறி தொடர்பாக சித்திபெற்ற சான்றிதழ் இருப்பவர்களில் முன்னணி விமான வீரர் தரத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். குறிப்பிட்ட துறையில் 3 வருட அனுபவம் இருப்பின் கோப்ரல் தரத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

4. **வேறு தகைமைகள் :**

இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொதுத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(1) *தேசிய இனம்.-* ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(2) *வயது* (2016, யூலை 15 ஆந் திகதியன்று) ஆண் - 18-23 வரை இருத்தல் வேண்டும் (நிரந்தர) ;
பெண் - 18-22 வரை இருத்தல் வேண்டும் (நிரந்தர).

சிவில் பொறியியல் துறை - 18-35 வரை இருத்தல் வேண்டும் (தொண்டர்) ;
18-25 வரை இருத்தல் வேண்டும் (தொண்டர்).

(3) *உயரம்.-* ஆண் 5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும் ;
பெண் 5 அடி 3 அங்குலமும் அதற்கு மேலும்.

சிவில் பொறியியல் துறை 5 அடி அதற்கு மேலும் (நிரந்தர-ஆண்/பெண்)

(4) *உடல் நிறை.-* ஆண் 17 <உடற்பருமன் சுட்டி (BMI) <26
பெண் 17 <உடற்பருமன் சுட்டி (BMI) <25

$$\text{உடற்பருமன் சுட்டி (BMI)} = \frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம்}^2 \text{ (மீ)}}$$

(5) *பார்வை வர்ணப் பதிவு மட்டம் .-* CP2 ;

(6) *தொலைப்பார்வை.-* இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்) சிவில் பொறியியல் துறை இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக்கண்ணாடி உடன்/மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்) ;

(7) குடியியல் நிலை :

(அ) நிரந்தர வான்படை வீரர்/நிரந்தர வான்படை வீராங்கனை விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும் (வான்படையில் இணைந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியடைவதுடன் தொழில் பயிற்சியைப் பூர்த்திசெய்து ஓராண்டு கழிந்த பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்).

(ஆ) தொண்டர் வான்படையில் இணைந்து ஓராண்டு பூர்த்தியடைவதுடன் தொழில் பயிற்சியைப் பூர்த்திசெய்து ஓராண்டு கழிந்த பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்).

(இ) நேரடி வான்படையில் இணையும் வான்படை வீரர்/வான்படை வீராங்கனைகள் தமது அடிப்படைப் பயிற்சியைப் பூர்த்திசெய்து பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்).

5. பந்தி 1அ, 2அ, 3 இல் உள்ள தேவைப்பாடுகளை அல்லது கல்வித் திறமைகளை நிறைவுசெய்யாதவர்களுமான விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்படுவர். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், நிறை, கண் பார்வை பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உடற்தகைமை மட்டத்தைக் கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள். தேவையான உயரம், நிறை, கண் பார்வை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

6. விளையாட்டுத்துறையில் சிறந்த சாதனைகள் இருப்பின் கவனத்திற்கொள்ளப்படும்.

7. **சேவை நிபந்தனைகள் :**

(அ) வான்படை வீரர்/வீராங்கனைகள் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து வான்படை சட்டத்திற்கும் ஏனைய வான்படை ஒழுங்குவிதிகளுக்கும் வேறு கட்டளைகளுக்கும் உட்பட்டவர்களாவர்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் தொழில் துறைக்குரிய நிரந்தர வான்படை வீரர்/நிரந்தர வீராங்கனைகள் அடிப்படைப் பயிற்சியும் அதன்பின் தொழில்துறைப் பயிற்சியும் வழங்கப்படுவதுடன், நிரந்தர வான்படை வீரர்களுக்கு அடிப்படை பயிற்சியும் வழங்கிய பின் அவர்கள் (நிரந்தர) இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும், மிகக் கஷ்டமான நிலைமையிலும் இரவு பகலாக தமது தாய்நாட்டுக்குள் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்ற ஆயத்தமாதல் வேண்டும்.

(இ) தெரிவுசெய்யப்படும் தொழில் துறைக்குரிய தொண்டர் வான்படை வீரர்/தொண்டர் வீராங்கனைகள் அடிப்படைப் பயிற்சியும் வழங்கப்படுவதுடன், தொண்டர் வான்படை வீரர்கள் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும் மிகக் கஷ்டமான நிலைமையிலும் இரவு பகலாக தமது தாய்நாட்டுக்குள் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்ற ஆயத்தமாதல் வேண்டும்.

8. **தொழிலில் அமர்த்தப்படுதல் பற்றிய நிபந்தனைகள்** :

(அ) நிரந்தர வான்படை வீரர்/ வீராங்கனைகள் தொடர்பாக :
தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நிரந்தர வான்படையில் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 12 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். அதில் தொடர்ச்சியாக 8 ஆண்டுகள் சேவையாற்றுமாறு உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ளுமாறு கேட்டுகப்படுவார்கள். மேலும், 8 ஆண்டுகள் பூர்த்தியானதும் அதிலிருந்து இன்னும் 4 ஆண்டுகள் மீண்டும் நிரந்தர உப சேவையில் சேவையாற்றுதலானது, மீண்டும் அழைக்கப்படும் போது சமுகமளிக்க வேண்டும். 8 ஆண்டுகள் கழிந்த பின் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

(ஆ) தொண்டர் வான்படை வீரர்/ தொண்டர் வீராங்கனைகள் தொடர்பாக :
தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தொண்டர் வான்படையில் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 5 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். 5 ஆண்டுகள் கழிந்த பின் வான்படை தளபதியின் அனுமதியுடன் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

(இ) நேரடி ஆட்சேர்ப்பில் இணையும் தொண்டர் வான்படை வீரர்/ தொண்டர் வீராங்கனைகள் தொடர்பாக :
தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தொண்டர் வான்படையில் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 5 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். 5 ஆண்டுகள் கழிந்த பின் வான்படை தளபதியின் அனுமதியுடன் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

9. **அரச கரும மொழித் தேவைப்பாடுகள்**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கை அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கைக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

10. **சம்பளமும் கொடுப்பனவுகளும்** :

(அ) தற்போதிலிருந்து 2020 ஆம் வருடத்திற்கான வான்படை வீரர்களுக்கு ஏற்புடையதாக அடிப்படைச் சம்பள விகிதங்கள் பின்வருமாறு அமையும் :

| வருடம் நிலை | 2016 வருடத் திற்கான | 2017 வருடத் திற்கான | 2018 வருடத் திற்கான | 2019 வருடத் திற்கான | 2020 வருடத் திற்கான |
|---|---|---|---|---|---|
| விமான வீரன் | 2,07,984 | 2,44,608 | 2,81,232 | 3,17,856 | 3,54,480 (7X300-19X370) |
| முன்னணி விமான வீரன் | 2,14,320 | 2,52,060 | 2,89,800 | 3,27,540 | 3,65,280 (4X300-19X370) |
| கோப்ரல் | 2,20,656 | 2,59,512 | 2,98,368 | 3,37,224 | 3,76,080 (1X300-10X370-9X495) |
| சார்ஜன்ட் | 2,27,808 | 2,67,996 | 3,08,184. | 3,48,372 | 3,88,560 (3X370-9X495-3X660) |
| பிளைட் சார்ஜன்ட் | 2,32,848 | 2,73,996 | 3,15,144 | 3,56,292 | 3,97,440 (1X370-9X495-3X660) |
| அதிகாரம்பெற்ற அலுவலர் | 2,42,352 | 2,85,204 | 3,28,056 | 3,70,908 | 4,13,760 (7X495-14X660) |
| பிரதான அதிகாரம்பெற்ற அலுவலர் | 2,71,452 | 3,19,404 | 3,67,356 | 4,15,308 | 4,63,260 (13X660) |

(ஆ) வேறு கொடுப்பனவுகள் :

(1) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா 7,800 ;

(2) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு.- சேவைக்காலம் ஐந்து வருடம் பூர்த்தியடைந்த பின் இக்கொடுப்பனவு வழங்கப்படும் (மாதமொன்றுக்கு 250 ரூபா) ;

(3) கடினப்படி நாளொன்றுக்கு ரூபா 20 ;

(4) கஷ்டப் பிரதேசங்களில் சேவை புரிபவர்களுக்கு மேலதிகமாக மாதமொன்றுக்கு ரூபா 3,880 வழங்கப் படும் ;

(5) விசேட கொடுப்பனவு I.- விசேட கொடுப்பனவு மாதமொன்றுக்கு 2,400 ரூபா வழங்கப்படும். (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் 80 ரூபா வீதம்) ;

(6) மேலதிகக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு 1,000 ரூபா ;

(7) சீருடை கொடுப்பனவு மாதமொன்றுக்கு 170 ரூபா வழங்கப்படும்) ;

(8) உணவு கொடுப்பனவு.- வெளியில் தங்கும் வான்படை வீரர் /வான்படை வீராங்கனை மாதமொன்றுக்கு ரூபா 14,213.70 (ஒவ்வொறு நாட்களுக்கும் ரூபா 473.79 வீதம்) ;

(9) தகைமைச் சம்பளம்.- விசேட பயிற்சி நெறியில் தகைமை பெற்றவர்களுக்கு அல்லது வான்படைச் சேவைக்கு விசேட பெறுமதிவாய்ந்த தகைமை கொண்டிருப்பவர்களுக்கு இத் தகைமைச் சம்பளம் வழங்கப்படும். மாதமொன்றுக்கு ஆகக்கூடிய தொகை ரூபா 637.50 வழங்கப்படும் ;

(10) பிரயாணம்.- ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரத பயணச்சீட்டுகள் (வீரர் / வீராங்கனைக்கும் கணவருக்கும் பிள்ளைகளுக்கும்). உள்ளே தங்கியிருக்கும் வான்படை வீரர்களுக்கு மாதமொருதடவை சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு பஸ் வண்டிக் கட்டணம் செலவின மீளளிப்பு ;

(11) மருத்துவம் வான்படையின் செலவில் வான்படை வீரர்களுக்கும் திருமணமாயின் அவர்களது குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படும் ;

(12) வெளியில் தங்கியிருப்பவர்களும் வேலைத்தலத்திலிருந்து 30 மைல் (கீ.மீ 48) சுற்றுவட்டத்தில் வாழ்பவர்களுமான வான்படை வீரர்களுக்கு இ.போ.ச. பேருந்து வண்டிகளில் வேலைக்கென இலவசமாக பிரயாணச் சீட்டு வழங்கப்படும் ;

(13) விவாகமான வான்படை வீரர்களுக்கு அரசாங்கத்திற்குரிய விவாகமானவர்களுக்கான விடுதியில் குடியிராவிடில் மாதமொன்றுக்கு சார்ஜன் நிலையின் கீழ் ரூபா 1200.00 இருந்து 2750.00 வரை பிலைட் சார்ஜன் நிலையின் இருந்து ரூபா 1,350 இல் இருந்து 3,300 வரை வாடகைப் படியொன்றுக்கு உரித்துடையவராவர் ;

இலவச சீருடை மற்றும் பொருட்களும்

(14) தங்குமிட வசதி.- உள்ளேதங்கும் வான்படை வீரர்களுக்கு இலவசம் ;

(15) கலவரகாலப்படி.- நிரந்தரமான நிலையங்களுக்கு வெளியே கடமைக்குச் செல்லும்போது இக்கொடுப்பனவு வழங்கப்படும் (விவாகமானவர்/ விவாகமாகாதவர் என்பதற்கிணங்க கொடுப்பனவு வேறுபடும்) ;

(16) நன்னடத்தைப் பதக்கம் சம்பளம் மிக உயர்ந்த தரத்திலான நடத்தையும் பொது ஒழுக்கமும் கொண்ட ஆளணியினருக்கு மாதமொன்றுக்கு ரூபா 30.00 இருந்து ரூபா 511.00 வரை வழங்கப்படும் ;

(17) மீள அமர்த்தலுக்கான சம்பளம் மீள அமர்த்துப்பட்ட காலப்பகுதியின்போது மாதமொன்றுக்கு ஆளணியினர் 300.00 ரூபாவுக்கு உரித்துடையவராவர் ;

(18) விரிவுரையாளர் கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 425.00 இருந்து ரூபா 510.00 வரை கொடுப்பனவுக்கு உரித்துடையவராவர் ;

(19) வேறு கொடுப்பனவுகள் (பிரிந்திருத்தல் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்றுதல்).- இலங்கை வான்படை சம்பள சட்டதிட்டங்களுக்கு அமைய இக்கொடுப்பனவு வழங்கப்படும் ;

(20) ஓய்வூதியங்கள்/ பணிக்கொடுப்பனவு என்பன காலத்துக்கு காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச்சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படும். வான்படை வீரர்கள் அனைவரும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகளஅனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

10. **விண்ணப்பதாரர்கான அறிவுறுத்துதல்கள் :**

(அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும்.

(ஆ) அரசாங்க சேவையில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில்/ குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பக்காரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின்/சபையின்/குடியியல்தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள் விண்ணப்பகாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதலொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பக்காரர்கள் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படும் போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் மூலப்பிரதி (கல்விச்சட்டகோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் அல்லது பிறப்புச் சான்றிதழின் பிரித்தெடுப்பு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(2) தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைக்கு ஆதாரமான சான்றிதழ்.

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்ற தொழில்துறை/ தொழில்நுட்பப்பயிற்சி அத்துடன் /அல்லது அனுபவம் ஏதுமிருப்பின் அது தொடர்பான சான்றிதழ்.

(4) இரண்டு நற்குணச்சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் வேண்டும் இவற்றுள் ஒன்று இறுதியாக கல்வி பயின்ற பாடசாலை அதிபரினதும் மற்றையது விண்ணப்பக்காரரை தனிப்பட்ட முறையில் நன்கறிந்த பொறுப்புவாய்ந்த ஒருவரிடம் இருந்து அல்லது விண்ணப்பக்காரரின் தொழில் தருநரிடமிருந்து (தொழில் புரிவாராயின்).

(5) விளையாட்டுத்துறை நடவடிக்கைகள் கெடெற்றிங் முதலியவற்றிற்கு ஆதாரமான சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படும்போது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் விண்ணப்பகாரர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டா.

11. **விண்ணப்பதாரர்கான அறிவுறுத்துதல்கள் :**

(அ) நேர்முக பரீட்சை கட்டளை ஆட்சேர்ப்பு அதிகாரி, இலங்கை விமானப்படை, ஆண் விண்ணப்பதாரர்களுக்கு 2016 யூன் 20, 21, 22, 23, 24, 27, 28, 29, 30 மற்றும் யூலை மாதம் 01, 04, 05 ஆந் திகதிகளில் இலங்கை விமானப்படை அனுராதபுரம் அடிப்படை முகாம், இலங்கை விமானப்படை அடிப்படை பயிற்சி பாடசாலை, தியதலாவ முகாம், இலங்கை விமானப்படை தொழிற்துறை பாடசாலை ஏக்கல முகாம், இலங்கை விமானப்படை கொக்கல முகாமில் நடைபெறும் வரை கிழமை நாட்களில் காலை 0800 முதல் மாலை 1300 வரை நடைபெறும்.

(ஆ) நேர்முக பரீட்சை கட்டளை ஆட்சேர்ப்பு அதிகாரி, இலங்கை விமானப்படை, ஏக்கலயில் பெண்விண்ணப்பதாரர்களுக்கு 2016 யூலை 06, 07, 08 ஆந் திகதி வரை கிழமை நாட்களில் காலை 8.00 முதல் மாலை 13.00 வரை நடைபெறும்.

(இ) விண்ணப்பக்கரர்கள் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படும்போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர்.

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் மூலப்பிரதி (கல்விச்சட்டகோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் அல்லது பிறப்புச் சான்றிதழின் பிரித்தெடுப்பு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(2) தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைக்கு ஆதாரமான சான்றிதழ்.

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்ற தொழில்துறை/ தொழில்நுட்பப்பயிற்சி அத்துடன்/ அல்லது அனுபவம் ஏதுமிருப்பின் அது தொடர்பான சான்றிதழ் .

(4) இரண்டு நற்குணச் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் வேண்டும். இவற்றுள் ஒன்று இறுதியாக கல்வி பயின்ற பாடசாலை அதிபரினதும் மற்றையது விண்ணப்பக்காரரை தனிப்பட்ட முறையில் நன்கறிந்த பொறுப்புவாய்ந்த ஒருவரிடம் இருந்து அல்லது விண்ணப்பக்காரரின் தொழில் தருநரிடமிருந்து. (தொழில் புரிவாராயின்).

(5) விளையாட்டுத்துறை நடவடிக்கைகள் கெடெற்றிங் முதலியவற்றிற்கு ஆதாரமான சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படும்போது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் விண்ணப்பகாரர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டா.

(உ) சான்றிதழ் மூலப்பிரதிகளை விண்ணப்பத்துடன் அனுப்புதல் வேண்டாம்.

(ஊ) சான்றிதழ் மூலப்பிரதிகளை விண்ணப்பத்துடன் அனுப்பியவைக்கு விமானப்படை பொறுப்பை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா

12. நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவு செய்யப்படும் தேர்வுநாடிகளுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம் நேரம் திகதி என்பன எழுத்துமூலம் அறிவிக்கப்படும். இது சம்பந்தமாகப் பயண அல்லது பிற செலவுகள் வழங்கப்படமாட்டா.

13. விண்ணப்பதாரியொருவர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய அடையாள அட்டை சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டை வைத்திராத விண்ணப்பக்காரர்கள் வேறு ஏதேனும் விதமான ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாளமொன்றை சமர்ப்பிக்கலாம். ஆயினும் எந்தவொரு விண்ணபபக்காரரும் தேசிய அடையாள அட்டையின்றி சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்.

14. தங்கள் இறுதி நேர்முகப்பரீட்சைகளையடுத்து பொருத்தமானவர்களாக இருக்கக்கூடிய விண்ணப்பக்காரர்கள் வான்படை மருத்துவச் சபையொன்றின் முன்னிலையில் தோற்றுமாறு தேவைப்படுத்தப்படுவர். பொருத்தமான விண்ணப்பக்காரர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு வான்படையின் தொழிற்தேவைப்பாடுகளின் அடிப்படையில் உயர் புள்ளி மட்டத்தில் இருந்தே தேர்வு செய்யப்படுவர்.

15. விண்ணப்பக்காரரொருவருக்கு விதப்புரை வழங்க விரும்பும் எவரும் நற்சாட்சிப்பத்திரமொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். ஏதேனும் விதத்தில் ஆதரவு தேடுதல் அல்லது விண்ணப்பக்காரரொருவரின் தெரிவுக்கு செல்வாக்கைப் பயன்படுத்த எத்தனித்தல் அத்தகைய விண்ணப்பக்காரரை தகைமையிழக்கச் செய்யும்.

16. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்கு பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவிநீக்கத்திற்கும் விண்ணப்பகாரரை ஆளாக்கிவிடும்.

17. நேர்முகப்பரீட்சைகளில் சித்திபெறாத விண்ணப்பதாரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

ஜீ. பி. புலத்சிங்ஹல,
எயார் மார்ஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வான்படை**

வான்படை வீரர்கள்/ வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள்

1. முழுப்பெயர் :----.
(தேசிய ஆள் அடையாள அட்டைப்படி)

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

3. விண்ணப்பிக்கும் தொழில் துறை :----.

4. அஞ்சல் முகவரி :----.

5. நிரந்தர முகவரி :----.

6. அருகிலுல்ல விமானப்படை முகாம் :----.

7. நிரந்தர முகவரியின் பொலிஸ் நிலையம் :----.
8. மாவட்டம் :----.

9. தேர்தற் தொகுதி :----.

10. கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.

11. தொலைபேசி இலக்கம் :----.

12. பிறந்த திகதி :----.

13. வயது (2016 யூலை 15 ஆந் திகதியன்று) :

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

14. விவாகமானவரா/ விவாகமாகாதவரா ? :----.

15. பால் :----.

16. உயரம் :- அடி ----- அங்குலம் -----.

17. க.பொ.த (சா.த.) பரீட்சை :

| ஆண்டு | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|
| | | | |

18. க.பொ.த (உ.த)பரீட்சை

| ஆண்டு | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|
| | | | |

19. பதவிக்குரிய எவையேனும் விசேட தகைமைகள் (தொழிநுட்பம், தொழிற்பயிற்சி அனுபவம் முதலியன) :----.

20. விளையாட்டுத் துறையில் விசேட சாதனைகள் பற்றிய விபரம் :----.

21. பாடசாலையில் அல்லது வெளி ஒழுங்கமைப்புகளில் குறிப்பிடத்தக்க வேறு சாதனைகள் :----.

22. ஆயுதப்படைகளுக்கு அல்லது பொலிஸ் சேவைக்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்திருந்தால் விபரங்கள் தரவும் :----.

23. நீர் குடியியல் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றினால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவரா ? :----.

24. நற்சாட்சிப்பத்திரங்கள் பற்றிய விவரங்கள் :

| பெயர் | பதவி | நிரந்தர முகவரி |
|---|---|---|
| | | |

25. விண்ணப்பதாரரால் கையொப்பமிடவேண்டிய வெளிப்படுத்துகை :

மேலேயுள்ள வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விடைகள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியானவை என என்மீது ஆணையாக வெளிப்படுத்துகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிரந்தர வான்படையில் வான்படை வீரராக தெரிவுசெய்யப்படும் விண்ணப்பகாரர்கள் தொடர்பில் கடைப்பிடிக்கப்படும் நடவடிக்கை முறையையும் அவற்றுக்குறிய விதிகளையும் நான் வாசித்து விளங்கிக்கொண்டுள்ளேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

6-832

---

## இலங்கை வான்படை

### வான் படை நிரந்தர வீரர் /வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள் மற்றும் நிரந்தர வீரர் /வீராங்கனைகளுக்கான நேரடி ஆட்சேர்ப்புக்கான வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர வான் படையில் கீழே தரப்பட்டுள்ள தொழில் துறைகளில், வான்படை வீரர் / வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள் கோரப்பட்டுள்ளன.

1. (அ) தொழில் துறையும் தேவைப்படும் கல்வித் தகைமைகளும் :

(1) வானூர்தி பொறியியல் (ஆண்) :

(அ) வான் அமைப்பு எந்திரவியலாளர்
(ஆ) வானூர்தி இயந்திரவியலாளர்
(இ) வானூர்தி மின்னியல் கருவிகள் எந்திரவியலாளர்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச்சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

(2) பொது பொறியியல் (ஆண்) :

(அ) ஆயுத இயந்திரவியலாளர்
(ஆ) மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர்
(இ) மேற்பரப்பு தொழினுட்ப உதவியாளர்
(ஈ) வான் படப்பிடிப்பாளர்
(உ) பொது இயந்திரவியலாளர்
(ஊ) இரும்பு கடைச்சல் இயந்திரவியலாளர்
(எ) உலோக தகடு இயந்திரவியலாளர்
(ஏ) மரக்கலை இயந்திரவியலாளர்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச்சித்தி மேலதிக தகைமையாகும்

(ஐ) மோட்டார் வாகன இயக்குநர்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி இல் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். (இலகு ரக வாகன அனுமதிப்பத்திரம் இருத்தல் கட்டாயமாகும். கனரக வாகன அனுமதிப்பத்திரம் இருத்தலிற்கு முன்னுரிமை வழங்கப்படும்) முதல் நேர்முக பரீட்சையில் சித்தி பெற்ற அனைத்து விண்ணப்பதாரர்களும் நடைமுறை பரீட்சைக்கு உட்படுவார்கள்.

(3) மின்னணுவியலும் தொலைத்தொடர்பும் பொறியியல்

(அ) வான் வானொலி தொழில்நுட்பவியலாளர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச்சித்தி இருத்தல் வேண்டும்

(ஆ) தொலைபேசி இயக்குநர் (ஆண்)

(இ) கணனி தொழில்நுட்பவியலாளர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

(4) வைத்திய துறை

(அ) தாதி உதவியாளர் (ஆண் /பெண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றில் திறமைச் சித்தியும் மேலதிகமாக ஒரு பாடத்தில் திறமைச்சித்தியும், ஆங்கிலத்தில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். க. பொ. த. (உ .த.) பரீட்சையில் ஒரே அமர்வில் விஞ்ஞானம்/ கணிதம்/ விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் சுகாதார அமைச்சு மூலமாக உயர் பயிற்சி நெறியை பெற விஷேட தகைமையாக கருதப்படும். க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி மேலதிக தகைமையாகும்

| | |
|---|---|
| க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தியும் உட்பட க. பொ. த. (உ .த.) பரீட்சையில் உயிரியல்/கணிதம்/விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் | - தாதியர் டிப்ளோமா |
| க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தியும் உட்பட க. பொ. த. (உ .த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம்/இணைந்த கணிதம் அல்லது பௌதீகவியல்/விவசாய விஞ்ஞானம் ஆகிய வற்றில் சித்தி பெற்றிருத்தல். இரசாயனவியல் தொடர்பாக திறமைச் சித்தி பெற்றிருத்தல் | - மருந்தாக்கர்/மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர் |
| க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தியும் உட்பட க. பொ. த. (உ .த.) பரீட்சையில் இரசாயனவியல் மற்றும் பௌதீகவியல்/ விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றில் சித்தி பெற்றிருத்தல் அல்லது உயிரியல் /இணைந்த கணிதம் தொடர்பாக திறமைச்சித்தி பெற்றிருத்தல் | - ECG /EEG தொழில் நுட்பவியலாளர் |
| க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தியும் உட்பட க. பொ. த. (உ .த.) பரீட்சையில் இரசாயனவியல்/உயிரியல்/இணைந்த கணிதம் ஆகியவற்றில் சித்தி பெற்றிருத்தல். பௌதீகவியல் தொடர்பாக திறமைச்சித்தி பெற்றிருத்தல் | - X Ray தொழில் நுட்பவியலாளர் / பிசியொதெரபிஸ்ட்/ ஒகியுபேஷனள் தெரபிஸ்ட் |

(ஆ) பல் வைத்திய உதவியாளர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றில் திறமைச்சித்தியும் மேலதிகமாக ஒரு பாடத்தில் திறமைச்சித்தியும், ஆங்கிலத்தில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். க. பொ. த. (உ .த.) பரீட்சையில் ஒரே அமர்வில் விஞ்ஞானம்/ கணிதம்/ விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் சுகாதார அமைச்சு மூலமாக உயர் பயிற்சி நெறியை பெற்றிருத்தல் விஷேட தகைமையாக கருதப்படும்.

(5) கட்டுமான உபகரண இயந்திரவியலாளர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் ஆங்கில மொழியில் சித்தி இருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.

(6) பரிபாலன துறை

(அ) பரிபாலன உதவியாளர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, ஆங்கிலத்தில் சித்தியும், கணிதம் /விஞ்ஞானம் /வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் கணனி அனுபவம் இருத்தல் பரிபாலன துறைக்கு மேலதிக தகைமையாக கருதப்படும்.

(ஆ) கணக்கியல் உதவியாளர் (ஆண் /பெண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, ஆங்கிலத்தில் சித்தியும், கணிதம் /வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் கணனி அனுபவம் இருத்தல் கணக்கியல் துறைக்கு மேலதிக தகைமையாக கருதப்படும்.

(7) தொழிற்பாடுகள் துறை

(அ) வான் தொழிற்பாடுகள் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தியும், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள்

(ஆ) தீயணைப்பாளர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

(இ) பூமி தொழிற்பாட்டாளர் (ஆண் /பெண்)

(ஈ) நாய்கள் கையாலுபவர் (ஆண் )

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

(8) உபகரணத் துறை

(அ) வழங்குனர் உதவியாளர் (ஆண்)
(ஆ) வானூர்தி எரிபொருள் வழங்குநர் (ஆண் )

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் சித்தியும், கணிதம்/விஞ்ஞானம்/வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் கணனி அனுபவம் இருத்தல் உபகரணத் துறைக்கு விஷேட தகைமையாக கருதப்படும்.

(ஆ) போசணசாலை மேற்பார்வையாளா (ஆண் /பெண்)

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழியில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் ஆங்கில மொழியில் சித்தியும் அல்லது ஆங்கில மொழி சரளமாக பேசும் திறமை இருப்பின் ஆட்சேர்ப்பின் போது முன்னுரிமை வழங்கப்படும். சுற்றுலா துறையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களில் பெற்ற அனுபவம் துறைசார்ந்த தகமை இருப்பின் ஆட்சேர்ப்பின் போது முன்னுரிமை வழங்கப்படும்* Waiter/ Barman/ house Keeper/ Room Boy/ Room Attendant/ Room Steward *(மேலதிகமாக உயர் பயிற்சி இலங்கை வான் படையில் இணைந்தவுடன் பிரசித்தி பெற்ற ஹொட்டல்களில் வழங்கப்படும்)*

(இ) உணவக மேற்பார்வையாளர் (ஆண்)

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள். ஆங்கில மொழியில் சித்தி இருத்தல் விஷேட தகைமையாக கருதப்படும்.*

(ஈ) சீருடை நிருமாணிப்பாளர் (ஆண் /பெண்)

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள்.* JUKI machine *தொடர்பான அனுபவம் இருத்தல்* (Over lock, Button hole, Button Attached, Double Needle, Bar Tack), *வெட்டுதல் மற்றும் ஆடையமைப்பு அனுபவம், துறைசார்ந்த மேலும் தையல் இயந்திரத்தை சீரமைக்கும் தகமை இருப்பின் ஆட்சேர்ப்பின் போது முன்னுரிமை வழங்கப்படும்*

(உ) வானூர்தி கடமையாளர் (ஆண் /பெண்)

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழியில் சித்தியும், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். ஆங்கில மொழி சரளமாக பேசும் திறமை மற்றும் சிறந்த தோற்ற அமைப்பு கட்டாயம் இருத்தல் வேண்டும் . வானூர்தி கடமையாளர் துறையில் அனுபவம் இருத்தல் வானூர்தி கடமையாளர் துறைக்கு மேலதிக தகைமையாக கருதப்படும். (உயரமானது பாதத்திலிருந்து கைகள் நீட்டினால் செ. மீ 212 ற்கு இருத்தல் வேண்டும் )*

(9) பொலிஸ் துறை

(அ) பொலிஸ் (ஆண் /பெண்)

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் , ஆங்கில மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள். உயரம் ஆண் 5 அடி 8 அங்குலமும் அதற்கு மேலும். பெண் 5 அடி 6 அங்குலமும் அதற்கு மேலும் இருப்பின் முதலிடம் வழங்கப்படும்.*

(10) இசைக்கலைஞர் துறை

(அ) நடனக்கலைஞர் (பெண்)

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள். சங்கீதம், பாடும் திறமை தொடர்பான அறிவும் அனுபவமும் மேலதிக தகைமையாகும். வாத்தியம், நடனம் ஆடுதல் தொடர்பான திறமை தொடர்பான அறிவும் அனுபவமும் மேலதிக தகைமையாகும். நடனம் ஆடுதலுக்கு அமைவான உடல் அமைப்பு இருத்தல், நாட்டார் பாடல் வாத்தியம் இசைத்துக்கொண்டு பாடும் திறமை தொடர்பான அறிவும் அனுபவமும் மேலதிக தகைமையாகும்.*

(11) உடற் பயிற்சியாளர்- (ஆண்/பெண்)

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள். தேசிய மட்டத்தில் மெய்வல்லுநர் விளையாட்டு தொடர்பான தகைமை விஷேட கவனத்தில் கொள்ளப்படும். நேர்முக பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து விண்ணப்பதாரர்களும் செயன்முறை பயிற்சியில் சித்தியடைதல் வேண்டும்.*

2. (அ) தொழிற்துறையும் தேவைப்படும் கல்வித்தகைமை மற்றும் தொழிற்தகைமையும்

(1) சிவில் பொறியியல் துறை

(அ) நில அளவையாளர் (ஆண் /பெண்)

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

(ii) தேசிய தொழில்நுட்ப கல்லூரியில் அளவையியலில் (NCT/QS) ஒரு வருட முழு நேர கற்கை நெறி அல்லது மூன்று வருட பகுதி நேர கற்கை நெறி சித்தி பெற்ற சான்றிதழ் இருப்பவர்களில் முன்னணி விமானவீரர் தரத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். ரசீது தயாரிப்பு, டெண்டர் ஆவணம் தயாரிப்பு, கண்ட்ரெக் ரசீது தயாரிப்பு குறிப்பிட்ட துறையில் 3 வருட அனுபவம் இருப்பின் கோப்ரல் தரத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

(ஆ) பொறிமுறை வரைதிறன் (ஆண்)

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

(ii) தேசிய தொழில்நுட்ப கல்லூரியில் பொறிமுறைவரைதிறன் (National Engineering Draughtsmanship) ஒரு வருட முழு நேர கற்கை நெறி சித்தி பெற்ற சான்றிதழ் இருப்பவர்களில் முன்னணி விமானவீரர் தரத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் குறிப்பிட்ட துறையில் 3 வருட அனுபவம் இருப்பின் கோப்ரல் தரத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் .

(இ) போர்மன் (Foreman சிவில்/இலத்திரனியல்/பொறியியல்- ஆண் )

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

(ii) தேசிய தொழில்நுட்ப கல்லூரியில் NCT(Civil / Electrical / Mechanical Engineering ) ஒரு வருட முழு நேர கற்கை நெறி அல்லது மூன்று வருட பகுதி நேர அரச அல்லது தனியார் நிறுவனங்களில் கற்கைநெறி தொடர்பாக சித்தி பெற்ற சான்றிதழ் இருப்பவர்களில் முன்னணி விமான வீரர் தரத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் குறிப்பிட்ட துறையில் 3 வருட அனுபவம் இருப்பின் கோப்ரல் தரத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

3. ஏனைய தகைமைகள்.- இலங்கை நிரந்தர / தொண்டர் வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொதுத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| (1) தேசிய இனம் | :- | ஓர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும். |
| (2) வயது (2016, நவெம்பர் 15 ஆந் திகதியன்று) | :- | ஆண் - 18 - 23 இருத்தல் வேண்டும். (நிரந்தர)<br>பெண் - 18 -22 இருத்தல் வேண்டும். (நிரந்தர)<br>சிவில் பொறியியல் துறை 18 -28 இருத்தல் வேண்டும். (நிரந்தர ஆண்)<br>18 -26 இருத்தல் வேண்டும். (நிரந்தர பெண்) |
| (3) உயரம் | :- | ஆண் - 5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும்.<br>பெண் - 5 அடி 3 அங்குலமும் அதற்கு மேலும் |
| (4) உடல் நிறை | :- | ஆண் 17 < உடற்பருமன் சுட்டி (BMI) < 26<br>பெண் 17 < உடற்பருமன் சுட்டி (BMI) < 25<br>உடற் பருமன் சுட்டி (BMI) $= \frac{\text{நிறை (கி . கி)}}{\text{உயரம்}^2\text{ (மீ)}}$ |
| (5) பார்வை வர்ணப்பதிவு மட்டம் | :- | CP2 |

(6) தொலை பார்வை இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்)

(7) குடியியல் நிலை :-

(அ) நிரந்தர வான் படை வீரர் /நிரந்தர வான் படை வீராங்கனை விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். (வான் படையில் இணைந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியடைவதுடன் தொழிற் பயிற்சியை பூர்த்தி செய்து ஓராண்டு கழிந்த பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்).

4. பந்தி 01 அ, 02 அ, 3 இல் உள்ள தேவைப்பாடுகளை அல்லது கல்வித்திறமைகளை நிறைவு செய்யாதவர்களுமான விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்படுவர். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், நிறை, கண் பார்வை பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உடற் தகைமைமட்டத்தை கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள். தேவையான உயரம், நிறை, கண் பார்வை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

5. விளையாட்டுத் துறையில் சிறந்த சாதனைகள் இருப்பின் முறையாக கவனத்திற் கொள்ளப்படும்.

6. சேவை நிபந்தனைகள் :

(அ) வான்படை வீரர் /வீராங்கனைகள் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட தேதியிலிருந்து வான்படை சட்டத்திற்கும் ஏனைய வான் படை ஒழுங்கு விதிகளுக்கும் வேறு கட்டளைகளுக்கும் உட்பட்டவர்களாவர்.

(ஆ) தெரிவு செய்யப்படும் தொழில் துறைக்குறிய நிரந்தர வான்படை வீரர் / நிரந்தர வீராங்கனைகள் அடிப்படை பயிற்சியும் அதன் பின் தொழில் துறைப் பயிற்சி வழங்கப்படுவதுடன், தொண்டர் வான் படை வீரர்கள் அடிப்படை பயிற்சியும் வழங்கிய பின் அவர்கள் (நிரந்தர/தொண்டர்) இலங்கையின் எந்தப்பிரதேசத்திலும், மிகக் கஷ்டமான நிலைமையிலும் இரவு பகலாக தமது தாய்நாட்டுக்குள் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்ற ஆயத்தமாதல் வேண்டும்

7. தொழிலில் அமர்த்தப்படுத்தல் பற்றிய நிபந்தனைகள்.

(அ) நிரந்தர வான்படை வீரர் /நிரந்தர வீராங்கனைகள் தொடர்பாக.-

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நிரந்தர வான்படையில் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 12 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். அதில் தொடர்ச்சியாக 08 ஆண்டுகள் சேவையாற்றுமாறு உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்ளுமாறு கேட்கப்படுவார்கள். மேலும் , 08 ஆண்டுகள் பூர்த்தியானதும் அதிலிருந்து இன்னும் 04 ஆண்டுகள் மீண்டும் நிரந்தர உப சேவையில் சேவையாற்றுதலானது மீண்டும் அழைக்கப்படும் போது சமுகமளிக்க வேண்டும். 08 ஆண்டுகள் கழிந்த பின் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

8. **அரச கரும மொழித் தேவைப்பாடுகள்.**- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசகரும மொழிக் கொள்கைக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

9. **சம்பளமும் கொடுப்பனவுகளும் :**

(அ) தற்போதிலிருந்து 2020 ஆம் வருடத்திற்கான வான்படை வீரர்களுக்கு ஏற்புடையதாக அடிப்படைச் சம்பள விகிதங்கள் பின்வருமாறு அமையும் :

| வருடம் நிலை | 2016 வருடத் திற்கான | 2017 வருடத் திற்கான | 2018 வருடத் திற்கான | 2019 வருடத் திற்கான | 2020 வருடத் திற்கான |
|---|---|---|---|---|---|
| விமான வீரன் | 2,07,984 | 2,44,608 | 2,81,232 | 3,17,856 | 3,54,480 (7X300-19X370) |
| முன்னணி விமான வீரன் | 2,14,320 | 2,52,060 | 2,89,800 | 3,27,540 | 3,65,280 (4X300-19X370) |
| கோப்ரல் | 2,20,656 | 2,59,512 | 2,98,368 | 3,37,224 | 3,76,080 (1X300-10X370-9X495) |
| சார்ஜன்ட் | 2,27,808 | 2,67,996 | 3,08,184 | 3,48,372 | 3,88,560 (3X370-9X495-3X660) |
| பிளைட் சார்ஜன்ட் | 2,32,848 | 2,73,996 | 3,15,144 | 3,56,292 | 3,97,440 (1X370-9X495-3X660) |
| அதிகாரம்பெற்ற அலுவலர் | 2,42,352 | 2,85,204 | 3,28,056 | 3,70,908 | 4,13,760 (7X495-14X660) |
| பிரதான அதிகாரம்பெற்ற அலுவலர் | 2,71,452 | 3,19,404 | 3,67,356 | 4,15,308 | 4,63,260 (13X660) |

(அ) வேறு கொடுப்பனவுகள் :

(1) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா 7,800 ;

(2) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு.- சேவைக்காலம் ஐந்து வருடம் பூர்த்தியடைந்த பின் இக்கொடுப்பனவு வழங்கப்படும் (மாதமொன்றுக்கு 250 ரூபா) ;

(3) கடினப்படி– நாளொன்றுக்கு ரூபா 20.00 ;

(4) கஷ்டப் பிரதேசங்களில் சேவை புரிபவர்களுக்கு மேலதிகமாக மாதமொன்றுக்கு ரூபா 3,880 வழங்கப் படும் ;

(5) விசேட கொடுப்பனவு I.- விசேட கொடுப்பனவு மாதமொன்றுக்கு 2,400 ரூபா வழங்கப்படும். (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் 80 ரூபா வீதம்) ;

(6) மேலதிகக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு 1,000 ரூபா ;

(7) சீருடை கொடுப்பனவு மாதமொன்றுக்கு 170 ரூபா வழங்கப்படும்) ;

(8) உணவு கொடுப்பனவு.- வெளியில் தங்கும் வான்படை வீரர் /வான்படை வீராங்கனை மாதமொன்றுக்கு ரூபா 14,213.70 (ஒவ்வொரு நாளுக்கும் ரூபா 473.79 வீதம்) ;

(9) தகைமைச் சம்பளம்.- விசேட பயிற்சி நெறியில் தகைமை பெற்றவர்களுக்கு அல்லது வான்படைச் சேவைக்கு விசேட பெறுமதிவாய்ந்த தகைமை கொண்டிருப்பவர்களுக்கு இத் தகைமைச் சம்பளம் வழங்கப்படும். மாதமொன்றுக்கு ஆகக்கூடிய தொகை ரூபா 637.50 வழங்கப்படும் ;

(10) மாறுபடும் கொடுப்பனவு ;

(11) பிரயாணம்.- ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரத பயணச்சீட்டுகள் (வீரர்/வீராங்கனைக்கும் கணவருக்கும் பிள்ளைகளுக்கும்). ;

(12) உள்ளே தங்கியிருக்கும் வான்படை வீரர்களுக்கு மாதமொருதடவை சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு பஸ் வண்டிக் கட்டணம் செலவின மீளளிப்பு ;

(13) இலவச சீருடை மற்றும் பொருட்களும் ;

(14) மருத்துவம் வான்படையின் செலவில் வான்படை வீரர்களுக்கும் திருமணமாயின் அவர்களது குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படும் ;

(15) வெளியில் தங்கியிருப்பவர்களும் வேலைத்தலத்திலிருந்து 30 மைல் (கி.மீ 48) சுற்றுவட்டத்தில் வாழ்பவர்களுமான வான்படை வீரர்களுக்கு இ.போ.ச. பேருந்து வண்டிகளில் வேலைக்கென இலவசமாக பிரயாணச் சீட்டு வழங்கப்படும் ;

(16) விவாகமான வான்படை வீரர்களுக்கு அரசாங்கத்திற்குரிய விவாகமானவர்களுக்கான விடுதியில் குடியிராவிடில் மாதமொன்றுக்கு சார்ஜன் நிலையின் கீழ் 1,200 ரூபாவில் இருந்து 2,750 ரூபா வரை பிலைட் சார்ஜன் நிலையின் இருந்து 1,350 ரூபாவில் இருந்து 3,300 ரூபா வரை வாடகைப் படியொன்றுக்கு உரித்துடையவராவர் ;

(17) தங்குமிட வசதி.- உள்ளேதங்கும் வான்படை வீரர்களுக்கு இலவசம் ;
மீள அமர்த்தலுக்கான சம்பளம் மீள அமர்த்தப்பட்ட காலப்பகுதியின்போது மாதமொன்றுக்கு ஆளணியினர் 300 ரூபாவுக்கு உரித்துடையவராவர் ;

(18) கலவரகாலப்படி.- நிரந்தரமான நிலையங்களுக்கு வெளியே கடமைக்குச் செல்லும்போது இக்கொடுப்பனவு வழங்கப்படும் (விவாகமானவர்/விவாகமாகாதவர் என்பதற்கிணங்க கொடுப்பனவு வேறுபடும்) ;

(19) நன்னடத்தைப் பதக்கம் சம்பளம் மிக உயர்ந்த தரத்திலான நடத்தையும் பொது ஒழுக்கமும் கொண்ட ஆளணியினருக்கு மாதமொன்றுக்கு ரூபா 30.00 இலிருந்து ரூபா 511.00 வரை வழங்கப்படும் ;

(20) விரிவுரையாளர் கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 425.00 இருந்து ரூபா 510.00 வரை கொடுப்பனவுக்கு உரித்துடையவராவர் ;

(21) வேறு கொடுப்பனவுகள் (பிரிந்திருத்தல் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்றுதல்).- இலங்கை வான்படை சம்பள சட்டதிட்டங்களுக்கு அமைய இக்கொடுப்பனவு வழங்கப்படும் ;

(22) ஓய்வூதியங்கள்/ பணிக்கொடுப்பனவு என்பன காலத்துக்கு காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச்சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படும். வான்படை வீரர்கள் அனைவரும் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

**10. விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள் :**

(அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன். தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2016 யூன் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "கட்டளை ஆட்சேர்ப்பு அதிகாரி இலங்கை விமானப்படை தொழிற்துறை பயிற்சி பாடசாலை ஏக்கல, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் இலங்கை விமானப்படை வான்படை நிரந்தர/ தொண்டர் வீரர்/ வீராங்கனைகளுக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவு தேதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை விமானப்படை தொழிற்துறை பயிற்சி பாடசாலையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டாது.

(ஆ) அரசாங்கசேவையில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில்/ குடியியல்தாபனத்தில் உள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின்/ சபையின்/ குடியியல்தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர்கள் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படும்போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர்.

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் மூலப்பிரதி (கல்விச்சட்டகோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் அல்லது பிறப்புச் சான்றிதழின் பிரித்தெடுப்பு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(2) தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைக்கு ஆதாரமான சான்றிதழ்.

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்ற தொழில்துறை/ தொழில்நுட்பப்பயிற்சி அத்துடன் / அல்லது அனுபவம் ஏதுமிருப்பின் அது தொடர்பான சான்றிதழ்.

(4) இரண்டு நற்குணச் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் வேண்டும். இவற்றுள் ஒன்று இறுதியாக கல்வி பயின்ற பாடசாலை அதிபரினதும் மற்றையது விண்ணப்பதாரரை தனிப்பட்ட முறையில் நன்கறிந்த பொறுப்புவாய்ந்த ஒருவரிடம் இருந்து அல்லது விண்ணப்பதாரரின் தொழில் தருநரிடமிருந்து. (தொழில் புரிவாராயின்).

(5) விளையாட்டுத்துறை நடவடிக்கைகள் கெடெற்றிங் முதலியவற்றிற்கு ஆதாரமான சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படும்போது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

(உ) சான்றிதழ் மூலப்பிரதிகளை விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டாம்.

(ஊ) சான்றிதழ் மூலப்பிரதிகளை விண்ணப்பத்துடன் அனுப்பிவைப்பின் விமானப்படை பொறுப்பை ஏற்றுக்கொள்ள மாட்டாது.

11. நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவு செய்யப்படும் தேர்வுநாடிகளுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம், நேரம், தேதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இது சம்பந்தமாகப் பயண அல்லது பிற செலவுகள் வழங்கப்படமாட்டாது.

12. விண்ணப்பதாரியொருவர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டை வைத்திராத விண்ணப்பதாரர்கள் வேறு ஏதேனும் விதமான ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாளமொன்றை சமர்ப்பிக்கலாம். ஆயினும் எந்தவொரு விண்ணப்பதாரரும் தேசிய அடையாள அட்டையின்றி சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்.

13. தங்கள் இறுதி நேர்முகப்பரீட்சைகளையடுத்து பொருத்தமானவர்களாக இருக்கக்கூடிய விண்ணப்பதாரர்கள் வான்படை மருத்துவச் சபையொன்றின் முன்னிலையில் தோற்றுமாறு தேவைப்படுத்தப்படுவர். பொருத்தமான விண்ணப்பதாரர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு வான்படையின் தொழிற்தேவைப்பாடுகளின் அடிப்படையில் உயர் புள்ளி மட்டத்தில் இருந்தே தேர்வு செய்யப்படுவர்.

14. விண்ணப்பதாரரொருவருக்கு விதப்புரை வழங்க விரும்பும் எவரும் நற்சாட்சிப்பத்திரமொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். ஏதேனும் விதத்தில் ஆதரவு தேடுதல் அல்லது விண்ணப்பதாரரொருவரின் தெரிவுக்கு செல்வாக்கைப் பயன்படுத்த எத்தனித்தல் அத்தகைய விண்ணப்பதாரரை தகைமையிழக்கச் செய்யும்.

15. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவிநீக்கத்திற்கும் விண்ணப்பதாரரை ஆளாக்கிவிடும்.

16. நேர்முகப்பரீட்சைகளில் சித்திபெறாத விண்ணப்பதாரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

ஜீ. பி. புலத்சிங்ஹல,
எயார் மார்ஷல்,
வான்படைத் தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

வான்படை நிரந்தர வீரர்/வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள் மற்றும் நிரந்தர வீரர்/வீராங்கனைகளுக்கான நேரடி ஆட்சேர்ப்புக்கான வெற்றிடங்கள்

1. முழுப்பெயர் :----.
(தேசிய ஆள் அடையாள அட்டைப்படி)

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

3. விண்ணப்பிக்கும் தொழில் துறை :----.

4. அஞ்சல் முகவரி :----.

5. நிரந்தர முகவரி :----.

6. அருகிலுல்ல விமானப்படை முகாம் :----.

7. நிரந்தர முகவரியின் பொலிஸ் நிலையம் :----.

8. மாவட்டம் :----.

9. தேர்தற் தொகுதி :----.

10. கிராம அலுவலர் பிரிவு :----.

11. தொலைபேசி இலக்கம் :----.

12. பிறந்த திகதி :----.

13. வயது (2016 யூலை 15 ஆந் திகதியன்று) :

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

14. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.

15. பால் :----.

16. உயரம் :- அடி ----- அங்குலம் -----.

17. க.பொ.த (சா.த.) பரீட்சை :

| ஆண்டு | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|
| | | | |

18. க.பொ.த (உ.த)பரீட்சை

| ஆண்டு | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|
| | | | |

19. பதவிக்குரிய எவையேனும் விசேட தகைமைகள் (தொழில்நுட்பம் , தொழிற்பயிற்சி அனுபவம் முதலியன) :----.

20. விளையாட்டுத் துறையில் விசேட சாதனைகள் பற்றிய விவரம் :----.

21. பாடசாலையில் அல்லது வெளி ஒழுங்கமைப்புகளில் குறிப்பிடத்தக்க வேறு சாதனைகள் :----.

22. ஆயுதப்படைகளுக்கு அல்லது பொலிஸ் சேவைக்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்திருந்தால் விவரங்கள் தரவும் :----.

23. நீர் குடியியல் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றினால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவரா ? :----.

24. நற்சாட்சிப்பத்திரங்கள் பற்றிய விவரங்கள் :

| பெயர் | பதவி | நிரந்தர முகவரி |
|---|---|---|
| | | |

25. விண்ணப்பதாரரால் கையொப்பமிடவேண்டிய வெளிப்படுத்துகை :

மேலேயுள்ள வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விடைகள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியானவை என என்மீது ஆணையாக வெளிப்படுத்துகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிரந்தர வான்படையில் வான்படை வீரராக தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தொடர்பில் கடைப்பிடிக்கப்படும் நடவடிக்கை முறையையும் அவற்றுக்குரிய விதிகளையும் நான் வாசித்து விளங்கிக்கொண்டுள்ளேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

6-833

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## விவசாயத் திணைக்களம்

இலங்கை விவசாயக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கான போட்டிப் பரீட்சை – 2016

**விவசாய உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறி – 2017/2019**

இலங்கை விவசாயக் கல்லூரிகளில், 2017/2019 ஆம் ஆண்டிற்கான விவசாய உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிக்கு அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் சிங்களம்/தமிழ் ஆகிய மொழிகள் மூலம் 2016, செத்தெம்பர் மாதத்தில் சில பிரதான நகரங்களில் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும்.

**2. விவசாய உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா :**

2.1 விவசாயத் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் இலங்கை விவசாயக் கல்லூரிகளில் விவசாய உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறி நடாத்தப்படுகின்றது. இக்கற்கைநெறி மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளதோடு, இப்பாடநெறி சம்பந்தமாக தேசிய தொழிற்கல்வி தகைமை (NVQ) தரம் 6 மட்டம் வழங்கப்படுகின்றது.

2.2 இக்கற்கைநெறி மேற்படி பாடநெறி ஆண், பெண் இருபாலாருக்கும் நடாத்தப்படுவதுடன் இப்பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வில் சித்தியடைபவர்கள் திறமை மற்றும் மாவட்ட அடிப்படையில் அங்குணுகொலபெலஸ்ஸ, கரப்பிஞ்ச, குண்டசாலை, பெல்வெஹெர, வவுனியா ஆகிய விவசாயக் கல்லூரிகளுக்கு தெரிவுசெய்யப்படுவார்கள்.

2.3 நேர்முகப் பரீட்சையில் தகைமை பெற்றவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் மாத்திரமே பரீட்சிக்கப்படும்.

2.4 இக்கற்கைநெறி முழுவதும் ஆங்கில மொழி மூலமே நடாத்தப்படும்.

2.5 இக்கற்கை நெறியைப் பூர்த்திசெய்வதற்கு விவசாயப் பாடசாலைகளில் 2 வருட பயிற்சியின் பின்னர் தேசிய பயிலுநர், தொழில்பயற்சி அதிகார சபையின் (NAITA) மேற்பார்வையின்கீழ் 6 மாத காலத்திற்கான தொழிலுடனான பயிற்சி ஒன்றை பெயர் குறிப்பிடப்படும் நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொள்வது கட்டாயமாகும்.

2.6 இப்பயிற்சி நெறியின்போது விவசாயக் கல்லூரிகளில் கற்கைநெறி நடாத்தப்படும் காலத்தினுள் விடுதியில் தங்கியிருத்தல் கட்டாயமானதாகும்.

**3. கற்கைநெறிக்கு அனுமதி பெறுவதற்கான தகைமைகள் :**

3.1 (அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய மூன்று பாடங்களிலும் கட்டாயமாக திறமைச் சித்தி பெற்றிருப்பதோடு, சமூகக்கல்வி, விவசாயம், வரலாறு அல்லது வாழ்க்கைத் திறன் மற்றும் குடியுரிமை கற்கை அல்லது விவசாய உணவுத் தொழில்நுட்பம் அல்லது பூங்கனியியல் விஞ்ஞானம் ஆகிய பாடங்களுள் ஏதாவது ஒன்றில் திறமைச் சித்தியுடன் (இதன்படி மொத்தம் நான்கு (4) திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்). இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். இவ்விரண்டு அமர்வுகளில் ஒன்றில் மூன்று (3) திறமைச் சித்திகளுடன் ஆகக் குறைந்தது ஐந்து (5) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ;

அத்துடன்

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் பிரிவில் தோற்றி இரசாயனவியல், பௌதீகவியல், உயிரியல் ஆகிய மூன்று பாடங்களிலும் தோற்றி குறைந்தது ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விவசாய கல்லூரிகளுக்கு தெரிவுசெய்யப்படும்போது மாவட்ட மட்டத்தில் மூன்று (3) பாடங்களில் சித்தியடைந்துள்ள மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.)

அல்லது

*க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் பிரிவில் தோற்றி இரசாயனவியல், விவசாயம், உயிரியல் ஆகிய மூன்று பாடங்களில் தோற்றி குறைந்தது ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

*(உயர்தர பரீட்சையில் கணிதத் துறையில் பயின்ற மாணவர்கள் இரசாயனவியல் அல்லது பௌதீகவியல் பாடங்களில் சித்தியடைந்திருப்பது இக்கற்கைநெறிக்கான தகைமை ஒன்றாகக் கருதப்பட மாட்டாது.)*

(ஆ) *க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய மூன்று (3) பாடங்களிலும் கட்டாயமாக திறமை சித்தி பெற்றிருப்பதோடு, சமூகக்கல்வி, விவசாயம், வரலாறு அல்லது வாழ்க்கைத் திறன் மற்றும் குடியுரிமை கற்கை அல்லது விவசாய உணவுத்திட்ட தொழில்நுட்பம் அல்லது பூங்கனியியல் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஏதாவது ஒன்றில் திறமைச் சித்தியுடன் (இதன்படி மொத்தம் நான்கு (4) திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்.) இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். இவ்விரண்டு அமர்வுகளில் ஒன்றில் மூன்று (03) திறமைச் சித்திகளுடன் ஆகக் குறைந்தது ஐந்து (5) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ;*

*அத்துடன்*

*க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தொழில்நுட்பவியல் துறையில் உயிரியல் தொழில்நுட்பம், தொழில்நுட்பவியல் துறைக்கான விஞ்ஞானம் அத்துடன் விவசாயம் ஆகிய மூன்று பாடங்களையும் கற்று அதில் ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல். (விவசாய கல்லூரிகளுக்கு தெரிவுசெய்யப்படும்போது மாவட்ட மட்டத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.)*

*அல்லது*

*க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தொழில்நுட்பவியல் துறையில் பொறியியல் தொழில்நுட்பம், தொழில்நுட்பவியல் துறைக்கான விஞ்ஞானம் அத்துடன் விவசாயம் ஆகிய மூன்று பாடங்களையும் கற்று அதில் ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல். (விவசாயக் கல்லூரிகளுக்குத் தெரிவுசெய்யப்படும்போது மாவட்ட மட்டத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.)*

*3.2 வயது.- 2016.07.25 ஆந் திகதியன்று விண்ணப்பதாரிகள் 17 வயதிற்குக் குறையாமலும் 25 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். (அதன்படி வயது தொடர்பான தகைமைகள் விண்ணப்பதாரியின் பிறந்த தினம் 1999.07.25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் 1991.07.25 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னராக இருத்தல் வேண்டும்.) அரச சேவையில் தொழில் புரிபவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவராகமாட்டார்.*

**4. பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரல் :**

*4.1 இவ்விளம்பரத்தின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப, விண்ணப்பங்கள், விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தினால் அல்லது தட்டச்சு செய்யப்பட்டு (கணினி தட்டச்சு) 8" x 12" (A4 அளவு) அளவுள்ள தாளின் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தினைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் பரீட்சையின் பெயரை தமிழுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும். 1 முதல் 10 வரையான விபரங்கள் முதல் பக்கத்தில் அடங்குதல் வேண்டும். 11 முதல் 14 வரை இரண்டாவது பக்கத்திலும் மிகுதி மூன்றாம் பக்கத்திலும் அடங்குமாறு தயாரிக்கப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப அமையாத விண்ணப்பங்களும், பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப அமைந்துள்ளதா என விண்ணப்பதாரி பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருத்தல் விரும்பத்தக்கது.*

*4.2 பரீட்சைக் கட்டணம் 700 ரூபா ஆகும். விண்ணப்பதாரியினால் 700 ரூபா மக்கள் வங்கியிலுள்ள விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் 057100179027204 எனும் வங்கிக் கணக்கிலக்கத்திற்கு பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும். பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் சரியான இடத்தில் கழன்றுவிடாமல் பற்றுச்சீட்டின் விளிம்பை மாத்திரம் பசையால் ஒட்டி விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். மேலும் பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்வது பிரயோசனமாகும். எக்காரணத்தைக் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது. இப்பரீட்சைக் கட்டணத்தை வேறு எப்பரீட்சைக்காகவும் மாற்றவும் முடியாது. இப்பரீட்சை கட்டணத்திற்கான பற்றுச்சீட்டை இணைத்து அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.*

4.3 விண்ணப்பங்கள் 2016, யூலை மாதம் 25 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கத்தக்கவாறு "பணிப்பாளர், விரிவாக்கற் பயிற்சி நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதனை" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில், அனுப்புதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் தாமதமாகும் அல்லது காணாமற்போகும் விண்ணப்பங்களுக்கு விவசாயத் திணைக்களம் பொறுப்பேற்காது.

4.4 விண்ணப்பத்தை அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "விவசாயக் கல்லூரிகளுக்கான அனுமதி 2017/2019" என்னும் வாக்கியம் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

5. **பரீட்சை நிலையங்கள்.-** 2017/2019 ஆம் ஆண்டுகளுக்கான விவசாய உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா பாடநெறி சம்பந்தமான விவசாயக் கல்லூரிகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை, பரீட்சைத் திணைக்களத்தினால் தமிழ், சிங்களம் ஆகிய மொழிமூலம் 2016, செத்தெம்பர் மாதத்தினுள் பின்வரும் நகரங்களில் உள்ள பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும் :

| பரீட்சை நடைபெறும் நகர இல. | பரீட்சை நடைபெறும் நகரம் | பரீட்சை நடைபெறும் நகர இலக்கம் | பரீட்சை நடைபெறும் நகரம் |
|---|---|---|---|
| 01 | அநுராதபுரம் | 08 | குருநாகல் |
| 02 | பதுளை | 09 | மாத்தறை |
| 03 | மட்டக்களப்பு | 10 | திருகோணமலை |
| 04 | கொழும்பு | 11 | வவுனியா |
| 05 | காலி | 12 | இரத்தினபுரி |
| 06 | யாழ்ப்பாணம் | 13 | அம்பாந்தோட்டை |
| 07 | கண்டி | 14 | கிளிநொச்சி |

குறிப்பிட்ட பரீட்சை நிலையமொன்றுக்குப் போதியளவு எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்காத விடத்து, பரீட்சார்த்தியின் இரண்டாவது விருப்பில் தெரிவான பரீட்சை நிலையம் அல்லது பரீட்சார்த்திகள் விண்ணப்பித்த நகரத்திற்கு அண்மையிலுள்ள வேறு ஒரு நிலையம் அவர்களுக்கு வழங்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த நகரம்/நகரங்களையோ, போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மொழி மூலத்தையோ பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. மேலும் கூறப்பட்ட சகல நகரங்களிலும் அல்லது அதற்கு மேற்பட்ட நகரங்களில் பரீட்சை நிலையங்களை அமைப்பதற்குப் போதுமான விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து பரீட்சையை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் நடவடிக்கை எடுப்பார்.

6. **பரீட்சை முறைமை.-**

6.1 எழுத்துப் பரீட்சைக்கான பாடங்கள், கால அட்டவணை என்பன கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

| விடயங்கள் | கால அளவு | காலம் |
|---|---|---|
| (i) முதலாம் வினாத்தாள் (I) விவசாயம் (100 புள்ளிகள்) (க. பொ. த. (சா. த.) விவசாய பாடப்பரப்பிற்கு அமைவானதும் விவசாயத் துறையோடு தொடர்பான பொது விடயங்களையும் கொண்டு தயாரிக்கப்பட்ட பல்தேர்வு, சுருக்க வினாக்கள் அடங்கியது). எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். | 1 மணித்தியாலம் | 09.30 மணி - 10.30 மணி |
| (ii) இரண்டாம் வினாத்தாள் (II) விவேகப் பரீட்சை (100 புள்ளிகள்) (ஒழுங்கமைப்பு, தொடர்பு காணல் ஊகித்தல், ஒப்பிடுதல், பகுத்தறிதல் போன்ற திறன்களை மதிப்பிடுவதற்கானது) பல்தேர்வு சுருக்க வினாக்கள் 50 ஐ உள்ளடக்கியது. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். | 1 மணித்தியாலம் | 11.00 மணி - 12.00 மணி |

6.2 3.1, 3.2 ஆகிய பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய சகல விண்ணப்பதாரிகளுக்கும் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் அனுமதிப்பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்திய அனுமதிப்பத்திரங்களை பரீட்சை நிலையத்தின் பிரதான மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதிப்பத்திரங்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் அஞ்சல் செய்தவுடன் உடனடியாக அது தொடர்பாக விளம்பரம் ஒன்று பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும். பரீட்சைக்கான விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட தினத்தின் பின்பு 2 அல்லது 3 நாட்களில் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாதவிடத்து அவ்விளம்பரத்தில் குறிப்பிட்டவாறு தமது தொலைநகல் இலக்கத்துடன் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்கவும். அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாதவர்கள் தம்மிடம் இருக்கும்–

(அ) விண்ணப்பப்பத்திரத்தின் நிழற்படப் பிரதி ;
(ஆ) பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி ;
(இ) பதிவுத்தபால் பற்றுச்சீட்டு என்பவற்றுடன்

பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளவும்.

6.3 பரீட்சைத்திணைக்களம் விண்ணப்பதாரிகள் பெற்ற புள்ளிகள் பற்றிய விபரத்தினை அவர்களுக்கு அனுப்பிவைக்கும் மாவட்ட அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பரீட்சார்த்தியொருவர் எழுத்துப் பரீட்சைக்கு/ நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பினும் அத்தகைய அனுமதி காரணமாக அவர் தகைமையுடையவர் எனக் கருத்திற்கொள்ள முடியாது. ஒரு பரீட்சார்த்தி பரீட்சைக்கு முன்னரோ அல்லது பின்னரோ அல்லது பரீட்சையின் எந்நிலையிலுமோ இப்பிரமாணத்தின்படி தகைமையற்றவர் எனக் கண்டால் அவரின் பரீசார்த்தத் தன்மை இரத்துச்செய்யப்படும்.

6.4 எழுத்துப் பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் தோற்றுவதற்கு அரசினால் எந்தவிதப் படிகளும் செலவுகளும் வழங்கப்படமாட்டாது.

**7. தெரிவு செய்யப்படும் முறை :**

7.1 சேர்த்துக்கொள்ளப்படும் வருடத்தில் ஒவ்வொரு மொழி மூலத்திலும் விவசாயக் கல்லூரிகளுக்கு சேர்த்துக்கொள்ளப்படும் மொத்த எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு விண்ணப்பதாரிகளைக் கொண்டுள்ள மாவட்டங்களிலிருந்து ஒவ்வொரு மொழி மூலத்திலும் கல்லூரிகளுக்கு அனுமதிக்கப்படும் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். அதன் பின்னர் ஒவ்வொரு மொழி மூலத்திற்குமான அம்மாவட்டத்தின் விண்ணப்பதாரிகளிலிருந்து போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் உயர் திறமை காட்டியுள்ள விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்படுவர். அவ்வாறான தெரிவின்போது கீழ்க்காணும் விடயங்களும் கருத்தில் எடுக்கப்படும்.

7.2 க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய மாவட்டமே அவ்விண்ணப்பதாரியின் மாவட்டமாக கொள்ளப்படும். க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய மாவட்டத்தின் இலக்கத்தை அறிவதற்கு இவ்வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் காணப்படும் இணைப்பு இல. 01 ஐ பார்க்கவும். இவ்விலக்கத்தை விண்ணப்பப்படிவத்தில் 5 ஆவது கேள்வியை பூர்த்திசெய்ய பயன்படுத்தவும்.

7.3 விவசாயம், விவேகப் பரீட்சை ஆகிய இரு வினாத்தாள்களிலும் பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகையின் அடிப்படையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் மாவட்ட அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். சித்தியடைந்தவர்கள் பட்டியலில் மாவட்ட மட்ட தேர்வில் விண்ணப்பப்படிவத்தின் 5 ஆவது கேள்விக்கான மறுமொழிகள் அடிப்படையாகக் கொள்ளப்படும். க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் பிரிவில் அல்லது தொழில்நுட்பவியல் துறையில் கற்று ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தி பெற்று போட்டிப் பரீட்சையில் இரு பாடங்களின் கூட்டுத்தொகைக்கு ஏற்ப கூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தவர்கள் முன்னுரிமை அடிப்படையில் முதலில் தெரிவு செய்யப்படுவர். குறித்த மாவட்டமொன்றில் குறித்த மொழி மூலத்திற்கு அவ்வாறு சித்தியடைந்தவர்கள் இல்லாதவிடத்து அல்லது அவ்வாறான விண்ணப்பதாரிகள் போதியளவு காணப்படாதவிடத்து மாத்திரம் அம்மாவட்டத்திலிருந்து அம்மொழி மூலத்திற்கு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளின் தொகைக்கு பொருந்தும் வகையில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரு பாடத்தில் அல்லது இரு பாடங்களில் சித்தியடைந்த மாவட்டத்தை சேர்ந்த விண்ணப்பதாரிகளின் போட்டிப் பரீட்சையில் மிகத் திறமையாக சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்படுவர். இத்தெரிவு கட்டாயமாக 7.1, 7.2 இல் குறிப்பிட்டபடி மாவட்ட அடிப்படையில் போட்டிப் பரீட்சையிலும் திறமை அடிப்படையிலும் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு முறையில் மேற்கொள்ளப்படும். குறித்த வருடத்தில் ஒவ்வொரு விவசாயக் கல்லூரிக்கும் அனுமதிக்கப்படும் மாணவ, மாணவியர் தொகை,

அக்கல்லூரிகளில் ஆண்/பெண் விடுதி வசதிக்கேற்பவும், பயிற்சி வசதிக்கேற்பவும் தீர்மானிக்கப்படும். எனவே மாணவர் தெரிவின்போது போட்டிப் பரீட்சையின் இரண்டு பாடங்களிலும் பெற்ற கூட்டுப் புள்ளிகளின் வெட்டுப்புள்ளி மட்டம் குறித்த மாவட்டத்தில் ஆண், பெண் விண்ணப்பதாரிகளிடையே வேறுபடும். ஏதாவதொரு மாவட்டமொன்றில் போதியளவு தகுதியுடைய மாணவர் தொகை காணப்படாதவிடத்து குறித்த மொழி மூலத்தில் கல்லூரிகளின் அனுமதியை பூரணப்படுத்துவதற்காக சம எண்ணிக்கையான விண்ணப்பதாரிகள் ஏனைய மாவட்டங்களிலிருந்து தெரிவுசெய்யப்படுவர்.

7.4 இதற்கேற்ப போட்டிப் பரீட்சையில் இரு பாடங்களிலும் கூடிய புள்ளிகளைப் பெற்ற குறித்த அளவான விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் அழைக்கப்படுவர். அவர்களின் கல்விச் சான்றிதழ்களையும் ஏனைய சான்றிதழ்களையும் பரீட்சிப்பதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப்பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் தங்களது சான்றிதழ்களின் மூலப்பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும். **நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது**. விவசாயக் கல்லூரிகளுக்குத் தெரிவுசெய்யப்படும் எண்ணிக்கையைவிட அதிகளவான விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

### 8. "குசுமா லக்ஸ்மி கருணாதிலக்க" ஞாபகார்த்தப் புலமைப் பரிசில் :

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் எழுத்துமூல போட்டிப் பரீட்சையில் விவசாயம், விவேகப் பரீட்சை ஆகிய வினாத்தாள் என்பவற்றில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் எந்த மொழியிலேனும் பயிற்சியை மேற்கொள்ளும் பெண் விண்ணப்பதாரி ஒருவருக்கு மேற்படி புலமைப் பரிசில் அதன் விதிகளுக்கு அமைய 2 வருட காலத்திற்கு வழங்கப்படும். புலமைப் பரிசிலைப் பெற்றவருக்கு குண்டசாலை விவசாயக் கல்லூரியில் பயில சந்தர்ப்பம் வழங்கப்படும். இப்புலமைப் பரிசின் வருடாந்தப் பெறுமதி 10,000 ரூபா ஆகும்.

கலாநிதி ரொஹான் விஜேகோன்,
விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

விவசாயத் திணைக்களம்,
பேராதனை,
2016, யூன் 03.

இணைப்பு இல. - 1

### மாவட்டத்தின் பெயர்களும் அவற்றின் இலக்கமும்

(7.2 பந்திக்கு ஏற்புடையதாகும்)

| மாவட்ட இல. | மாவட்டம் | மாவட்ட இல. | மாவட்டம் |
|---|---|---|---|
| 01 | அநுராதபுரம் | 14 | கம்பஹா |
| 02 | பதுளை | 15 | களுத்துறை |
| 03 | மட்டக்களப்பு | 16 | மாத்தளை |
| 04 | கொழும்பு | 17 | நுவரெலியா |
| 05 | காலி | 18 | மன்னார் |
| 06 | யாழ்ப்பாணம் | 19 | முல்லைத்தீவு |
| 07 | கண்டி | 20 | அம்பாறை |
| 08 | குருநாகல் | 21 | புத்தளம் |
| 09 | மாத்தறை | 22 | பொலன்னறுவை |
| 10 | திருகோணமலை | 23 | மொனராகலை |
| 11 | வவுனியா | 24 | கேகாலை |
| 12 | இரத்தினபுரி | 25 | கிளிநொச்சி |
| 13 | ஹம்பாந்தோட்டை | | |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை விவசாயக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கான போட்டிப்பரீட்சை - 2016**

விவசாய உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா பாடநெறி - 2017/2019

**(Competitive Examination for Admission to Sri Lanka School of Agriculture – 2016**
**Higher National Diploma in Agriculture Production Technology - (2017/ 2019)**

| |
|---|
| ......................................................... |
| (அலுவலக உபயோகத்திற்கு மட்டும்) |

1.

| பரீட்சை நகரம் : | அதன் இலக்கம் |
|---|---|
| 1 ஆம் தெரிவு ...................... | ...................... |
| 2 ஆம் தெரிவு ...................... | ...................... |

(வர்த்தமானி அறிவித்தலின் முதலாவது பந்திக்கு அமைவாக)

2.

| பரீட்சைக்குத் தோற்றும் மொழி : | |
|---|---|
| சிங்களம் - 2 | ............... |
| தமிழ் - 3 | |

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3.

| பால் : |
|---|
| ஆண் - 0 |
| பெண் - 1 |

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

4. க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாகத் தோற்றிய பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் :  மாவட்ட இலக்கம் ☐

7.2 பந்திக்கு ஏற்ப இணைப்பு இல. 1 ஐக் பார்க்க)

5. க.பொ.த. (உ.த.) உயிரியல்/தொழில்நுட்பவியல் பிரிவில் தோற்றி சித்தி பெற்றுள்ள பாடங்களின் எண்ணிக்கை : (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்) ☐

மூன்று பாடங்கள் ஒரு அமர்வில் - 3
இரண்டு அல்லது 1 பாடம் ஒரு அமர்வில் - 2

(3.1 பந்திக்கு ஏற்ப)

| |
|---|
| சித்தியடைந்த பாட எண்ணிக்கைக்கேற்ப உரிய இலக்கம் |
| ........................... |

6. (i) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம்- HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDENA)
(ii) இறுதியில் வரும் பெயர் முதலிலும் மிகுதிப் பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு : ----.
(உதாரணம் : Gunawardena, H. M. S. K.)
(iii) முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) :----.

7. (i) முகவரி :----.
(ii) பரீட்சை அனுமதிப்பத்திரத்தினை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(iii) தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் :

(அ) கையடக்க : ☐☐☐☐☐☐☐☐☐☐

(ஆ) நிரந்தர : ☐☐☐☐☐☐☐☐☐☐

8. (அ) க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதன் முறையாக தோற்றிய பாடசாலையும் முகவரியும் :----.
(ஆ) க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் (சிங்களத்தில்) :----.
(இ) க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் (ஆங்கிலத்தில்) : ----.

9. தேசிய அடையாள அட்டை இல. :

10. (அ) தற்போது வதியும் தேர்தற்தொகுதி (தமிழில்) :-----.
(ஆ) தற்போது வதியும் தேர்தற் தொகுதி (ஆங்கிலத்தில்) :-----.

11. பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

12. 2016.07.25 ஆந் திகதி அன்று வயது :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

13. கல்வித் தகைமைகள் (இப்பகுதியை பூரணப்படுத்த முன் வர்த்தமானி அறிவித்தலை கவனமாக வாசித்தல் வேண்டும்) :

(அ) இந்த அறிவித்தலின் 3.1 ஆம் பந்திக்கு ஏற்ப க. பொ. த. (சா. த.) பரீட்சையில் விண்ணப்பதாரி சித்தியடைந்த ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்கள் :

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட எண் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | 1. | | |
| | | 2. | | |
| | | 3. | | |
| | | 4. | | |
| | | 5. | | |
| | | 6. | | |
| | | 7. | | |
| | | 8. | | |
| | | 9. | | |
| | | 10. | | |

(ஆ) வர்த்தமானி அறிவித்தலின் 3.1 பந்திக்கு அமைய கட்டாயம் திறமைச் சித்தி பெறவேண்டிய நான்கு பாடங்கள் தொடர்பான விபரங்கள் :

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட எண் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | 1. தமிழ் மொழி | | |
| | | 2. கணிதம் | | |
| | | 3. விஞ்ஞானம் | | |
| | | 4. விவசாயம் | | |
| | | 5. சமூகக்கல்வி | | |
| | | 6. வரலாறு | | |
| | | 7. வாழ்க்கைத் திறன் மற்றும் குடியுரிமைக் கற்கை | | |
| | | 8. விவசாய உணவுத் தொழில்நுட்பம் | | |
| | | 9. பூங்கனியியல் விஞ்ஞானம் | | |

(இ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியற் பிரிவில்/தொழில்நுட்பப் பிரிவில் தோற்றினீரா? ஆம்/இல்லை (தேவையான இடத்தில் ✓ அடையாளமிடவும்)

உயிரியல் பிரிவு

தொழில்நுட்பவியல் பிரிவு

(ஈ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்கள் :

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட எண் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | 1. உயிரியல் | | |
| | | 2. விவசாயம் | | |
| | | 3. பௌதீகவியல் | | |
| | | 4. இரசாயனவியல் | | |
| | | 5. தொழில்நுட்பவியல் விஞ்ஞானம் | | |
| | | 6. உயிரியல் தொழில்நுட்பவியல் | | |
| | | 7. பொறியியல் தொழில்நுட்பவியல் | | |

(உ) மேலேயுள்ள தகைமைகளை உறுதிப்படுத்த சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகளை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பவும். (மூலப்பிரதியை அனுப்பத் தேவையில்லை)

சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளனவா ? :-----.

14. (i) பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/தமிழில்) :-----.
(ii) பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயரும் முகவரியும் :-----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

15. பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் விபரங்கள் :
15.1 பற்றுச்சீட்டு இலக்கம் :-----.
15.2 பற்றுச்சீட்டு வழங்கப்பட்ட திகதியும் தபால் நிலையமும் :-----.

பற்றுச்சீட்டின் மேல் விளிம்பை மாத்திரம் இங்கு பசையால் ஒட்டுதல் வேண்டும்.
காசுக்கட்டளையின் நிழற்படப் பிரதியொன்றை கட்டாயமாக தம்வசம் வைத்துக்கொள்ளவும்.

**பரீட்சார்த்தியின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். க. பொ. த. (சாதாரண) தரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாகவும் தமிழ், விஞ்ஞானம், கணிதம் என்பவற்றிற்கு திறமைச் சித்தியும் விவசாயம் அல்லது வரலாறு அல்லது வாழ்க்கைத் திறன் மற்றும் குடியுரிமைக் கற்கை அல்லது விவசாய உணவுத் தொழில்நுட்பம் அல்லது பூங்கனியியல் விஞ்ஞானம் ஆகிய 6 பாடங்களில் ஒன்றிற்கு திறமைச் சித்தியும் உயர்தரத்தில் உயிரியற் பிரிவு/தொழில்நுட்பவியல் பிரிவில் பயின்று வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட தகைமைகளை பெற்றுள்ளேன் என உறுதியளிக்கின்றேன். இதிலடங்கிய விபரங்களில் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படுமிடத்து நான் தகைமை இழப்பேன் என்பதையும் அறிவேன். பரீட்சை தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு அமைவாக நடக்க நான் சம்மதிக்கிறேன்.

-----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**கல்வித் தகைமைகளையும் கையொப்பத்தையும் உறுதிப்படுத்தல்**

(திணைக்களத் தலைவர் ஒருவரால், பாடசாலை அதிபர் ஒருவரால், சமாதான நீதவானால், சட்டத்தரணியால் அல்லது வருடத்திற்கு திரட்டிய சம்பளமாக 2,40,360 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.)

மேலே கையொப்பம் இட்ட திரு./திருமதி/செல்வி ............................................. என்பவரை நான் நன்றாக அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டாரென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். மேலும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள க. பொ. த. (சா. த.), க. பொ. த. (உ. த.) தகைமைகளை பெற்றுள்ளார் என வர்த்தமானி அறிவித்தலையும் கல்விச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை பரீட்சித்து அத்தாட்சிப்படுத்துகிறேன். மேலும் உரிய பரீட்சை கட்டணங்களை செலுத்தியுள்ளார் என்பதையும் அதற்கான பற்றுச்சீட்டை உரிய இடத்தில் ஒட்டியுள்ளார் என்பதையும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

6-678

**கட்டடத் திணைக்களம்**

(i) இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்), தரம் III

(ii) இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (மின்), தரம் III

(iii) இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (பொறிமுறை), தரம் III

கட்டடத் திணைக்களத்தின் மேற்படி பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து கட்டடத் திணைக்களத்தின் கட்டடப் பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கட்டடத் திணைக்களத்தினால் உத்தியோகபூர்வ கடமைகள் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்தலங்கள் நாடு முழுவதும் பரந்துள்ளதுடன், மேல் மாகாணத்தோடு கூடுதலான நிர்மாணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வடக்கு (யாழ்ப்பாணம், வவுனியா), கிழக்கு (அம்பாறை) மற்றும் வடமத்திய (பொலன்னறுவை) மாகாணங்களில் புதிய தொழில்நுட்ப அலுவலர்களை (குடிசார்) ஈடுபடுத்த எதிர்பார்த்துள்ளதுடன், தொழில்நுட்ப அலுவலர்கள் (பொறிமுறை/ மின்) தலைமை அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்படுவார்கள்.

2. இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய ஏ4 அளவான தாளின் இருபக்கங்களையும் பயன்படுத்தி தயார் செய்து கொண்ட விண்ணப்பப்படிவத்தை 2016.07.24 ஆம் திகதிக்கு அல்லது அத்திகதிக்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம், இல. 28/ 10, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கட்டடத் திணைக்களத்தின், இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்/ மின்/ பொறிமுறை)" என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். தாமதித்துக் கிடைக்கின்ற, தெளிவற்ற மற்றும் முறையாக பூர்த்தி செய்யப்படாதுள்ள விண்ணப்பப் படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**3. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்:**

3.1 இந்தப் பதவி நிரந்தரமானது. உங்களுக்கு உரித்தான ஓய்வூதியம் தொடர்பில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுகின்ற கொள்கை நடைமுறைகளுக்கு நீங்கள் இணங்க வேண்டும்.

3.2 அரசாங்க சேவையின் நியமனங்கள் தொடர்பான தாபன விதிக் கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் 10 – 12 வரையான பிரிவுகளின் நடைமுறை விதிகளும் இதற்கு ஏற்புடையனவாகும்.

3.3 தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களக் கட்டளைகளுக்கும், காலத்திற்குக் காலம் அரசாங்கத்தினால் வெளியிடப்படுகின்ற வேறு ஒழுங்கு விதிகள் மற்றும் கட்டளைகளுக்கும் இணங்கியொழுக வேண்டும்.

**4. பொதுவான தகைமைகள் :**

4.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

4.2 சிறந்த நன்னடத்தையுடையவராகவும், நல்ல தேகாரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

4.3 ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற அலுவலர்கள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்ற வேண்டும்.

4.4 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிக்கு 18 வயதிற்குக் குறையாதவராகவும், 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**5. சகல பதவிகளுக்கும் தேவையான கல்வித் தகைமைகள் :**

5.1 கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சா. த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமொரு பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் (6) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

5.2 பௌதிகவியல், இரசாயனவியல் பாடங்கள் இரண்டுடன் விஞ்ஞானப் பாடப் பிரிவில் மூன்று பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உ. த.) பரீட்சையில் (பொதுவான பரீட்சை தவிர) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பழைய பாடவிதானத்தின் கீழ் 3 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருப்பது போதுமானதாகும்.)

**6. தொழில்சார் தகைமைகள் :**

6.1 இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்/ மின்/ பொறிமுறை), தரம் III

மேலே 5 இலுள்ள கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக உரிய துறைசார்ந்ததாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்சார் தகைமைகளில் ஒன்றினைப் பூர்த்தி செய்து விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியில் உரிய சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும் :

(i) மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா,

அல்லது

(ii) தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியியல் டிப்ளோமா,

அல்லது

(iii) கல்வி, உயர் கல்வி அமைச்சினால் வழங்கப் படுகின்ற தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா,

அல்லது

(iv) இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் வழங்கப் படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா,

அல்லது

(v) இலங்கை பொறியியல் நிறுவகத்தினால் நடாத்தப் படுகின்ற பொறியியல் பரீட்சையின் 1 ஆம் பகுதியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்,

அல்லது

(vi) தொழில் துறைக்கு ஏற்புடையதாக தேசிய தொழில்சார் தேர்ச்சி (NVQ) 6 மட்டத்தின் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்,

அல்லது

(vii) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப் பட்டுள்ள தொழில்நுட்பச் சான்றிதழ்களை வழங்கி யுள்ள நிறுவனங்களிடம் வினவி கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பத் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானவை யென மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப் படுகின்ற வேறு தொழில்நுட்பத் தகைமை களைப் பெற்றிருத்தல்.

7. தெரிவுசெய்யும் அடிப்படை :

7.1 எழுத்து மூலமான பரீட்சைக்குரிய நிபந்தனைகள்.- இதற்கான எழுத்துமூலப் பரீட்சை கட்டடத் திணைக்களம் சார்பாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன், அவர் அறிவிக்கும் தினத்தில் பரீட்சை நடாத்தப்படும். அவர் விதிக்கின்ற சட்டங்கள், விதிகளுக்கு பரீட்சார்த்திகள் உட்படுதல் வேண்டும் ;

7.2 தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள் எழுத்து மூலமான பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சையில் தோற்றுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும், ஆகக்குறைந்தது 40% ஆன புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் ; மேற்படி பரீட்சையில் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட ஒழுங்குவரிசையின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதிவாய்ந்தவர்கள் குறித்த புள்ளிகளின் ஒழுங்குவரிசையின் அடிப்படை யில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சை யின்போது புள்ளிகள் வழங்கப்படுவதில்லை என்பதுடன் தகைமைகள் மாத்திரம் பரிசீலனை செய்யப்படும்.

7.3 எழுத்து மூலமான பரீட்சைக்கு ஏற்புடைய விடயங்கள் பின்வருமாறாகும் :

| பாடங்கள் | நேரம் | உச்ச புள்ளி களின் எண் ணிக்கை | சித்தியடை வதற்குப் பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. உளச் சார்புப் பரீட்சை | 1 மணித்தி யாலம் | 100 | 40 |
| 2. விடய ரீதியான தொழில் நுட்பப் பரீட்சை | 3 மணித்தி யாலம் | 100 | 40 |

| வினாத் தாளின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| 1. உளச் சார்புப் பரீட்சை | புரிந்துகொள்ளும் சக்தி, தர்க்க ரீதி யான அறிவு, சரியாக தீர்மானம் மேற் கொள்ளும் ஆற்றல், எண்கள் மற்றும் கணித சிக்கல்களைத் தீர்க்கும் ஆற்றல், மொழித் தொடர்கள், அட்டவணை, படம், குறிப்பு, வரைபடத்தைப் பயன் படுத்தல். |
| 2. விடய ரீதி யான தொழில் நுட்பப் பரீட்சை | **தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்) பதவி.-** மானி, கட்டட வரைபடம் பற்றிய தொழில் அறிவு, அடிக்கல், மண் வகை, கட்டடப் பொருட்கள், கட்டட ஒழுங்கமைப்பும், நிறைவு செய் வதும், கட்டட வரைபடங்களின் மூலம் அளவைகளைப் பெற்றுக் கொள்ளல், மதிப்பீடுகளைத் தயார் செய்தல், நீர் வழங்கலும், கழிவுநீர் அகற்றும் வடிகாலமைப்பும். |

| வினாத் தாளின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| | **தொழில்நுட்ப அலுவலர் (மின்) பதவி**.- கட்டடங்களின் மின்சுற்றுக்கள் பற்றிய அறிவு, பின்பற்ற வேண்டிய ஒழுங்குவிதிகள், கட்டட வரைபடம் பற்றிய அறிவு, மதிப்பீடுகளைத் தயார் செய்தல் மற்றும் மின்சுற்றுக்களின் சீரான தன்மையைப் பரிசீலனை செய்தல். |
| | **தொழில்நுட்ப அலுவலர் (பொறிமுறை) பதவி**.- வாகனங்களை வகைப்படுத்தல், புதுப்பித்தல் மற்றும் சேர்விஸ் செய்யும் போது பயன்படுத்துகின்ற உபகரணங்கள், எஞ்சின் செயற்பாடு பற்றிய அறிவும், அதன் ஒவ்வொரு பகுதியினதும் செயற்பாடுகளும், குளிரேற்று (Cooling) முறை பற்றிய மற்றும் அதன் ஒவ்வொரு பகுதியினதும் செயற்பாடுகள் பற்றிய அறிவு, செலுத்தல் (Transmission) கட்டமைப்பு பற்றிய அறிவும் அதன் ஒவ்வொரு பகுதியினதும் செயற்பாடுகள், பல்வேறு வகையிலுமான செலுத்தல் கட்டமைப்புக்கள், மின்கட்டமைப்பு தொடர்பாக, செலுத்தற்சில்லு, தொங்கல் கட்டமைப்பு (Suspension) பற்றிய, மின்கலம் (Battery) வகைப்படுத்தல் பற்றிய மற்றும் வகைப்படுத்தல்களை தயார் செய்தல், சில்லு (Wheel) வகைப்படுத்தல் பற்றிய அறிவு, சில்லுகளை வகைப் படுத்தியுள்ள சர்வதேச நியமங்கள் பற்றிய அறிவு, உடற்பகுதி (Body) பற்றிய அறிவு, சில்லுத் தொகுதி மற்றும் சில்லு வரிசையாக்கல் (Wheel Alignment), வாகனத்தின் வளிச்சீராக்கி வகைப்படுத்தல் பற்றிய அறிவு, வாகனத்தின் வளிச் சீராக்கிக் கட்டமைப் பின் ஒவ்வொரு பகுதியினதும் செயற்பாடுகள், கட்டடங்களுக்குப் பயன்படுத்தும் வளிச்சீராக்கி இயந்திர வகைப்படுத்தல் பற்றிய, அலுவலக உபகரணங்களை வகைப்படுத்தல் பற்றிய அறிவு. |

7.4 எழுத்து மூலப் பரீட்சை சிங்களம்/ தமிழ் ஆகிய இரண்டு மொழிகள் மூலமும் நடாத்தப்படும்.

8. **ஆட்சேர்ப்புச் செய்தல்**.- மேலே 5 மற்றும் 6 இன் கீழ் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதுடன், எழுத்து மூலப் பரீட்சையில் சித்தி யடைந்துள்ள விண்ணப்பதாரர்கள் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்) மற்றும் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்/ மின்/ பொறிமுறை) பயிற்றுவித்தல் தரம் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

9. **சம்பள அளவுத்திட்டம்**.- பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 6/ 2006(iv) இன் MN-3-2006A கீழ்,

இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்/ மின்/ பொறிமுறை) தரம் III

ரூபா 15,005 - 4 x 180 - 6 x 240 - 11 x 320 - 20 x 360 - ரூபா 27,885.

10. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபா ஆகும். விண்ணப்பதாரர்கள் திருப்பிச் செலுத்தப்படாத 1,000 ரூபா பரீட்சைக் கட்டணத்தை நாடு முழுவதிலும் அமைந்துள்ள எந்தவொரு தபால் அலுவலகத்தின் மூலமும் (உப தபால் அலுவலகங்கள் தவிர) "SLIDA" கணக்கிற்கு செலுத்த வேண்டும் என்பதுடன், இந்தக் கொடுப்பனவு தொடர்பாக வழங்கப்படுகின்ற ரசீதின் இலக்கத்தை பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் 12 ஆம் இலக்கத்தின்கீழ் குறிப் பிடுதல் வேண்டும்.

குறித்த தபால் அலுவலகத்தில் "SLIDA" கணக்கிற்கு கொடுப்பனவைச் செலுத்துவதற்கான படிவத்தை நிரப்பும் போது, பணத்தைப் பெற்றுக் கொள்பவராக "SLIDA" என்றும், பணம் பெற்றுக் கொள்பவரின் முகவரி எனும் இடத்தில் உங்களுக்குரிய பரீட்சையின் குறியீட்டுப் பெயரையும் குறிப்பிடுக. (குறியீட்டுப் பெயர்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.)

| | பரீட்சையின் பெயர் | குறியீட்டுப் பெயர் |
|---|---|---|
| 1 | இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்), தரம் III | TOc |
| 2 | இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (மின்), தரம் III | TOe |
| 3 | இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (பொறிமுறை), தரம் III | TOm |

மேலும், கணக்கிற்கு பணம் செலுத்தும்போது பணம் அனுப்புபவராக விண்ணப்பதாரரின் பெயரையும், பணம் அனுப்புபவரின் முகவரி எனும் இடத்தில் விண்ணப்பதாரியின் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கத்தையும், குறிப்பிட்டு விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்தல் வேண்டும்.

*11.* யாராயினுமொரு விண்ணப்பதாரரின் விண்ணப்பப் படிவத்தில் யாதாயினும் தவறான, பொய்யான கூற்றுக்கள் இருப்பதன் காரணமாக அவர் தகைமையற்றவராக்கப்பட முடியும் என்பதுடன், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் இது பற்றி அறியக்கிடைக்கும் பட்சத்தில் அவர் பதவிநீக்கம் செய்யப்பட முடியும்.

*12.* **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**.- விண்ணப்ப தாரர்கள் தமது மாதிரி கையொப்பத்தை, அரசாங்க பாடசாலை யொன்றின் அதிபர் / ஓய்வுபெற்ற அதிபர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிசு, முப்படைகளின் ஆணைபெற்ற அலுவலர், அல்லது 2,40,360 ரூபா அல்லது அதற்கு மேலான வருடாந்த சம்பளத்தைப் பெறுகின்ற அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் அல்லது நிரந்தர பதவிநிலை அலுவலர் அல்லது நாயக்க தேரர் அல்லது வேறு மதவழிபாட்டுத்தளமொன்றிற்குப் பொறுப்பான மதத் தலைவர் அந்தஸ்தில் உள்ளவராகக் கருதப்படக்கூடிய ஒருவர் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்ப வேண்டும்.

இதில் குறிப்பிடப்படாதுள்ள விடயமொன்று தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளும் அலுவலராக கட்டடப் பணிப்பாளர் நாயகம் செயற்படுவார்.

எம். ஆர். ஜெயசந்திரன்,
கட்டடப் பணிப்பாளர் நாயகம்.

கட்டடத் திணைக்களம்,
'செத்சிறிபாய',
பத்தரமுல்லை,
2016, யூன்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

விண்ணப்பிக்கும் பதவி :

| | |
|---|---|
| (i) இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்), தரம் III | [ ] |
| (ii) இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (மின்), தரம் III | [ ] |
| (iii) இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (பொறிமுறை), தரம் III | [ ] |

(உரிய இலக்கத்தைக் கொண்ட கூண்டில் ✓ அடையாளத்தை இடுக)

1. (i) முழுப் பெயர் :----.

(ii) முதலெழுத்துக்களுடனான பெயர் (சிங்களம்/தமிழ் மொழியில்) :----.

(iii) முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

2. முகவரியும், தொலைபேசி இலக்கமும் :

(i) அலுவலக முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.

(ii) சொந்த முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.

(iii) கையடக்கத் தொலைபேசி இலக்கம் :----.

3. பால் :
ஆண் - 0
பெண் - 1 [ ]
(உரிய இலக்கத்தை கூண்டில் எழுதுக)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :
[ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

5. (i) பிறந்த திகதி :

ஆண்டு [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

(ii) விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் [ ][ ] மாதங்கள் [ ][ ] நாட்கள் [ ][ ]

6. திருமணமானவரா / திருமணமாகாதவரா என்பது:
திருமணமாகாதவர் - 1
திருமணமானவர் - 2 [ ]
(உரிய இலக்கத்தை கூண்டில் எழுதுக)

7. க.பொ.த. (சா.த.) பரீட்சையின் விபரங்கள் (முதல் அமர்வு) (தயவு செய்து பிரதிகளை இணைக்கவும்) :

(i) பரீட்சையில் சித்தியடைந்த ஆண்டும் மாதமும் : ----.

(ii) விண்ணப்பதாரியின் பரீட்சை இலக்கம் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| ..................... | ........... | ..................... | ........... |
| ..................... | ........... | ..................... | ........... |
| ..................... | ........... | ..................... | ........... |
| ..................... | ........... | ..................... | ........... |
| ..................... | ........... | ..................... | ........... |

8. க.பொ.த. (சா. த.) பரீட்சையின் விபரங்கள் (இரண்டாம் அமர்வு) அவசியமாயின் மாத்திரம் (தயவு செய்து பிரதிகளை இணைக்கவும்) :

(i) பரீட்சையில் சித்தியடைந்த ஆண்டும், மாதமும் : ----.

(ii) விண்ணப்பதாரியின் பரீட்சை இலக்கம் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| ..................... | ........... | ..................... | ........... |
| ..................... | ........... | ..................... | ........... |
| ..................... | ........... | ..................... | ........... |
| ..................... | ........... | ..................... | ........... |
| ..................... | ........... | ..................... | ........... |

9. க.பொ.த. (உ. த.) பரீட்சையின் விபரங்கள் (தயவு செய்து பிரதிகளை இணைக்கவும்):

பரீட்சையில் சித்தியடைந்த ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.
விண்ணப்பதாரியின் பரீட்சை இலக்கம் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| ..................... | ........... | ..................... | ........... |
| ..................... | ........... | ..................... | ........... |

10. ஏனைய தகைமைகள்.- தொழில்நுட்ப / தொழில்சார் (தயவு செய்து பிரதிகளை இணைக்கவும்) :----.

11. உரிய துறை தொடர்பாக பெற்றுள்ள அனுபவம் :----.

மேலே 10,11 இற்குரிய தகைமைகளை உறுதிப் படுத்துகின்ற சான்றிதழ்களை இணைப்பாக சமர்ப் பிப்பது அத்தியாவசியமாகும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

12. பரீட்சைக் கட்டணம் :

பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் இலக்கம் : | S | L | D | | | | | | | | | | | |

| 1,000 ரூபா பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும். (பற்றுச்சீட்டின் பிரதியை உங்கள் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.) |
|---|

13. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கின்ற ............................. (முழுப் பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் என்றும், ............................ ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்து கின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
உத்தியோகபூர்வ முத்திரை :----.

14. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் இத்தால் உறுதி கூறுகின்றேன். மேலும், இதில் உள்ளடங்கும் யாதாயினுமொரு தகவல் பிழையானதென்றும், உண்மைக்கு மாறான தென்றும் கண்டறியப்படும் பட்சத்தில், அவ்வாறு கண்டறியப்படுவது பதவிக்குத் தெரிவு செய்யப்பட முன்னர் இடம்பெறுமாயின் நான் தகுதியற்றவனாவேன் என்றும், நியமனம் பெற்ற பின்னர் கண்டறியப்பட்டால் எந்தவொரு நட்டஈடும் செலுத்தப்படாது பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்**

மேற்படி விண்ணப்பதாரரான திரு./ திருமதி/ செல்வி ...................... தற்போது இந்த அமைச்சில் / திணைக்களத்தில் ........................... ஆக நிரந்தர /தற்காலிக/அமய ஊழியராக சேவையாற்றுகின்றார் என்றும், இப்பதவிக்கு இவர் தெரிவு செய்யப்படுவாராயின், அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்றும் அறியத்தருகின்றேன்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

----
(உத்தியோகபூர்வ முத்திரை).

பதவி :----.
திகதி :----.

6-720

## சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

### மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுநர் சேவைகள் மற்றும் துணை மருத்துவ சேவைகளின் பயிற்சிக்கான பயிலுநர்கள் ஆட்சேர்ப்பு - 2016

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சில் நிறைவுகாண் தொழில்வல்லுநர் சேவைகள் மற்றும் துணை மருத்துவத் துறையின்கீழ், கீழே குறித்த தொழிற்பயிற்சிக்காக பயிலுநர்களை இணைத்துக்கொள்வதற்காக தகைமைகளைப் பெற்றுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| குறியீட்டு இல. | தொழிற் பயிற்சியின் பெயர் | பயிற்சிக்கான காலம் | தொழிற்பயிற்சி வழங்கப்படும் மொழி |
|---|---|---|---|
| 1 | மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | | |
| 2 | மருந்தாளர் | 2 வருடங்கள் | ஆங்கிலம் |
| 3 | பௌதீக சிகிச்சையாளர் | 2 வருடங்கள் | ஆங்கிலம் |
| 4 | தொழில்வழி சிகிச்சையாளர் | 2 வருடங்கள் | ஆங்கிலம் |
| 5 | கதிரியலாளர் | 2 வருடங்கள் | ஆங்கிலம் |
| 6 | கண் தொழில்நுட்பவியலாளர் | 2 வருடங்கள் | ஆங்கிலம் |
| 7 | பற் சிகிச்சையாளர் | 2 வருடங்கள் | ஆங்கிலம் |
| 8 | பாடசாலை பற் சிகிச்சையாளர் | 2 வருடங்கள் | ஆங்கிலம் |
| 9 | சுகாதார பூச்சியியல் அலுவலர் | 2 வருடங்கள் | ஆங்கிலம் |
| 10 | செயற்கை அவயவ தொழில்நுட்பவியலாளர் | 2 வருடங்கள் | ஆங்கிலம் |
| 11 | பொது சுகாதார பரிசோதகர் | 1 1/ 2 வருடம் (வெளிக்கள பயிற்சி 6 மாதங்கள்) | சிங்களம், தமிழ் |
| 12 | இதயத்துடிப்பு பதிவாளர் | 1 வருடம் | ஆங்கிலம் |
| 13 | மூளை மின் இயக்க பதிவாளர் | 1 வருடம் | ஆங்கிலம் |

2. பயிற்சிக்காக மாகாணங்களில் இருந்து தெரிவுசெய்யப்படும் பயிலுநர்களின் எண்ணிக்கை அம்மாகாணத்திலுள்ள மத்திய அரசின்கீழ் உள்ள மற்றும் மாகாணங்களுக்குரிய வைத்தியசாலைகள், தாபனங்கள் என்பவற்றின் வெற்றிடங்களை அடிப்படையாகக் கொண்டு அரச சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படுகின்றவாறு மாகாண அடிப்படையின்கீழ் தகைமையுள்ளவர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

3. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பயிற்சிக்கு விண்ணப்பிப்பதாயின் இங்கு கடைசியில் குறிப்பிடப்பட்டுள்ள இணைப்பு 1 இன் பிரகாரம் உரிய கற்கை நெறிகளுக்கு விண்ணப்பித்தல் வேண்டும். அந்த இணைப்பு அமைச்சினால் கற்கைநெறிகளுக்காக பயிலுநர்கள் தெரிவுசெய்யப்படுகின்ற முன்னுரிமை வரிசைக்கிரமப்படி தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, விண்ணப்பதாரியினால் கற்கைநெறிகள் பல கோரப்பட்டிருப்பின், கற்கை நெறிக்காக தெரிவுசெய்யப்படுவது இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள வரிசைக்கிரமப்படி மேற்கொள்ளப்படும். விண்ணப்பதாரிகள் முதலாவதாக தெரிவுசெய்யப்படுகின்ற கற்கை நெறிக்காக இணைய வேண்டும் என்பதுடன், அவருக்கு அடுத்த கற்கை நெறிக்கு இணைந்துகொள்வதற்கு அல்லது வேறு பயிற்சி நெறிக்கு மாறுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

4. இது ஒரு முழுநேரப் பயிற்சிநெறி என்பதால் வார நாட்கள் ஐந்துடன் சனிக்கிழமை காலை நேரத்தில் பல்கலைக்கழகம் அல்லது சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கீழ் அல்லது வேறு அரசாங்கத் தாபனங்களில் அல்லது வேறு எந்த முழுநேரப் பயிற்சி நெறியில் உள்ள மாணவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியாது. யாராவது அவ்வாறு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது அது வெளிப்படுத்துமிடத்து பயிற்சிநெறி/ பதவியிலிருந்து நீக்கப்பட்டு அதுவரை அரசாங்கத்தால் அவருக்காகச் செலவு செய்த அனைத்துச் செலவுகளும் அவரிடமிருந்து அறவிடப்படும். பல்கலைக்கழகத்தில்

முழுநேரப் பயிற்சிநெறியில் உள்ள ஒருவர் இதற்கு விண்ணப்பிப்பாராயின் அதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறையில் செயற்பட வேண்டும். சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின்கீழ் முழுநேரப் பயிற்சி நெறியில் பதிவுசெய்தவர்கள் விண்ணப்பிக்க முடியாது.

4.1 எந்தத் தினத்திலாவது நீங்கள் எந்தவொரு பல்கலைக்கழகத்தில் அல்லது அரச தாபனத்தில் முழுநேரப் பயிற்சி நெறிக்கு பதிவு செய்திருப்பின்அல்லது பதிவுசெய்ய இருப்பின், கற்கை நெறிக்கு இணைத்துக் கொள்ளும் திகதியாகும்போது நீங்கள் அதை இரத்துச் செய்தல் வேண்டும். நீங்கள் பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்டு விரிவுரைகளுக்குச் செல்லாது இருப்பினும் நீங்கள் பல்கலைக்கழக மாணவராகவே கருதப்படுவீர்கள் என்பதால் அவ்வாறான விண்ணப்பதாரர்கள் தமது பெயரை பதிவில் இருந்து நீக்கிக்கொள்ள வேண்டும். தேவையான சந்தர்ப்பத்தில் அதை உறுதி செய்வதற்கும் போதுமான ஆவணங்களை நீங்கள் சமர்ப்பிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

4.2 நீங்கள் யாதேனுமோர் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருப்பின் அந்தப் பட்டம் செல்லுபடியாகும் திகதி (Effective Date) விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளும் திகதி அதற்கு முந்தியதாக இருக்க வேண்டும்.

**கவனத்தில் கொள்ள வேண்டியவை :**

* மேற்குறிப்பிட்ட 4.1 இலிருந்து 4.2 வரையுள்ள சகல நிபந்தனைகளையும் பூர்த்திசெய்யப்பட்டிருப்பின் கட்டாயமாக நீங்கள் விண்ணப்பிக்கும் பயிற்சி நெறிக்காக இணைத்துக்கொள்ளப்படுகின்றீர்கள் என இந்த வர்த்தமானி அறிவித்தலில் எந்த இடத்திலும் அல்லது பந்தியிலும் **குறிப்பிடப்படவில்லை** என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

* அந்த 4.1 இலிருந்து 4.2 வரையிலான நிபந்தனை களைப் பூர்த்தி செய்திருப்பினும், உங்களது தகைமை கள் போதியளவு இல்லாமை அல்லது இங்கு குறிப்பிட்டுள்ள வேறு நிபந்தனைகள் பூரணமில்லாதிருப்பின் எக்காரணங்கொண்டும் இப்பயிற்சி நெறிக்கு நீங்கள் தகைமையற்றவரென நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

* அதேபோல் நீங்கள் போதியளவு Z புள்ளிகளைப் பெற்றுள்ளவராகவும் மற்றைய அனைத்து நிபந்தனை களைப் பூர்த்திசெய்தவராகவும் இருந்து 4.1 இலிருந்து 4.2 வரையான நிபந்தனைகள் பூர்த்திசெய்யாது இருப்பின் நீங்கள் எக்காரணங்கொண்டும் இப்பயிற்சி நெறிக்கு தகைமையற்றவரென நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

5. **கல்வித் தகைமைகளும் பதவிக்குத் தேவையான வேறு தகைமைகளும் :**

| இல. | பயிற்சி நெறி | க. பொ. த. (சா. த.) பெறுபேறு | க. பொ. த. (உ. த.) பெறுபேறு | பயிற்சிக்கான விசேட தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்கள மொழி/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் க.பொ.த. (சா. த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில பாடத்தில் சித்தியடைந்திருத்தல் | 2014, 2015 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் இரசாயனவியலில் திறமைச் சித்தியுடன் பௌதிகவியல், உயிரியல், விவசாயம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் | இல்லை |

| இல. | பயிற்சி நெறி | க. பொ. த. (சா. த.) பெறுபேறு | க. பொ. த. (உ. த.) பெறுபேறு | பயிற்சிக்கான விசேட தகைமைகள் |
|---|---|---|---|---|
| 2 | மருந்தாளர் | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்கள மொழி/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில பாடத்தில் சித்தியடைந்திருத்தல் | 2014, 2015 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் இரசாயனவியலில் திறமைச் சித்தியுடன் பௌதிகவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் | இல்லை |
| 3 | பௌதிக சிகிச்சையாளர் | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்கள மொழி/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் க.பொ.த. (சா. த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில பாடத்தில் சித்தியடைந்திருத்தல் | 2014, 2015 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பௌதிகவியலில் திறமைச் சித்தியுடன் இரசாயனவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் | இல்லை |
| 4 | தொழில்சார் சிகிச்சையாளர் | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்கள மொழி/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் க.பொ.த. (சா. த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில பாடத்தில் சித்தியடைந்திருத்தல் | 2014, 2015 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பௌதிகவியலில் திறமைச் சித்தியுடன் இரசாயனவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் | இல்லை |

| இல. | பயிற்சி நெறி | க. பொ. த. (சா. த.) பெறுபேறு | க. பொ. த. (உ. த.) பெறுபேறு | பயிற்சிக்கான விசேட தகைமைகள் |
|---|---|---|---|---|
| 5 | கதிரியலாளர் | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்கள மொழி/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் க.பொ.த. (சா. த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில பாடத்தில் சித்தியடைந்திருத்தல் | 2014, 2015 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க.பொ.த. (உ. த.) பரீட்சையில் பௌதிகவியலில் திறமைச் சித்தியுடன் இரசாயனவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டில் (2) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் | இல்லை |
| 6 | கண் தொழில்நுட்பவியலாளர் | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்கள மொழி/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தது திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் | 2014, 2015 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பௌதிகவியலில் திறமைச் சித்தியுடன் இரசாயனவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் | இல்லை |
| 7 | பல் தொழில்நுட்பவியலாளர் | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்கள மொழி/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தது திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் | 2014, 2015 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் இரசாயனவியலில் திறமைச் சித்தியுடன் பௌதிகவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டில் (2) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் | இல்லை |

| இல. | பயிற்சி நெறி | க. பொ. த. (சா. த.) பெறுபேறு | க. பொ. த. (உ. த.) பெறுபேறு | பயிற்சிக்கான விசேட தகைமைகள் |
|---|---|---|---|---|
| 8 | பாடசாலை பல் சிகிச்சையாளர் | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்கள மொழி/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தது திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் | 2014, 2015 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானத்தில் திறமைச் சித்தியுடன் இரசாயனவியல், பௌதிகவியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் இரண்டில் (2) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் | * பெண்களுக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.<br>* உயரம் 4 அடி 10 அங்குலம் அல்லது அதற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் விவாகம் ஆகாதவராக இருக்க வேண்டும். |
| 9 | சுகாதார பூச்சியியல் அலுவலர் | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்கள மொழி/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தது திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் | 2014, 2015 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானத்தில் திறமைச் சித்தியுடன் இரசாயனவியல், பௌதிகவியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் | * ஆண்களுக்கு மட்டும் விண்ணப்பிக்க முடியும். |
| 10 | செயற்கை அவயவ தொழில்நுட்பவியலாளர் | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் சிங்களம்/தமிழ் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் | 2014, 2015 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பௌதிகவியல்/ உரியியலில் திறமைச் சித்தியுடன் விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் இரண்டில் (2) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் | இல்லை |

| இல. | பயிற்சி நெறி (சா. த.) பெறுபேறு | க. பொ. த. (உ. த.) பெறுபேறு | க. பொ. த. விசேட தகைமைகள் | பயிற்சிக்கான |
|---|---|---|---|---|
| 11 | பொது சுகாதார பரிசோதகர் | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்கள மொழி/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தது திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற் படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி யடைந்திருத்தல் | 2014, 2015 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம் அல்லது இணைந்த கணிதம் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தியுடன் பௌதிகவியல், இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் இரண்டில் (2) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் | *ஆண்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.<br>* உயரம் 5 அடி 2 அங்குலம் அல்லது அதற்கு மேல் இருக்க வேண்டும். |
| 12 | இதயத்துடிப்பு பதிவாளர் | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்கள மொழி/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தது திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற் படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (6) பாடங்களில் சித்தி யடைந்திருத்தல் | 2014, 2015 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானத்தில் திற மைச் சித்தியுடன் பௌதிகவியல் இரசா யனவியல் ஆகிய பாடங் களில் இரண்டில் (2) ஒரே தடவையில் சித்தியடைந் திருத்தல் | இல்லை |
| 13 | மூளை மின் இயக்கப் பதிவாளர் | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்கள மொழி/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தது திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற் படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (6) பாடங்களில் சித்தி யடைந்திருத்தல் | 2014, 2015 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உரியியல் விஞ்ஞானத்தில் திறமைச் சித்தியுடன் பௌதிகவியலில் இரசாயனவியல் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தி யடைந்திருத்தல் | இல்லை |

**6. ஏனைய தகைமைகள் :**

(அ) கற்கை நெறிகள் 1, 2, 3, 4, 5 மற்றும் 10 இற்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்குக் குறையாமலும், 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் என்றாலும், கற்கைநெறிகள் 6, 7, 8, 9, 11, 12, 13 இற்கான விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்குக் குறையாமலும், 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) பயிற்சியின் பின் மத்திய அரசின் சேவையில் அல்லது மாகாண அரசில் குறைந்தது 10 ஆண்டுகள் சேவை செய்ய விருப்பம் தெரிவித்தல் வேண்டும் ;

(இ) உடல், உள தகுதியுடன் சுகதேகியாகவும் இருக்க வேண்டும் ;

(ஈ) விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் விண்ணப்பிக்கும் திகதிக்கு முன் மூன்று ஆண்டுகள் வசித்து வருபவராக இருக்க வேண்டும்.

7. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) இத்துடன் இணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவம் தயாரித்தல் வேண்டும். இதற்காக ஏ4 அளவு கடதாசியை உபயோகிக்கவும். அவ்விண்ணப்பப்பத்திரத்தில் 1 இலிருந்து 9(அ) வரை 1 ஆம் பக்கத்திலும் 9(ஆ) இலிருந்து 13 வரை 2 ஆம் பக்கத்திலும் வரும் வகையிலும் தயாரித்தல் வேண்டும். பயிற்சி நெறிகள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவைகளுக்கு விண்ணப்பிப்பதாயின், அவ்வாறான விண்ணப்பதாரிகள் ஒரு விண்ணப்பத்தை மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் இலக்கம் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இணைப்பு 1 படிவத்தினை இணைத்தல் வேண்டும். (பயிற்சி நெறிகளுக்காக தெரிவுசெய்யப்படும் முதன்மைப் பட்டியல் இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.)

(ஆ) விண்ணப்பப்படிவத்தில் "பற்றுச்சீட்டு" எனும் இடத்தில் "இலங்கை வங்கி, தப்ரோபேன் கிளை, இலக்கம் 7041318 - "சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் - பரீட்சைக் கட்டணம் அறவிடல்" எனும் கணக்கிற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு வரவு வைத்து பற்றுச்சீட்டைக் கழறாதவாறு ஒட்ட வேண்டும். (பற்றுச்சீட்டை ஒட்டுவதற்கு முன் அதன் பிரதியொன்றை வைத்துக்கொள்ளவும்.) :

| | |
|---|---|
| கற்கைநெறி 1 இற்காக | - 300 ரூபா |
| கற்கைநெறிகள் 2 இற்காக | - 500 ரூபா |
| கற்கைநெறிகள் 3 இற்காக | - 800 ரூபா |
| கற்கைநெறிகள் 4 இற்காக | - 1,100 ரூபா |
| கற்கைநெறிகள் 5 அல்லது அதற்கு மேல் | - 1,400 ரூபா |

(இ) இலங்கை நிர்வாக சேவை/கல்விச் சேவை/அரச கணக்காளர் சேவை/அரச பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/சட்டத்தரணி அல்லது வருடாந்த சம்பளம் 3,44,452 ரூபாவுக்குக் குறையாத சம்பளம் பெறும், ஓய்வூதிய பதவி வகிக்கும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஈ) முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்துடன், உரிய மாதிரிப்படிவத்தையும் இணைத்து அந்த கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நிறைவுகாண் மருத்துவ சேவை மற்றும் உதவி மருத்துவ சேவையின் பயிற்சி நெறிக்காக பயிலுநர்களை இணைத்துக்கொள்ளல் - 2016" எனக் குறிப்பிட்டு, அதற்குக்கீழ் நீங்கள் கோரும் மாகாணம் மற்றும் மாவட்டம் குறிப்பிட்டு 2016.07.20 ஆந் திகதிக்கு முன் "பணிப்பாளர் (நிர்வாகம்) 2, சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு, 'சுவசிறிபாய', இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு கிடைக்கும்படி பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

8. அரசாங்கத்தின் அல்லது அரசாங்கத்துடன் இணைந்த தாபனங்களில் சேவை செய்வோர் தமது விண்ணப்பங்களை அவர்களது திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பப்படல் வேண்டும். மேலும் இது வெளிவாரியாக இணைத்துக்கொள்ளல் என்பதையும் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

9. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறியத்தரப்பட மாட்டாது.

10. முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவை அடங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

*12.* மேற்குறிப்பிட்ட தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளில் Z புள்ளிகளின்படி தயாரிக்கப்படும் முதன்மைப் புள்ளிகளின் ஆவணத்தினூடாகத் தெரிவுசெய்யப்படுபவர்கள் மாத்திரம் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் பிற நிறுவனங்களின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் அடங்கிய நேர்முகப் பரீட்சைக் குழுவிற்கு நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின்போது கீழே குறிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப்பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் :

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ் மற்றும் Z - புள்ளிப் பெறுமானத்தைக் குறிக்கும் சான்றிதழின் மூலப்பிரதி (இதன் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.) ;

(இ) க. பொ. த. (சா. த.) பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ் மூலப்பிரதி (இதன் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்) ;

(ஈ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரம். (உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.) ;

(உ) மேற்படி 6(ஈ) இன் பிரகாரம் வதிவிடத்தை உறுதிப்படுத்த பிரதேச செயலாளரினால் துணை ஒப்பமிட்டு கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட வதிவிடம் பற்றிய சான்றிதழ் (கிராம அலுவலர் சான்றிதழ்) ;

(ஊ) தான் திருமணமாகாதவர் என்பதை நிரூபிக்க சமாதான நீதவான் ஒருவரின் முன்னிலையில் கையொப்பமிட்ட சத்தியக்கடதாசி (இது பாடசாலை பற் சிகிச்சையாளர் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் உரித்தாகும்).

*13.* **பயிற்சித் திட்டம்** :

(i) நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகளில் தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் பயிற்சிநெறிக்காக அந்தந்த பயிற்சிப் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படுவர். கற்கைநெறிகள் இலக்கம் I ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிகளில் நடாத்தப்படும்.

(ii) பயிலுநர்கள் பயிற்சிப் பாடசாலையின் நடைமுறையிலிருக்கும் சட்டவிதிகளுக்கும் மற்றும் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் கட்டளைக்கும் கட்டுப்படல் வேண்டும்.

(iii) பயிற்சிக் காலத்தினுள் நடத்தப்படும் பரீட்சைகளில் சித்தியடையத் தவறும் அல்லது வேலை மற்றும் நடத்தைகளில் அதிருப்தி கண்டறியப்படும் அல்லது பயிற்சிப் பாடசாலை விதிமுறைகளைப் பின்பற்றத் தவறும் பயிற்சியாளர்கள் இப்பயிற்சிக் காலத்தின் எச்சந்தர்ப்பத்திலும் எதுவித நட்டஈடுகளும் வழங்கப்படாமல் பயிற்சியில் இருந்து நீக்கப்படுவர்.

(iv) இப்பயிற்சிக் காலத்தின்போது பயிலுநர்களுக்கு பொது நிருவாக சுற்றறிக்கை 03/ 2016 இன் விதிமுறைகளுக்கு அமைய மாதாந்த கொடுப்பனவொன்று வழங்கப்படும் ;

(v) பயிலுநர்கள் பயிற்சிப் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படும்போது பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதாகவும், பயிற்சியின்போது இடைநடுவில் விலக மாட்டேன் எனவும், பயிற்சியை முழுமையாக நிறைவுசெய்த பின் உரிய பதவியில் நியமனம் கிடைத்தால் குறைந்தபட்சம் பத்து (10) வருடங்கள் அரச சேவையில்/ மாகாண அரச சேவையின்கீழ் உரிய பதவியில் சேவையாற்றுவேன் எனவும், சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தம் ஒன்றிற்கும் பிணை ஒன்றிற்கும் வருதல் வேண்டும். பயிற்சி நெறியிலிருந்து விலகுவதாயின் அல்லது இடைநடுவில் விட்டால் அல்லது மேற்குறிப்பிட்ட III இன் பிரகாரம்

பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது நியமனம் பெற்று பத்து (10) வருடங்கள் மேற்குறிப்பிட்டவாறு உரிய பதவியில் சேவையாற்றத் தவறினால் பயிற்சிக் காலத்தில் அரசாங்கம் அவருக்காக வழங்கிய கொடுப்பனவுகள், அரசினால் செலவிடப்பட்ட செலவுகளையும் மற்றும் பிணைக்குரிய பணத்தை அவர் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சிற்கு மீள் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறினால், அவற்றை மீளப் பெறுவதற்கான சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

14. **சேவைக்கு நியமிக்கும் விதிகள்**.- பயிற்சியின் இறுதியில் நிரந்தர நியமனம் வழங்குதல் அரசாங்கத்தின் கட்டாயமல்ல. ஆனாலும் பயிற்சியாளர்கள் பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட பாடநெறிக்குரிய ஆட்சேர்ப்பு சட்டதிட்டங்களுக்கு மற்றும் பயிற்சி நிறைவுற்ற திகதியாகும்போது நிலவுகின்ற வெற்றிடங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பட்டியலுக்காக சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் இடமாற்றம் வழங்கப்பட்ட பின்னர் எஞ்சியிருக்கும் வெற்றிடங்களுக்காக வழங்கப்பட்ட விருப்பத் தெரிவு மற்றும் பயிற்சிநெறி முடிவில் நடத்தப்படும் இறுதி எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் மூலம் தயாரிக்கப்படும் திறமை அட்டவணை அடிப்படையில் உரிய பதவியின் III ஆம் வகுப்பிற்கு நியமிப்பது தொடர்பில் கவனம் கொள்ளப்படும்.

பயிற்சிநெறி முடிவில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டால் இலக்கம் 1-10 வரை MT - 6 - 2016 உம், இலக்கம் 11 இற்கு MT - 5 - 2016 உம், இலக்கம் 12 - 13 இற்கு MT - 4 - 2016 உம் உரிய சம்பளத் திட்டத்தின் பிரகாரம் பொது நிர்வாக சுற்றறிக்கை 03/ 2016 இன் விதிமுறைகளுக்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.

| சம்பள முறை | சம்பள திட்டம் |
|---|---|
| MT - 4 - 2016 | ரூபா 31,190 - 445 x 10 - 660 x 11 - 730 x 10 - 750 x 10 = 57,700 |
| MT - 5 - 2016 | ரூபா 31,635 - 445 x 10 - 660 x 11 - 730 x 10 - 750 x 10 = 58,145 |
| MT - 6 - 2016 | ரூபா 32,080 - 445 x 10 - 660 x 11 - 730 x 10 - 750 x 10 = 58,590 |

15. விண்ணப்பங்களை நிரப்பும் போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை மிகவும் கவனமாகவும் சரியாகவும் நிரப்பவும். பயிற்சிகளின்போது அல்லது நியமனங்கள் வழங்கப்பட்ட பின்னரோ சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை எனக் கண்டுபிடிக்கப்பட்டால் சட்ட ரீதியான நடவடிக்கைகள், மேற்கொள்வதற்காக குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கும், அவ்வாறு வழங்கப்பட்ட நியமனத்தை இரத்துச்செய்து பயிற்சியிலிருந்து, பதவியிலிருந்து இடைநிறுத்தப்படுவதுடன், அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மீண்டும் அரச சேவையில் இணைய முடியாதவாறு கறுப்புப் பட்டியலில் அவரது பெயரைச் சேர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் பயிற்சிக் காலத்தில் அவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவினங்கள், பிணைக்கான நிதி என்பவை செலுத்த வேண்டும். இல்லையேல் அதனைப் பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

16. தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலுநர்கள் உரிய பயிற்சியைத் தொடர்வதற்கும், இலங்கையின் எப்பகுதியிலும் சேவையினை மேற்கொள்ளக் கூடியதாக தமது உடல் மற்றும் உளத் தகுதியினை நிரூபிப்பதற்காக பயிற்சியின் முதல் மாதத்திற்குள் மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், இம்மருத்துவ பரிசோதனையில் தகுதியற்றவர் எனக் கண்டறியப்பட்டால், பயிற்சியைத் தொடர்வதற்கு தகுதியற்றவராகக் கருதப்படுவர்.

17. மேற்கூறப்பட்டபடி சேர்த்துக்கொள்ளப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களும் அரச சேவைக்கான அனைத்துச் சட்டங்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் விதிகள் மற்றும் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கொள்கை அமுலாக்கலுக்கும், நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் அரசினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்பட்டு செயற்பட வேண்டும்.

18. பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சிப் பாடசாலைகளில் விடுதி வசதி அமைச்சினால் வழங்கப்பட மாட்டாது. அவ்வாறு வழங்கப்படின் அதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட இட வாடகை மற்றும் நீர், மின் கட்டணங்கள் செலுத்த வேண்டும்.

19. இப்பயிற்சிக் காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அல்லது தனிப்பட்ட வேலைகளில் ஈடுபடுவதற்கு உரிமை இல்லை. அவ்வாறு பயிற்சியின் பின் நீங்கள் உரிய பதவிக்கு நியமிக்கப்படின் அதன் பின் தனிப்பட்ட சேவையில் ஈடுபடுவதற்கும் உரிமை இல்லை. அவ்வாறு ஈடுபட்டால் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

20. பயிற்சி நெறிக்காக இணைத்துக்கொள்ளல் தொடர்பாக இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக ஏதாவது சிக்கல் நிலை தோன்றினால், அது தொடர்பாக சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரின் முடிவே இறுதியானதாகும். இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஏதாவது முரண்பாடுகள் தோன்றினால், சிங்கள மொழியே வலுவில் இருக்கும்.

அனுர ஜயவிக்கிரம,
செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
"சுவசிறிபாய", இல. 385, வண. பத்தேகம
விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2016, யூன் 05.

இணைப்பு 1

| பயிற்சிநெறிக்காக தெரிவு செய்யப்படும் முன்னுரிமைத் தொடர் | பயிற்சி நெறியின் பெயர் | கோரப்படும் கற்கை நெறிக்கு அமைய 1 தொடக்கம் 13 வரை விருப்பத் தெரிவுக்கேற்ப இலக்கத்தை இடவும் |
|---|---|---|
| 1 | மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | |
| 2 | மருந்தாளர் | |
| 3 | பௌதிக சிகிச்சையாளர் | |
| 4 | தொழில்சார் சிகிச்சையாளர் | |
| 5 | கதிரியலாளர் | |
| 6 | கண் தொழில்நுட்பவியலாளர் | |
| 7 | பல் சிகிச்சையாளர் | |
| 8 | பாடசாலை பல் சிகிச்சையாளர் | |
| 9 | சுகாதார பூச்சியியல் அலுவலர் | |
| 10 | செயற்கை அவயவ தொழில்நுட்பவியலாளர் | |
| 11 | பொது சுகாதார பரிசோதகர் | |
| 12 | இதயத்துடிப்பு பதிவாளர் | |
| 13 | மூளை மின் இயக்கப் பதிவாளர் | |

ஒவ்வொரு பயிற்சி நெறிகளுக்குமாக எனது விருப்பத்தை மேற்குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விருப்பத் தெரிவை எவ்விதத்திலும் மீண்டும் மாற்றம் செய்ய முடியாது என்பதையும், இந்த விருப்பத் தெரிவைத் தவிர வேறு விருப்பத் தெரிவுகளை நான் சமர்ப்பிக்கவில்லை எனவும், சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் நிறைவுகாண் மற்றும் துணை மருத்துவப் பயிற்சி நெறிக்காக தெரிவு செய்யப்படும் முதன்மை அடிப்படையில் நான் தெரிவுசெய்யப்பட்ட கற்கை நெறிக்கு இணைவதற்கு எனது விருப்பத்தை தெரிவிப்பதாகவும், அதற்கு எவ்விதத்திலும் எதிர்ப்புகள் இல்லை எனவும், வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சகல பந்திகளையும் வாசித்து புரிந்து கொண்டேன் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

2016, ..........................

**சமாதான நீதவானின் சான்றிதழ் :**

இந்த விருப்பத் தெரிவைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................................ ஐ நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் எனவும், அவர் .............................................. ஆந் திகதி எனது முன்னிலையில் புரிந்துகொண்டு அவரின் கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதி செய்கின்றேன்.

----,
சமாதான நீதவானின் கையொப்பம்.
பதவி முத்திரை

சமாதான நீதவானின் முழுப்பெயர் :----.
முகவரி :------------------------------
--------------------------------------
--------------------------------------
--------------------------------------
திகதி :----.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**துணை மருத்துவ துறையின்கீழ் குடும்பநல சேவை உத்தியோகத்தர்கள் பயிற்சிக்கான பயிலுநர்கள் ஆட்சேர்ப்பு - 2016**

விண்ணப்பத்தை நிரப்புவதற்கு முன் வர்த்தமானியின் அறிவித்தலை முழுமையாக வாசிக்கவும்.

* விண்ணப்பிக்கும் பாடநெறி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

* விண்ணப்பிக்கும் பாடநெறி (ஆங்கிலத்தில்) :----.

1. (அ) முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில், உ+ம் A. B. C. SILVA) :----.

(ஆ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

(இ) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. (பிரதியொன்றை இணைக்கவும்) :----.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. தபால் முகவரி : சிங்களத்தில்/ தமிழில் ஆங்கிலத்தில்

| சிங்களத்தில்/ தமிழில் | ஆங்கிலத்தில் |
|---|---|
| .............................. | .............................. |
| .............................. | .............................. |
| .............................. | .............................. |
| .............................. | .............................. |

4. (அ) நிரந்தர முகவரி : சிங்களத்தில்/ தமிழில் ஆங்கிலத்தில்

| சிங்களத்தில்/ தமிழில் | ஆங்கிலத்தில் |
|---|---|
| .............................. | .............................. |
| .............................. | .............................. |
| .............................. | .............................. |
| .............................. | .............................. |

(ஆ) தொலைபேசி இலக்கம் :
கையடக்க :----. நிலையான :----.

(இ) வசிக்கும் மாவட்டம் (சிங்களத்தில்/ தமிழில் :----.
ஆங்கிலத்தில்) :----.

(ஈ) நீங்கள் இந்த மாவட்டத்தில் நிரந்தர வதிவிடமுடையவரா ? ஆம்/ இல்லை :----.

5. பிறந்த திகதி :
ஆண்டு ---- மாதம் ---- திகதி

2016.07.20 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

6. உயரம் : ---- அடி ---- அங்குலம்.

7. பால் :

ஆண் ☐ பெண் ☐

8. இலங்கைப் பிரசையா ?

ஆம் ☐ இல்லை ☐

9. விவாக நிலைமை :

விவாகமானவர் ☐ விவாகமாகாதவர் ☐

10. கல்வித் தகைமைகள் :

(அ) க. பொ. த. (உ. த.) பரீட்சை Z புள்ளியுடனான பெறுபேற்றுப் பத்திரத்தின் உறுதி செய்த பிரதியை இணைக்கவும்.
பரீட்சைக்குத் தோற்றிய மாவட்டம் :----.
பாடத்துறை :----.
பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு :----.
சுட்டெண் :----.
Z புள்ளி :----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |

க. பொ. த. (சா. த.) பரீட்சை பெறுபேற்றுப்பத்திரம் (உறுதிப்படுத்தப்பட்ட பெறுபேற்றுப் பத்திரத்தை இணைக்கவும்.) :

| பாடம் | முதலாம் அமர்வு | | இரண்டாம் அமர்வு | |
|---|---|---|---|---|
| | வருடம் | | வருடம் | |
| | சுட்டெண் | | சுட்டெண் | |
| 1 சிங்கள மொழி/ தமிழ் மொழி | | | | |
| 2 கணிதம் | | | | |
| 3 விஞ்ஞானம் | | | | |
| 4 ஆங்கிலம் | | | | |
| 5 | | | | |
| 6 | | | | |
| 7 | | | | |
| 8 | | | | |
| 9 | | | | |
| 10 | | | | |
| 11 | | | | |
| 12 | | | | |

11. ஏதாவது குற்றச்செயலுக்காக நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா ? ஆம் ☐ இல்லை ☐

(பொருத்தமான கூட்டில் " ✓ " குறியிடுக.)

ஆம் எனில் தயவுசெய்து காரணத்தைக் குறிப்பிடுக :----------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------------------------------

12. **விண்ணப்பதாரியின் உறுதி மொழி** :

(அ) வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நன்கு வாசித்தும் அதிலுள்ள நிபந்தனைகளை நன்கு அறிந்தும் என்னால் இவ்விண்ணப்பப்பத்திரம் நிரப்பப்பட்டதென்றும் நான் எந்தவொரு முழுநேர பாடநெறியில் ஈடுபடவில்லை என்றும் எனது அறிவுக்கெட்டியவரையில் இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ளவை அனைத்தும் உண்மை யானவை எனவும்,

(ஆ) இங்கு என்னால் கொடுக்கப்பட்ட விபரங்களில் ஏதாவது பிழையென அல்லது தவறு எனக் காணுமிடத்து நான் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என நான் நன்கறிவேன்.

பற்றுச்சீட்டை கழராத விதத்தில் இங்கு ஒட்டவும்

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

13. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.**- இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரியான செல்வி ....... ............................... அவர்கள் எனக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சயமானவர் என்றும் அவரது கையொப்பத்தை எனது முன்னிலையில் ................................. ஆந் திகதி இட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
(பதவி முத்திரையுடன்)

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

6-749

---

## சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

மொழி சிகிச்சையாளர் பதவிக்கு இணைத்துக்கொள்ளல் - 2016

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற வைத்தியசாலைகள் மற்றும் மாகாண சபையின்கீழ் நிருவகிக்கப்படுகின்ற வைத்தியசாலைகளுக்கு மொழி சிகிச்சையாளர் III ஆம் தரத்தில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு இணைத்துக்கொள்வதற்காக பின்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பதவிக்கான கல்வித் தகைமைகள்** :

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் மொழி சிகிச்சையாளர் தொடர்பான பட்டம் அல்லது மொழி சிகிச்சையாளர் தொடர்பாக 2 வருடத்திற்குக் குறையாத முழுநேர டிப்ளோமாவைப் பெற்றுக்கொண்டிருத்தல்.

3. **வேறு பொதுத் தகைமைகள்** :

(அ) 2016.07.20 ஆந் திகதியன்று 21 வயதுக் குறையாத மற்றும் 35 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) உரிய பட்டம் அல்லது டிப்ளோமா செல்லுபடியாகும் திகதி விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னதாக இருத்தல் வேண்டும் ;

(இ) இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவு உடல், உள ஆரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு விண்ணப்பதாரிகளினால் சகல தகைமைகளும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

4. **விண்ணப்பிக்கும் முறை** :

(அ) இத்தோடு இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கமைவாக ஏ4 அளவு கொண்ட தாளில் 1-9 வரை முதல் பக்கத்திலும், 10-13 வரையான விபரங்களை இரண்டாம் பக்கத்திலும் உள்ளடக்குவதற்கு ஏற்ற முறையில் விண்ணப்பங்களைத் தயாரிக்க வேண்டும்.

(ஆ) விண்ணப்பத்தில் "பற்றுச்சீட்டு" எனும் இடத்தில் "இலங்கை வங்கி, தெப்ர பிறேன், இல. 7041318, "சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் - பரீட்சைக் கட்டணம் அறவிடல்" எனும் கணக்கிற்கு 500 ரூபாவை வரவு வைத்து பற்றுச்சீட்டைக் கழறாதவாறு ஒட்ட வேண்டும். (பற்றுச்சீட்டை ஒட்டுவதற்கு முன் அதன் பிரதி ஒன்றை வைத்துக்கொள்ளவும்).

(இ) அரச பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/முப்படைகளின் அதிகாரம்பெற்ற உததியோகத்தர் அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தல் செய்யக்கூடிய பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது 3,34,452 ரூபாவுக்கு மேற்பட்ட வருட சம்பளம் பெறும் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவிநிலை தர பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தரினால் விண்ணப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஈ) முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பம் 9" x 4" அளவு கொண்ட கடித உறையில் இட்டு, அந்தக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மொழி சிகிச்சையாளர் பதவிக்கு இணைத்துக்கொள்ளல் - 2016" எனக் குறிப்பிட்டு 2016.07.20 ஆந் திகதிக்கு முன்னர் "பணிப்பாளர்-நிர்வாகம் 2, சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு, 'சுவசிரிபாய', இல. 385, வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

5. அரச அல்லது அரசுடன் இணைந்த நிறுவனங்களில் கடமையாற்றுபவர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

6. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது என்பதுடன், உரிய தினத்திற்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. **ஆட்சேர்ப்பு முறை**.- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் அல்லது அவரினால் அனுமதியளிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள் உடற்தகைமை மற்றும் தகைமைகளை பரிசீலித்துப் பார்க்கும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக இணைத்துக்கொள்ளப்படுவர். (இணைத்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.)

8. எழுத்துப் பரீட்சை கீழ்வரும் விடயங்களில் நடைபெறும் :

| வினாப்பத்திரத்தின் பெயர் | விடய உள்ளடக்கம் | காலம் | அதிகூடிய புள்ளி | சித்தியடைய பெறவேண்டிய புள்ளி |
|---|---|---|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | சொற்கள் மற்றும் உருவமாக வழங்கும் சிக்கல் தொடர்பாக விண்ணப்பதாரி வெளிப்படுத்தும் ஆற்றல் மற்றும் வெளிப்படுத்தும் பிரச்சினைகளை விளங்கிக்கொள்ளும் ஆற்றல், குறிப் பிட்ட கால எல்லை மற்றும் சந்தர்ப் பத்திற்குள் தொடர்பை விளங்கிக் கொள்வதை, விண்ணப்பதாரி கொண்டுள்ள திறமையைக் கணிப் பிடுதல் இதன் நோக்கமாகும். | 1 மணித்தியாலம் | 100 | 40% |

| வினாப்பத்திரத்தின் பெயர் | விடய உள்ளடக்கம் | காலம் | அதிகூடிய புள்ளி | சித்தியடைய பெறவேண்டிய புள்ளி |
|---|---|---|---|---|
| 2. பொது அறிவு | மொழி சிகிச்சையாளர் பதவிக்கு உரிய அறிவு சம்பந்தமாக விண்ணப்பதாரி கொண்டுள்ள திறமையை கணிப் பிடுதல் இதன் நோக்கமாகும். | 1 மணித்தியாலம் | 100 | 40% |

9. விண்ணப்பதாரியை அடையாளப்படுத்துதல்.- எல்லாவிதத்திலும் பூரணமாக்கப்பட்ட விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் மாத்திரமே எழுத்துப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

எழுத்துப் பரீட்சையின்போது தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பின்வருபவை ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;

10. **சேவையில் இணைத்துக்கொள்வதற்கான நியதிகள்.-**

(அ) இப்பதவி 3 வருட தகுதிகாண் காலத்திற்குட்பட்டதாகும்.

(ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கை 07/2007 அல்லது அதற்கு அமைவான சுற்றுநிருபங்களின் பிரகாரம் மொழித் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(இ) 3 வருடத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(ஈ) இப்பதவி அரச சேவை ஆணைக்குழுவின் விதிமுறைகள், நிதிப்பிரமாணம் மற்றும் தாபன விதிக்கோவையின் விதிமுறைகளுக்கு அமைவானதாகும்.

11. பதவிகளுக்கு நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கை தீர்மானிக்கப்படுவது அச்சந்தர்ப்பத்தில் உள்ள பதவி வெற்றிட அளவினைப் பொருத்ததாகும். அதன் பிரகாரம் உரிய பதவியில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு தீர்மானித்தால் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் நிபந்தனைகள் மற்றும் வெற்றிடங்களின் அடிப்படையில் குறித்த பதவியில் III ஆம் தரத்திற்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மொழி சிகிச்சையாளர் பதவிக்கு பொது நிர்வாக சுற்றறிக்கை 3/2016 இன்படி, MT - 5-2016 இன் பிரகாரம் ரூபா 31,635 - 445 x 10 - 660 x 11 - 730 x 10 - 750 x 10 - 58,145 எனும் சம்பள நிலை உரித்தாவதுடன், கொடுப்பனவு பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் பிரகாரம் வழங்கப்படும்.

12. விண்ணப்பத்தை நிரப்பும்போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் மற்றும் விவரங்களை மிகவும் கவனமாகவும் பிழையின்றியும் உள்ளடக்கவும் பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளும் போதும் நியமனம் பெற்ற பின்பும் மேற்படி சான்றிதழ்கள் பொய்யானவை என நிரூபணமாகினால், சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கும், வழங்கப்பட்ட நியமனம் இரத்துச்செய்யப்பட்டு வழங்கப்படும் பதவியிலிருந்து நீக்கப்படுவதோடு அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதுடன், மீண்டும் அரச சேவையில் இணைய முடியாதவாறு கறுப்புப் பட்டியலில் அவருடைய பெயர் சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

13. தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் உரிய பயிற்சி நெறியைத் தொடர்வதற்கும் மற்றும் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை உறுதிப்படுத்துவதற்கு பயிற்சியின் முதல் மாதத்திற்குள் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். மருத்துவ பரிசோதனையின்போது தகுதியற்றவராகக் காணப்படுமாயின் விண்ணப்பதாரிகள் பயிற்சியைத் தொடர்வதற்கு தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்.

14. மேற்படி இணைத்துக்கொள்ளப்பட்ட சகலரும் அரச ஊழியர்களுக்கான சகல சட்ட திட்டங்களுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி தாபன விதிக்கோவை, சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கட்டளைகள், நிதிப்பிரமாணம் மற்றும் ஏனைய சட்டதிட்டங்கள், அரசினால் காலத்திற்குக்காலம் வழங்கப்படுகின்ற சட்டதிட்டங்கள், கட்டளைகள் என்பவற்றிற்கு நீங்கள் கட்டுப்படல் வேண்டும்.

15. மொழி சிகிச்சையாளர் பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளல் தொடர்பாக இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் உள்வாங்கப்பட்ட அல்லது உள்வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பாக சிக்கல்கள் தோன்றினால் சுகாதார, போசணை

மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் முரண்பாடுகள் ஏற்படுமிடத்து, சிங்கள மொழியே அதிகாரத்தில் இருக்கும்.

அனுர ஜயவிக்கிரம,
செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
"சுவசிரிபாய",
இல. 385, வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2016 .........

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு**

மொழி சிகிச்சையாளர் பதவிக்கு இணைத்துக்கொள்ளல் - 2016

விண்ணப்பப்படிவத்தை நிரப்புவதற்கு முன் வர்த்தமானி அறிவித்தலை முழுமையாக வாசிக்கவும்.

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் - A. B. C. Silva)

(ஆ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(இ) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் (பிரதியொன்றை இணைக்கவும்) : | | | | | | | | | | |

3. தபால் முகவரி :

| சிங்களத்தில்/ தமிழில் | ஆங்கிலத்தில் |
|---|---|
| ............................................ | ............................................ |
| ............................................ | ............................................ |
| ............................................ | ............................................ |

4. (அ) நிரந்தர முகவரி :-

| சிங்களத்தில்/ தமிழில் | ஆங்கிலத்தில் |
|---|---|
| ............................................ | ............................................ |
| ............................................ | ............................................ |
| ............................................ | ............................................ |

(ஆ) தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கையடக்க | | | | | | | | | | |
| நிலையான | | | | | | | | | | |

(இ) வசிக்கும் மாவட்டம் :-
சிங்களத்தில்/ தமிழில் :..............................................
ஆங்கிலத்தில் :..............................................

(ஈ) நீங்கள் இந்த மாவட்டத்தில் நிரந்தர வதிவிடமுடையவரா ? ஆம்/ இல்லை :..............................................

(உ) ஆம் எனின், எவ்வளவு காலம் ? :......................................

5. பிறந்த திகதி :

ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.

2016.07.20 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

6. பால் (பெண்/ ஆண்) :

பெண் ☐ ஆண் ☐

7. நீங்கள் இலங்கைப் பிரசையா ?

ஆம் ☐ இல்லை ☐

8. விவாக நிலைமை :

விவாகமானவர் ☐ விவாகமாகாதவர் ☐

9. **கல்வித் தகைமைகள்** :-

| | பெற்ற பட்டம்/ டிப்ளோமா | தரம் | சிறப்பு பொது மதிப்பீடு (GPA) பட்டம் செல்லுபடியாகும் திகதி | பல்கலைக் கழகம் | கல்வி ஆண்டு |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |

10. நீங்கள் ஏதாவது குற்றச் செயலுக்காக நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா ?

ஆம் ☐ இல்லை ☐

(பொருத்தமான கூட்டில் " ✓ " குறியிடுக.)

ஆம் எனில், தயவுசெய்து காரணத்தைக் குறிப்பிடுக :..........................................................

11. **விண்ணப்பதாரியின் உறுதியுரை** :

(அ) வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நன்கு வாசித்தும் அதிலுள்ள நிபந்தனைகளை நன்கு அறிந்தும் என்னால் இவ்விண்ணப்பப்படிவம் நிரப்பப்பட்டதென்றும் எனது அறிவுக்கெட்டியவரையில் இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ளவை அனைத்தும் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

(ஆ) இங்கு என்னால் கொடுக்கப்பட்ட விபரங்களில் ஏதாவது பிழையென அல்லது தவறு எனக் காணுமிடத்து நான் சேவையில் இருந்து விலக்கப்படுவேன் என நான் நன்கறிவேன்.

| |
|---|
| இலங்கை வங்கி, தெப்ர பிறேன் கிளையில், இல. 7041318 எனும் கணக்கிற்கு "சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் - பரீட்சைக் கட்டணம் அறவிடல்" எனும் கணக்கிற்கு 500 ரூபா பணத்தைச் செலுத்தி அந்தப் பற்றுச்சீட்டை கழறாத விதத்தில் இங்கு ஒட்டவும். |

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

12. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிசெய்தல் :**

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி ............................................ . அவர்கள் எனக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சயமானவர் என்றும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில் ..... ...................................... ஆந் திகதி இடப்பட்டது என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
(பதவி முத்திரையுடன்)

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

13. **விண்ணப்பதாரி அரச ஊழியராயின்/ மாகாண அரச சேவையில் ஊழியராயின் திணைக்களத் தலைவரின் உறுதிமொழி : (பொருத்தமற்றவற்றை வெட்டிவிடவும்.) :**

(i) மேற்படி விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி ............................................. அவர்கள் இத்திணைக்களத்தில் ........................................................... பதவி வகித்தார் என உறுதிப்படுத்துகின்றேன்.

(ii) விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என உறுதிப்படுத்துவதுடன், இப்பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவரை தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என அறியத்தருகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
பதவி முத்திரை

திணைக்களத் தலைவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

6-750

## அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2012 (I) (2016)

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இன் அலுவலர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு அமைவான ஒரு வினைத்திறன் காண் தடைப் பரீட்சை 2016, ஒற்றோபர் மாதம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. இப்பரீட்சை உரியதாகும் விண்ணப்பதாரர்களைப் பற்றி 1840/34 ஆம் இலக்க 2013.12.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள அரச முகாமை உதவியாளர் சேவைப் பிரமாணத்தின் 8 ஆம் பந்தியினது ஏற்பாடுகள், 15 ஆம் பந்தியின் இடைக்கால ஏற்பாடுகள் மற்றும் இணைப்பு 4 இல் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

3. முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தரம் III இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினைப் பூர்த்திசெய்திராத ஆனால் (1) அலுவலக முறைமைகள், (2) கணக்கீட்டு முறைமைகள், (3) கணினிப் பரீட்சை என பெயர் குறிப்பிடப்படும் இப்பரீட்சையின் ஒரு பாடத்தை அல்லது சிலவற்றையோ சித்தியெய்தி அல்லது விலக்களிப்புப் பெற்றுள்ள அலுவலர்கள் பாடத்துக்கு பாட அடிப்படையில் இச்சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தரம் III இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் உரிய பாடங்களிலிருந்து விலக்களிப்புப் பெறல் வேண்டும். ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று வருடங்களுக்குள் இப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

4. அரச முகாமை உதவியாளர் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான இப்பரீட்சையானது கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்களும் நகர இலக்கங்களும் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. விண்ணப்பிக்கும் நகரம் மற்றும் நகரங்கள் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது :-

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 05 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| குருநாகல் | 18 |
| அநுராதபுரம் | 19 |
| பதுளை | 21 |
| இரத்தினபுரி | 24 |
| கிளிநொச்சி | 25 |

மேற்படி ஏதேனும் நிலையங்களுக்காக போதிய அளவு பரீட்சார்த்திகள் இல்லாவிட்டால் அந்நிலையம் இரத்துச் செய்யப்படுமென்பதுடன் அதற்கு அண்மித்துள்ள நிலையத்திற்கு பரீட்சார்த்திகள் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவர்.

5. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் ஒழுங்குகள் விதிகள் என்பனவற்றுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்காக விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் வர்த்தமானப் பத்திரிகையில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளன. இவ் ஒழுங்குவிதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாவர்.

6. விண்ணப்பம் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தமது விண்ணப்பங்களை தயாரித்துக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக 2016, யூலை மாதம் 25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு

பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இலக்கம் 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னனராக கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது இருந்த விண்ணப்பதாரியின் பதவி, சேவை நிலையம் மற்றும் பரீட்சை தொடர்பான அனைத்து விடயங்களும் கவனத்தில் எடுக்கப்படுவதுடன் பரீட்சை விண்ணப்பம் அனுப்பியதன் பின்னர் நிகழும் மாற்றங்கள் எவையும் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.

**குறிப்பு**.- இவ்வறிவித்தலுக்கு சமாந்தரமாக மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் பொருத்தமான மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலமும் வேறு நிறுவனங்களின் விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் குறித்த நிறுவனத்தின் மூலமும் வெளியிடப்படும்.

ஒவ்வொரு மாகாண அரச சேவை மற்றும் ஏனைய நிறுவனங்களிலுள்ள அலுவலர்களின் விண்ணப்பங்களை வசதியாக இனங்காண்பதற்கென பின்வரும் குறியீட்டு இலக்கங்கள் பாவிக்கப்பட வேண்டும். உரிய சேவை அல்லது நிறுவனத்தினைக் குறிப்பிடும்போது விண்ணப்பத் தலைப்பில் இவ் இலக்கங்கள் பதியப்படல் வேண்டும். இணைந்த சேவையின் அலுவலர்களுக்கான குறியீட்டு இலக்கம் 10 ஆகும். அவ் இலக்கத்தை விண்ணப்பப்படிவத்தின் வலதுபக்க மேல் மூலையில் உங்கள் சேவை மற்றும் சேவை நிலையத்தில் குறிப்பிட வேண்டும்.

7. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்ினுள் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச் சீட்டு.

மேற்குறிப்பிட்டுள்ள ஓர் ஆவணத்தைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சார்த்தி உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச்செய்யப்படலாம்.

8. **விண்ணப்பப்படிவங்கள்**.- விண்ணப்பப்படிவங்களை "ஏ4" அளவிலான ஒரு தாளில் தயாரித்துக்கொள்ள வேண்டுமென்பதுடன் இலக்கம் 1.0 தொடக்கம் இலக்கம் 3.0 வரையுள்ள பந்திகள் முதலாம் பக்கத்திலும் மிகுதி அடுத்த பக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் அமைதல் வேண்டும். விண்ணப்பத்தைத் தட்டச்சின் மூலம் தயாரித்துக்கொள்ளலாம் எனினும் அதைப் பரீட்சார்த்தி சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் பூர்த்திசெய்ய வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரித்தல் வேண்டுமென்பதுடன ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தை மட்டும் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை அனுப்புதலாகாது. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத மற்றும் முழுமைபெறாத தகவல்களைக் குறிப்பிட்டுள்ளதான விண்ணப்பப்படிவங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். பரீட்சைக்கான விண்ணப்பத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடவும். மேலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பரீட்சை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளது என்பதில் பரீட்சார்த்தி கவனமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

முதல் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. எனினும் அடுத்த தடவைகளின் போது அலுவலர்கள் ஒரே முறையில் முழுப் பரீட்சைக்கு அல்லது இரண்டு பாடங்களுக்குத் தோற்றுவதாயின் பரீட்சைக் கட்டணம் ரூபா 400 உம் ஒரு பாடத்திற்காக மட்டும் தோற்றுவதாயின் பரீட்சைக் கட்டணம் ரூபா 200 உம் ஆகும். இப்பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இல் வரவு வைக்குமாறு தீவிலுள்ள ஏதேனுமொரு தபால் அலுவலகத்துக்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டிவிடவும். மேலும் அதன் புகைப்படப் பிரதியொன்றை தன்வசம் வைத்துக்கொள்வது பிரயோசனப்படலாம். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக்கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது. பரீட்சைக் கட்டணமாக முத்திரை அல்லது காசுக்கட்டளை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் நேரசூசி அட்டையின் ஒரு பிரதியுடன் பரீட்சை அனுமதி அட்டையை அனுப்புவார். விண்ணப்பதாரிகளிடம் அனுமதி அட்டைகள் வழங்கியவுடன் அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பத்திரிகை அறிவிப்பொன்றை வெளியிடும். அவ் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி பரீட்சை நடைபெறும் திகதிக்கு

குறைந்தபட்சம் மூன்று நாட்கள் இருக்கும்போதும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளைக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், விலாசம் மற்றும் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் என்பனவற்றைக் குறிப்பிடல் வேண்டும். கொழும்புக்கு வெளியிலுள்ள விண்ணப்பதாரியாயின் அவ்விபரங்களுடன் தொலைநகல் ஊடாக அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்கு ஏதுவாக விண்ணப்பதாரியாயின் தொலைநகல் இலக்கத்துடன் கூடிய கோரிக்கைக் கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிட்டு தொலைநகல் இலக்கத்துக்கு அனுப்பி விசாரித்தல் பயனுள்ளதாகும். மேலும் உறுதிப்படுத்தலுக்காக பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும்போது விண்ணப்பதாரியின் வசம் உள்ள விண்ணப்பப்படிவப் பிரதி அத்துடன் உரிய பணம் செலுத்த வேண்டுமாயின் பற்றுச்சீட்டின் பிரதியொன்றும், விண்ணப்பப்படிவம் அனுப்பிய கடிதத்தை பதிவுசெய்த பற்றுச்சீட்டும் தயாராக வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

10. விண்ணப்பதாரி ஒருவருக்கு அனுமதி அட்டைகள் வழங்குவது, அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளதாக கருதப்பட மாட்டாது. பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் ஏற்கனவே அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளில் தங்களுடைய கையொப்பங்களை இட்டு அதனை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி அட்டைகள் இல்லாத விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவுகள் செலுத்தப்பட மாட்டாது.

11. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் இப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் தொடர்புடைய சேவையில் சேர்வதற்காக பரீட்சைக்கு தோற்றிய மொழியிலோ அல்லது அரச கரும மொழியொன்றிலோ அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றலாம். போட்டிப் பரீட்சையின்றி சேவைக்குச் சேர்ந்த அலுவலர்கள் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றில் இப்பரீட்சைக்குத் தோற்றலாம். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

12. அலுவலர்கள் தாம் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வேறுபட்ட தடவைகளிலும் தோற்றலாம். எனினும் சித்தி பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

13. பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்படுவதுடன் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும்.

14. **பரீட்சைத் திட்டம்**.- பரீட்சார்த்திகள் பின்வரும் பாடங்கள் உள்ளடங்கிய ஓர் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் :-

| பாடம் | பாட இலக்கம் | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. அலுவலக முறைகள் | 01 | 2 மணித்தியாலம் | 100 |
| 2. கணக்கீட்டு முறைமைகள் | 02 | 2 மணித்தியாலம் | 100 |
| 3. கணினிப் பரீட்சை | 03 | 1 1/ 2 மணித்தியாலம் | 100 |

14.1 *அலுவலக முறைமைகள்*.- (பாட இலக்கம் 01).- அரச அலுவலகங்களில் கையாளப்படுகின்ற அலுவலக முறைகள் பற்றிய அடிப்படை அறிவும், அவ் அறிவினை செய்முறையாக பயன்படுத்தும் திறனும், கடமையுடன் தொடர்புடைய ஆவணங்களை நன்கு புரிந்துகொண்டு தெளிவாக சுருங்கிய குறிப்புகளின் மூலம் தமது கருத்துக்களை/ ஆய்வுகளை சமர்ப்பிக்கும் ஆற்றலும் விதிக்கப்பட்ட கட்டளையின்கீழ் கடிதமொன்றை வரைவுபடுத்தும் திறனும் சோதிக்கப்படும். இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்திருக்கும்.

பகுதி I – சுருக்க விடைகள் எதிர்பார்க்கப்படும் வினாக்களைக் கொண்டமைந்திருக்கும் வினாத்தாளிலேயே விடை அளித்தல் வேண்டும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (25 புள்ளிகள்)

பகுதி II – அமைவு முறை கட்டுரைகளிலான வினாத்தாளாகும். நான்கு வினாக்களில் மூன்றுக்கு விடையளித்தல் வேண்டும். (75 புள்ளிகள்)

14.2 *கணக்கீட்டு முறைமைகள் (பாட இலக்கம் 02).-* அரச அலுவலகங்களில் கையாளப்பட்டு வருகின்ற ஆரம்ப கணக்குகள் மற்றும் கணக்கு கட்டுப்பாட்டுப் புத்தகங்களின் செயற்பாடு பற்றிய அறிவையும் புரிந்துணர்வையும் அளவிட இதனால் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்திருக்கும்.

பகுதி I – சுருக்க விடைகள் எதிர்பார்க்கப்படும் வினாக்களைக் கொண்டமைந்திருக்கும் வினாத்தாளிலேயே விடை அளித்தல் வேண்டும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (25 புள்ளிகள்)

பகுதி II – அமைவு முறை கட்டுரைகளிலான வினாத்தாளாகும். நான்கு வினாக்களில் மூன்றுக்கு விடையளித்தல் வேண்டும். (75 புள்ளிகள்)

14.3 கணினிப் பரீட்சை (பாட இலக்கம் 03).- பரீட்சார்த்தி பின்வரும் ஆற்றல்களைக் கொண்டுள்ளாரா என சோதிப்பது இப்பரீட்சையின் நோக்கமாகும் :-

(i) தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படை எண்ணக்கருக்கள்

(ii) "வின்டோஸ்" இயக்க முறைமை

(iii) கோப்பு முறை

(iv) சொல்முறை வழிப்படுத்தல் :
அடிப்படைத் திறமைகள், திரைக்கு பழக்கப்படல், பாடப்பதிப்பு, பாடங்களை நேர்ப்படுத்தல், எழுத்துரு வகையும் பண்புகளும், பந்தி உள்தள்ளல், வரி வெளிகள் மாற்றுதல், தத்தல் அமைப்பு, பாடத்தைக் கண்டுபிடித்தலும் மாற்றிடுதலும், இலக்கணம் தேசோரஸ்
நிரல்கள், பக்க அமைவு செயற்பாடுகள்
ஆவணங்களை அச்சிடல், அட்டவணைகள் தயாரித்தல், பாடத்தை வரிசைப்படுத்தல்
கோப்பு முகாமை
அஞ்சல் இணைப்பு
'மக்ரோ' தொழிற்பாடு

(v) விரிதாள் :
அடிப்படைத் திறமைகள்
வடிவமைத்தல் (Formatting)
பதிப்பித்தல்
நிரல்களும் வீச்சும், செருகுதல், நீக்குதல்
தகவல்களை வரிசைப்படுத்தல்
வரைபடங்களைப் படைத்தல்
அச்சிடல்
@ பயன்பாடு (@ function)
மக்ரோக்களுடன் பணியாற்றல், கோப்பு முகாமை

(vi) இணையம் :
இணையத்தை அறிமுகப்படுத்தல், உலகளாவிய வலையமைப்பு, எவ்வாறு வழி கண்டறிதல்
இணையச் செயல்முறை

(vii) மின்னஞ்சல் (e-mail) :
அறிமுகம், அடிப்படைத் திறமைகள், அஞ்சல்களைப் பெறுதல், அனுப்புதல், பதிலளித்தல்
- இணைப்புகளுடன் செயலாற்றல், புனைப் பெயர்களை உருவாக்கி பயன்படுத்தல், தகவல்களை இயற்றுதல்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது :-

பகுதி I – பல்விருப்பு/ சுருக்கமான பதில்களை எதிர்பார்க்கும் 40 வினாக்களைக் கொண்டமைந்திருக்கும்.
காலம் : 45 நிமிடங்கள் - (40 புள்ளிகள்)

பகுதி II – பகுதி அமைவு ரீதியிலான 5 வினாக்கள் - காலம் : 45 நிமிடங்கள் - (60 புள்ளிகள்)

**குறிப்பு**.- 2013.12.11 ஆந் திகதிய 1840/ 34 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு 2013.04.02 ஆந் திகதியிலிருந்து

வலுப்பெறும் புதிய அரச முகாமை உதவியாளர் சேவைப் பிரமாணத்தின் இணைப்பு 4 இன்படி தேசிய பயிலுநர் தொழிநுட்பப் பயிற்சி அதிகாரசபையினால் அளிக்கப்படுகின்ற கணினி நடவடிக்கை உத்தரவுச்சீட்டு சான்றிதழ்களைப் பெற்றுள்ள அலுவலர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணினி தொடர்பான பட்டமொன்றைப் பெற்றுள்ள அலுவலர்கள் மூன்றாம்நிலைக் கல்வி மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் (NVQ மட்டம் 4) அல்லது அதற்கு மேல் மட்டத்திலான கணினி சான்றிதழ்களைப் பெற்றுள்ள அலுவலர்கள் இக்கணினி பரீட்சையின் எழுத்துப் பரீட்சையில் இருந்து விலக்களிக்கப்படுகின்றனர்.

15. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

16. இவ்வறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அல்லது முரண்பாடுகள் காணப்படின் சிங்கள அறிவித்தலே வலுவுள்ளதாகும்.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2016, யூன் 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரச முகாமை உதவியாளர் சேவையின் தரம் III இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை-2012 (I) (2016)**

EFFICIENCY BAR EXAMINATION FOR OFFICERS IN GRADE III OF PUBLIC MANAGEMENT ASSISTANTS' SERVICE - 2012 (I) (2016)

(உங்களுக்கு உரித்தான சேவை (இதை பூரணப்படுத்தமுன் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6.0 ஐப் பார்க்கவும்.)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| (வர்த்தமானி அறிவித்தலின் 4.1 இன்படி நீங்கள்பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர் பார்க்கும் நகரங்களை விருப்பு ஒழுங்கின் படி குறிப்பிடவும்.) (இதை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக் கப்பட மாட்டாது) | |

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)
(இது பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துகளில்) :----.
(உதா : Herath Mudiyanselage Saman Kumara Gunawardhana)

1.2 விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதா : Gunawardhana, H. M. S. G.)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.

2.1 அலுவலகத்தின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்): ----.

2.2 அலுவலகத்தின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.3 பிரவேச அட்டை அனுப்பப்படவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3.

3.1 பால் : ஆண் - 0
பெண்- 1

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3.2 பிறந்த திகதி : ஆண்டு [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

3.3 தேசிய ஆள் அடையாள அட்டையின் இலக்கம் :- [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

4. நீங்கள் பரீட்சையில் தோற்ற உள்ள பாடம்/ பாடங்கள் :-
(வர்த்தமானப் பத்திரிகையின் பந்தி 14.0 ஐப் பார்க்கவும்)

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

5. தற்போது வகிக்கும் பதவி -

5.1 பதவி :----.

5.2 நியமனக் கடிதத்தின் இலக்கம் :----.

6.

6.1 நீங்கள் பரீட்சைக்கு முதன்முதலாக தோற்றுகின்றீர்களா ? :----.

6.2 பரீட்சைக்குத் தோற்றுவது முதற்தடவை அல்லாது இருப்பின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :----.

6.3 தபால் அலுவலகம் :----.

6.4 பற்றுச்சீட்டு இலக்கம் :----.

6.5 திகதி :----.

முழுப் பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 400 உம், ஒரு பாடத்திற்காக ரூபா 200 உம் ஆவதுடன் அத்தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இங்கு ஒட்டிவிடவும். பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை தன்வசம் வைத்துக்கொள்வது பிரயோசனப்படலாம்.

மேற்குறிப்பிட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும், மேலே காட்டப்பட்டுள்ள மொழிமூலமாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் என்றும், இத்தால் வெளிப்படுத்துகிறேன். இங்கு ஒட்டப்பட்டுள்ள ரூபா ............................ ..... பெறுமதியான பற்றுச்சீட்டு என சான்றுப்படுத்துகின்றேன். இப்பரீட்சை தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைந்தொழுக நான் உடன்படுகிறேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அந்த திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் விண்ணப்பதாரி கையொப்பமிட வேண்டும்.

**கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்**

எனது அலுவலகத்தின் அலுவலரும் தனிப்பட்ட முறையில் எனக்கு தெரிந்தவருமான திரு./திருமதி/செல்வி ............ .......................... என்பவர் ................ ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளன என்றும் சான்றுப்படுத்துகிறேன்.

----,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(i) மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டதென்றும் ;
(ii) இவ் அலுவலர் இப்பரீட்சைக்கு இதற்கு முன் *தோற்றியுள்ளார்/தோற்றவில்லை என்றும் ;
(iii) அலுவலர் இதற்கு முன்பு பரீட்சைக்கு தோற்றியிருப்பதனால் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு இவ்விண்ணப்பப்படிவத்தில் ஒட்டப்பட்டுள்ளதென்றும் ;
(iv) அலுவலர் இப்பரீட்சைக்குத் தோற்ற தகுதியுடையவர் என்றும்

இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

*தேவையற்றவைகளைக் கீறிவிடவும்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

*6-927*

---

## அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான 1 ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - *2014* (II) (*2016*)

*2012.02.14* ஆந் திகதிய *1745/11* ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு *2012.09.07* ஆந் திகதிய *1774/31* ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் மூலம் திருத்தப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் அனுமதிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பின் பந்தி *10* இலுள்ள ஏற்பாடுகளுக்கமைய *2016*, ஒற்றோபர் மாதத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை ஒன்று நடாத்தப்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

*2*. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இலுள்ள அலுவலர்களுக்கான இப்பரீட்சையானது கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்களின் அட்டவணை மற்றும் நகர இலக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகளின் பற்றாக்குறை அல்லது வேறு ஏதேனும் காரணமாக ஏதேனும் நிலையத்தினை இரத்துச் செய்வதற்கும் மற்றும் பரீட்சார்த்தியின் இரண்டாவது விருப்பு நகரத்திற்கு அமைய மாற்றீடு ஒன்றைத் தீர்மானிப்பதற்கும் பரீட்சை

ஆணையாளர் நாயகம் உரிமையினைக் கொண்டுள்ளார். கீழே தரப்பட்ட நகர அட்டவணை மற்றும் நகர இலக்கங்களை அவதானித்து விண்ணப்பத்தின் உரிய பிரிவு நிரப்பப்படல் வேண்டும். குறிப்பிடப்பட்ட நகரம்/ நகர இலக்கத்தினைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 05 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| குருநாகல் | 18 |
| அநுராதபுரம் | 19 |
| பதுளை | 21 |
| இரத்தினபுரி | 24 |
| கிளிநொச்சி | 25 |

3. (i) இப்பரீட்சையானது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன் அது தொடர்பில் அவரினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவர்.

(ii) பரீட்சார்த்திகளுக்கான விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளானவை இவ்வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் அச்சிடப்பட்டுள்ளன. இவ்விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் எவற்றையாவது மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத் தினால் விதிக்கப்படும் ஏதேனும் தண்டனைக்கு பரீட்சார்த்திகள் உட்படுத்தப்படுவர்.

4. **தகைமை**.- அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்படாத ஆனாலும் உள்ளீர்க்கப்பட விருப்பம் தெரிவித்த அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவராவர்.

**குறிப்பு**.- மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை யிலுள்ள விண்ணப்பதாரிகள் குறித்தான ஏற்பாடுகளானவை இவ்வர்த்தமானி அறிவித்தலுக்கு ஒத்திசைவாக உரிய மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்படும். அம்மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஏனைய நிறுவன அலுவலர்களின் விண்ணப்பங்களை இலகுவாக வேறுபடுத்த விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் பொருத்தமான சேவை அல்லது குறித்த நிறுவனத்துக்குரிய குறியீட்டு இலக்கத்தைக் குறிப்பிட வேண்டும். இணைந்த சேவைக்குரிய அலுவலரின் குறியீட்டு இலக்கம் 10 ஆகும். இவ் இலக்கத்தை விண்ணப்பப்படிவத்தின் வலதுபக்க மேல் மூலையில்த நீங்கள் உரித்தான சேவை எனும் இடத்தில் குறிப்பிடவும்.

5. இப்பரீட்சைக்கான விண்ணப்பமானது இவ் அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் பரீட்சார்த்தியினாலேயே தயாரிக்கப்படுதல் வேண்டும். 2016, யூலை மாதம் 25 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர், ''பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு'' என்னும் முகவரியினை அடையக்கூடியதாக உரிய திணைக்களத் தலைவர் ஊடாக பதிவுத்தபால் மூலம் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரானது குறிப்பிடப்படல் வேண்டும். முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

6. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு கோரப்படுவார்கள். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேலே குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைச் சமர்ப்பிக்கத் தவறுபவர்களின் பரீட்சார்த்தித் தன்மையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் இரத்துச்செய்யப்படலாம். இப்பரீட்சையினை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப் பட்டவராவர். மேலும், அவ்விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் எவற்றையாவது மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத் தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்திகள் உட்படுத்தப்படுவர்.

7. **விண்ணப்பங்கள்**.- பந்தி இலக்கங்கள் 1 தொடக்கம் 5 வரை முதற்பக்கத்திலும் ஏனையவை அடுத்த பக்கத்திலும் தோன்றும் விதத்தில் ஏ4 அளவிலான ஒரு தாளில் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பமானது தட்டச்சு செய்யப்பட முடியும். ஆனால் அது விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்திலேயே சரியாகவும் தெளிவாகவும் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவமானது தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தினையே ஒத்ததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப் படிவத்தை மாத்திரம் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி அனுப்பலாகாது. மாதிரிப்படிவத்துக்கு அமையாத மற்றும் முறையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்கள் இரண்டிலும் மாதிரி விண்ணப்பப்படிவத்தில் காணப்படும் பரீட்சைத் தலைப்பினை அதேபோல ஆங்கில மொழியிலும் தயவுசெய்து குறிப்பிடவும். தன்னால் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவமானது பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்கியதாக உள்ளது என்பதை உறுதிப்படுத்துவது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும் என்பதுடன்

மேலும், விண்ணப்பதாரி பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுடையதாகும்.

(ii) முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டியதில்லை. எனினும், அடுத்தடுத்த அமர்வுகளுக்கு ஒரே முறையில் எல்லா விடயங்களுக்கும் தோற்றுவதானால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட விடயங்களுக்கு தோற்றுவதானால் ரூபா 400 உம், ஒரு விடயத்துக்கு மட்டும் தோற்றுவதானால் ரூபா 200 உம், பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கப்படுவதற்கென தீவின் ஏதேனுமோர் அஞ்சல் அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் படப்பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பிரயோசனப்படலாம். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் திருப்பித்தரப்பட மாட்டாது. இப்பரீட்சைக்கு செலுத்திய கட்டணம் வேறொரு பரீட்சைக்கு மாற்றிக்கொள்ள முடியாது. மேலும் பரீட்சைக் கட்டணத்துக்காக முத்திரை அல்லது காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

8. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற சகல பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் நேர அட்டவணைப் பிரதிகளையும் அனுமதி அட்டைகளையும் வழங்குவார். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் பத்திரிகைகளில் அறிவிப்பொன்று வெளியிடப்படும். அத்தகைய அறிவிப்பு வெளியாகி 2 நாட்கள் அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கும் வேளையில் பின்வருவனவற்றை அதாவது விண்ணப்பப்படிவம் மற்றும் தங்கள் வசமுள்ள பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பியபோது பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டு ஆகியவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகளை தங்களிடம் வைத்துக்கொள்தல் பயனுடையதாகும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகளாயின், அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய ஒரு தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தைக் குறிப்பிட்டு ஒரு கோரிக்கைக் கடிதத்தினை தொலைநகல் ஊடாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அனுமதி அட்டைகளில் தமது கையொப்பங்களை முன்கூட்டியே உறுதிப்படுத்தப்பட்டு பெற்றுக் கொள்வதுடன் அனுமதி அட்டைகளை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் கையளித்தலும் வேண்டும்.

**குறிப்பு**.- பரீட்சைக்காக அனுமதி அட்டை வழங்கப்பட்டமையானது பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சையில் தோற்றுவதற்கான தகுதியினைக் கொண்டுள்ளார் என்று கருதப்படமாட்டாது.

9. அனுமதி அட்டைகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏதுவான வகையில் கடமை விடுமுறையினை திணைக்களத் தலைவர்கள் அனுமதித்தல் வேண்டும். பிரயாணச் செலவினங்கள் எவையும் செலுத்தப்படலாகாது.

10. இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் நடத்தப்படும் உரிய சேவைக்கு நுழைவுப் பரீட்சைக்காக அவர்கள் தோற்றிய மொழிமூலத்தில் அல்லது அரச கரும மொழியொன்றில் பரீட்சார்த்திகள் தோற்ற முடியும். ஒரு போட்டிப் பரீட்சை இல்லாமல் சேவைக்குள் உள்நுழைந்த பரீட்சார்த்திகள் தொடர்பில் அவர்களின் கல்வி மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழி ஒன்றில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். விண்ணப்பிக்கப்படும் மொழி மூலத்தினைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

11. அலுவலர்கள் தமது தற்றுணிபின் பேரில் வெவ்வேறு தடவைகளில் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகத் தோற்றலாம். எனினும், சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் குறைந்தது நாற்பது வீதத்தினை (40%) அவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். (மேலதிக விபரங்களுக்கு, அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பந்தி 10 இனைப் பார்க்கவும்.)

12. அரச கரும மொழிக் கொள்கையின் நோக்கத்திற்காக, சகல அலுவலர்களும் அரச கரும மொழியில் விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்து நிரப்புதல் வேண்டும்.

13. பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளின் பெறுபேறு அடங்கிய பெயர்ப்பட்டியல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படும். அத்துடன் பரீட்சையினைத் சித்தியெய்தியுள்ள பரீட்சார்த்திகளின் பெயர்ப் பட்டியலானது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்.

14. **பரீட்சை நடைமுறை**.- பின்வரும் பாடங்களை உள்ளடக்கும் எழுத்துப் பரீட்சை ஒன்றுக்கு பரீட்சார்த்திகள் தோற்றுதல் வேண்டும் :-

| பாடம் | புள்ளிகள் | நேரம் | பாட இல. |
|---|---|---|---|
| 1. அலுவலக முறைமைகள் | 100 | 1 மணித்தியாலம் | 01 |
| 2. கணக்கீட்டு முறைமைகள் | 100 | 1 மணித்தியாலம் | 02 |
| 3. கணினிப் பரீட்சை | 100 | 2 மணித்தியாலங்கள் | 03 |
| கூட்டுத்தொகை | 300 | | |

14.1 *அலுவலக முறைமைகள்*.- அரசாங்க அலுவலகங்களில் பின்பற்றப்படும் அலுவலக முறைமைகள் குறித்து பரீட்சார்த்தியின் அறிவு, அறிவின் நடைமுறைப் பிரயோகம் குறித்த அவரின் திறமை, அலுவலகக் கடிதங்களை முறையாக விளங்கிக்கொள்வதற்கும் தெளிவான மற்றும் சுருக்கமான குறிப்புக்களினூடாக தனது கருத்துக்களை சமர்ப்பிப்பதற்குமான அலுவலரின் திறமை மற்றும் கடிதம் ஒன்றை வரைவதற்கான திறமை ஆகியவற்றைச் சோதிப்பதாக இவ்வினாப்பத்திரம் அமையும்.

*14.2 கணக்கீட்டு முறைமை.*- அரசாங்க அலுவலகத்தில் பின்பற்றப்படும் கணக்கீட்டு முறைமைகள், கணக்குகளை ஒழுங்குபடுத்தும் ஏடுகள் மற்றும் பதிவுகள் குறித்த பரீட்சார்த்தியின் அறிவானது சோதிக்கப்படும்.

*14.3 கணினிப் பரீட்சை :*

(i) அடிப்படைத் தகவல் தொழில்நுட்பக் கோட்பாடுகள்

(ii) வின்டோஸ் செயற்பாட்டு முறைமை (Windows Operating System)

(iii) கோவை முகாமைத்துவம்

(iv) சொல் செயலாக்கம் (Word Processing).- அடிப்படைத் திறன்கள், கணினித்திரை பரீட்சயம், எழுத்துக்களைத் தொகுத்தல், எழுத்துக்கள், எழுத்துருக்கள் மற்றும் தன்மைகள் ஆகியவற்றை வரிசைப்படுத்தல், பந்திகளை ஓரப்படுத்தல், வரிசை இடைவெளி மாற்றம், தத்தல் அமைப்பு (Tab setting), சொல்லினைக் கண்டுபிடித்தலும் மீளமைத்தலும், எழுத்துக்கூட்டல் மற்றும் இலக்கணம், நிகண்டு நிரல்களை ஒழுங்கமைத்தல், பக்க வடிவமைப்பு, ஆவணங்களை அச்சிடல், அட்டவணைகளை உருவாக்குதல், எழுத்து வடிவங்களை வகைப்படுத்தல், கோவை முகாமைத்துவம், அஞ்சல் ஒன்றிணைப்பு, மாக்ரோஸ் (macros) உடன் செயற்படுத்தல்.

(v) விரிதாள்கள் (Spread sheets).- அடிப்படைத் திறன்கள், வடிவமைத்தல், செவ்வையாக்கம், நிரல்கள் மற்றும் வீச்சுக்கள், உட்சேர்த்தல் மற்றும் அழித்தல்
தரவுகளை வகைப்படுத்தல்,
வரைபுகளை உருவாக்குதல், அச்சிடல்
@ தொழிற்பாடு (@function)
மக்ரோக்களின் பயன்பாடு, கோவை முகாமை

(vi) தரவுத்தளம் :

அறிமுகம் குறித்த அடிப்படைத் திறன்கள்
தரவுத்தளம் ஒன்றை உருவாக்குதலும் பயன்படுத்தலும்
படிவங்கள்
இணைக்கப்பட்ட படிவங்கள், மேல் வரல் (popup) படிவங்கள்
உரையாடல் மற்றும் தகவல் பெட்டிகள்
வினவுதல்கள் (Queries)
வகைப்படுத்தல்
அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல்
மாக்ரோஸ் (macros) உடன் செயற்படுதல்

(vii) *அளிக்கை/ விளக்கப்படம் :*

அடிப்படைத் திறன்கள், வடிவமைத்தல், செவ்வை யாக்கம்
வடிவங்கள், ஆயத்தப்படம் மற்றும் வரைபடங்களைப் பிரயோகித்தல்
உருவ வடிவங்களை உட்சேர்த்தல், படவில்லை நிலைமாற்றம் (slide transition) மற்றும் புலக்காட்சி வெளிப்பாடுகள் (effects), அளிக்கைக் கருவிகளைப் பயன்படுத்தும் அசைவூட்டங்கள் (animations), மாஸ்ரர்களை (masters) தயாரித்தல், படவில்லை மற்றும் குறிப்புக்களை அச்சிடுதல்

(viii) *இணையம்.*- இணையத்திற்கான அறிமுகம், உலகளாவிய வலை (World Wide Web), கண்டு பிடிப்பது எவ்வாறு என்பது, நடைமுறை இணையம்

(ix) *மின்னஞ்சல்.*- அறிமுகம், அடிப்படைத் திறன்கள், மின்னஞ்சல்களைப் பெற்றுக் கொள்ளுதல், மின்னஞ்சல்களை அனுப்புதல், பதிலனுப்புதல், இணைப்புக்களைக் பயன்படுத்துதல், செல்லப் பெயர்களை உருவாக்கலும் பயன்படுத்தலும், தகவல்களை உருவாக்குதல்

15. இப்பரீட்சை அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும். மேலும் இவ் அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினது தீர்மானமே இறுதியானதாகும்.

கே. வீ. பி. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

பொது நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2016, யூன் 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2014 (II) (2016)**

(இணைந்த சேவைகளுக்குரிய, அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இலுள்ள அலுவலர்கள் மாத்திரம் பரீட்சை அறிவித்தலுக்கமைய விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவராவர்)

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

உங்களுக்கு உரித்தான சேவை :

(இதை நிரப்ப முன் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 4.0 இன் குறிப்பைப் பார்க்கவும்.)

(வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 2 இற்கமைய பரீட்சையில் தோற்றுவதற்கு நீங்கள் உத்தேசிக்கும் நகரத்தைச் சுட்டிக் காட்டவும்)
(இதனைப் பின்னர் மாற்ற முடியாது)

| | நகரம் | நகர இல. |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி ஊடகம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டில் குறிப்பிடவும்)

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.

1.3 முழுப்பெயர் (சிங்களம்/ தமிழ்) :----.

2. வேலை செய்யும் இடம் மற்றும் முகவரி :

2.1 அலுவலகம்/ திணைக்களம்/ நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

2.2 அலுவலகம்/ திணைக்களம்/ நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.3 அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. பால் :
பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. நீங்கள் தோற்றும் பாடம்/ பாடங்கள் :

| பாடம் | பாட இல. |
|---|---|
| | |

6. தற்போதைய பதவி :
6.1 பதவி :----.
6.2 நியமனக் கடித இல. : CS/DOS/ :----.
6.3 அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்பட்ட திகதி/ அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட விருப்பம் தெரிவித்த திகதி :----.

7. 7.1 இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதல் தடவையா கவா ? :----.
7.2 பரீட்சைக்குத் தோற்றுவது முதல் தடவையில்லையெனின் செலுத்திய பரீட்சைக் கட்டணம் :----.
7.3 தபாலகம் :----.
7.4 பற்றுச்சீட்டு இலக்கம் :----.
7.5 திகதி :----.

| பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டுங்கள் (பற்றுச்சீட்டின் படப்பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பிரயோசனப்படலாம்.) |
|---|

8. **விண்ணப்பதாரியின் சான்றுரை**.- மேற்தரப்பட்ட தகவல்கள் சரியானதென்றும் மேலே குறிப்பிடப்பட்ட மொழி ஊடகத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்குத் தகுதியுள்ளது என்றும், நான் பரீட்சைக்குத் தோற்றுவது ................... தடவையாகவென்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்துவது அவசியமல்லை என்றும்/ ரூபா ........................ பரீட்சைக் கட்டணத்தை ........................ எனும் தபால் அலுவலகத்தில் .......................... ஆந் திகதி செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கீழே ஒட்டியுள்ளேன் என்றும் நான் வெளிப்படுத்துகின்றேன். பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் மற்றும் பரீட்சை நடாத்துதல் குறித்து பரீட்சை சட்டத்திலுள்ள சகல ஏற்பாடுகளுக்கும் இணங்கியொழுகுவதற்கும் நான் உடன்படுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- பரீட்சார்த்தியானவர் தனது உரிய திணைக்களத் தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அலுவலர் முன்னிலையில் தனது கையொப்பத்தினை இடுதல் வேண்டும்.

**கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்தல் :**

எனது பணியகத்தின் ஓர் அலுவலரான திரு./ திருமதி/ செல்வி ............................................. என்பவரை எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும் என்றும் ........................ .................... ஆந் திகதி எனது முன்னிலையில் தனது கையொப்பத்தினை இட்டார் என்றும், அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதந்தடவை என்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து அவரை விடுவிக்க முடியுமென்றும்/

பொருத்தமான பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ளார் என்றும், அப்பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றுரை :**

(i) மேற்தரப்பட்ட தகவல்கள் செவ்வை பார்க்கப்பட்டன என்றும் ;
(ii) அலுவலர் இணைந்த சேவைகளுக்கு உரியவர் என்றும்/ அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட விருப்பம் தெரிவித்துள்ளார் என்றும் ;
(iii) அலுவலர் இதற்கு முன்னர் இப்பரீட்சைக்குத் தோற்றியுள்ளார்/ தோற்றவில்லை* என்றும் ;
(iv) அலுவலர் இதற்கு முன்னர் இப்பரீட்சைக்குத் தோற்றியுள்ளதால் குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு விண்ணப்பத்தில் ஒட்டப் பட்டுள்ளது எனவும் ;
(iv) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகுதி யுள்ளது என்றும்

நான் சான்றுப்படுத்துகின்றேன்.

*தேவையற்றவற்றை வெட்டிவிடவும்.

----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

6-925

---

## அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் I இலுள்ளஅலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2014 (II) (2016)

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் I இலுள்ள அலுவலர்களுக்கான ஒரு வினைத்திறன்காண் தடைப் பரீட்சையானது 2013.12.11 ஆந் திகதிய 1840/34 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைப்பிரமாணக் குறிப்பின் பிரிவு 8 மற்றும் 15 இன் ஏற்பாடுகள் (இடைக்கால ஏற்பாடுகள்) மற்றும் இணைப்பு 6 இற்கமைய 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. (i) இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் அமுலாக்கத் திகதிக்கு முன்னர் தரம் I இற்குப் பதவியுயர்த்தப்பட்டுள்ள மற்றும் 5 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தினைப் பூர்த்திசெய்துள்ள அத்துடன் 5 சம்பள ஏற்றங்களை ஈட்டியுள்ள அலுவலர்கள் இச்சேவைப் பிரமாணக் குறிப்பின்கீழ் தரம் I இற்குரிய வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினைச் சித்தியெய்தும் தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டும் ;

(ii) இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் அமுலாக்கத் திகதிக்கு முன்னர் தரம் I இற்குப் பதிவியுயர்த்தப்பட்டுள்ள ஆனால் 5 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தினைப் பூர்த்திசெய்திராத அத்துடன் 5 சம்பள ஏற்றங்களை ஈட்டியிராத அலுவலர்களுக்கு இச்சேவைப் பிரமாணக் குறிப்பின்கீழ் தரம் I இற்குரிய வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினைச் சித்தியெய்துவதற்கு இச்சேவைப் பிரமாணக் குறிப்பு பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து 5 வருட சலுகைக்காலம் ஒன்று வழங்கப்பட வேண்டும்.

3. அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் I இலுள்ள அலுவலர்களுக்கான இப்பரீட்சையானது, கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்கள் மற்றும் நகர இலக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை போதுமான அளவில் இல்லாதிருத்தல் அல்லது வேறு காரணம் என்பவற்றின் காரணமாக நிலையம் ஒன்றினை இரத்துச்செய்வதற்கும் மற்றும் தனது தற்றுணிபின் பேரில் பரீட்சார்த்திகளின் இரண்டாம் விருப்புரிமைக்கு இணங்க நிலையத்தினைத் தீர்மானிப்பதற்கும் உரிமை உள்ளது. சகல தரப்பட்டுள்ள நகரங்களிலும் அல்லது பெரும்பாலான நகரங்களில் பரீட்சை நிலையங்களைக் கொண்டிருப்பதற்குப் போதுமானளவு பரீட்சார்த்திகள் விண்ணப்பித்திராவிடின் கொழும்பில் மாத்திரம் இப்பரீட்சையினை நடாத்துவதற்கான ஒழுங்குகளை பரீட்சை ஆணையாளர் நாயகம் மேற்கொள்ள வேண்டும். நகரங்கள் மற்றும் நகர இலக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைக்கு இணங்க விண்ணப்பத்தின் உரிய பிரிவானது பூர்த்திசெய்யப்பட வேண்டும். விண்ணப்பிக்கும் நகரம்/ நகரங்களை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது :-

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 05 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| யாழ்ப்பாணம் | 10 |

| *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| குருநாகல் | 18 |
| அநுராதபுரம் | 19 |
| பதுளை | 21 |
| இரத்தினபுரி | 24 |
| கிளிநொச்சி | 25 |

4. (i) இப்பரீட்சையானது, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன் அவரினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குகளுக்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டு இருத்தல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கான விதிகள் மற்றும் ஒழுங்குவிதி களானவை இவ்வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ளன. இவ்விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீறியமைக்காக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஏதேனும் தண்டனைக்கு பரீட்சார்த்திகள் உட்பட வேண்டும்.

5. **தகைமைகள்**.- அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் I இற்கு நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறுகின்றனர்.

**குறிப்பு**.- தரம் I இற்கு பதவியுயர்வு பெற்ற திகதியிலிருந்து 5 வருடத்திற்குள் இப்பரீட்சையினைச் சித்தியெய்த வேண்டும்.

இவ்வறிவித்தலுக்கு சமாந்தரமாக மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் விண்ணப்ப தாரிகளுக்கான சட்ட திட்டங்கள் பொருத்தமான மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலமும் வேறு நிறுவனங்களின் விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் குறித்த நிறுவனத்தின் மூலமும் வெளியிடப்படும்.

"ஒவ்வொரு மாகாண அரச சேவை மற்றும் ஏனைய நிறுவனங்களிலுள்ள அலுவலர்களின் விண்ணப்பங்களை வசதியாக இனங்காண்பதற்கென பின்வரும் குறியீட்டு இலக் கங்கள் பாவிக்கப்பட வேண்டும். உரிய சேவை அல்லது நிறுவனத்தினைக் குறிப்பிடும் போது விண்ணப்பத் தலைப்பில் இவ்விலக்கங்கள் பதியப்படல் வேண்டும். இணைந்த சேவையின் அலுவலர்களுக்கான குறியீட்டு இலக்கம் 10 ஆகும்." இவ்விலக்கத்தை விண்ணப்பப்படிவத்தின் வலதுபக்க மேற்பக்கத்தில் உங்கள் சேவை மற்றும் சேவை நிலையத்தை குறிப்பிட வேண்டும்.

6. இப்பரீட்சைக்கான விண்ணப்பமானது இவ்வறிவித்தலில் பின்னிணைக்கப்பட்ட மாதிரிப் படிவத்திற்கு அமைய இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் மாதிரி படிவத்திற்கு இணங்க தாமாகவே விண்ணப்பங்களைத் தயாரித்தல் வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2016, யூலை மாதம் 25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்னும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக உரிய திணைக்களத் தலைவருக்கு ஊடாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும். பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு முன்னளிக்கப்படும் விண்ணப்பக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும். முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் உரிய விபரங்கள் கொடுக்கப்பட்டிராத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

7. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்திப்படுத்துவதற்கு பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடை யாளத்தை நிரூபிக்குமாறு கோரப்படுவர். இந்நோக்கத்திற்காக, பின்வரும் ஆவணங்களில் ஒன்று மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேலே குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைச் சமர்ப்பிக்கத் தவறுபவர்களின் பரீட்சார்த்தித் தன்மையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் இரத்துச் செய்யப்படலாம். பரீட்சைகள் நடாத்துதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டு இருத்தல் வேண்டும். இவ்விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீறியமைக்காக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஏதேனும் தண்டனைக்கு பரீட்சார்த்திகள் உட்பட வேண்டும்.

8. **விண்ணப்பங்கள்**.- பந்தியின் 1 முதல் 5 வரை யான இலக்கங்கள் முதலாம் பக்கத்திலும் ஏனையவை அடுத்த பக்கங்களிலும் தோன்றும் விதத்தில் "ஏ4" அளவிலான தாளில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சு செய்யப்பட்டதாக இருக்க முடியும். ஆனால் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பமானது பின்னிணைக்கப்பட்ட மாதிரியுடனேயே ஒத்திசைவாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஒன்றுக்குக்கூடிய விண்ணப்பங்களை அல்லது நிழற்படப் பிரதிகளை (போட்டோப் பிரதிகள்) அனுப்பாதிருக்குமாறு பரீட்சார்த்திகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது. மாதிரியுடன் இணங்காத மற்றும் முறையாகப் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில், மாதிரிப் படிவத்தில் தோன்றும் பரீட்சைத் தலைப்பினை தமிழ், சிங்களத்திற்கு மேலதிகமாக அதேபோல ஆங்கிலத்திலும் குறிப்பிடவும். தன்னால் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவமானது பரீட்சை அறிவித்தலில் தரப்பட்ட மாதிரியுடன் இணங்குகின்றது என்பதை உறுதிப்படுத்திக் கொள்வது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். மேலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும்.

(ii) முதற்தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டியதில்லை. எனினும், அடுத்த அமர்வுகளுக்கு முழுப்பரீட்சைக்கும் அல்லது ஒன்றுக்குக் கூடுதலான பாடங்களுக்கு 400 ரூபாவும், ஒரு பாடத்திற்கு மட்டும் 200 ரூபாவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கப்படுவதற்கென நாடளாவிய ரீதியிலுள்ள ஏதேனுமோர் அஞ்சல் அலுவலகத்தில் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டில் ஒட்டிவிட வேண்டும். பரீட்சார்த்தி பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி ஒன்றை வைத்துக்கொள்வது உசிதமாகும். இப்பரீட்சைக்குச் செலுத்தப்பட்ட கட்டணத்தினை இன்னொன்றின் சார்பில் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சைக் கட்டணமாக முத்திரை அல்லது காசுக் கட்டளை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. விண்ணப்ப முடிவுத் திகதியில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட சகல பரீட்சார்த்திகளுக்கும் அனுமதி அட்டைகளையும் மற்றும் நேர அட்டவணைப் பிரதி ஒன்றையும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் வழங்குவார். பரீட்சைகள் திணைக்களத்தினால் பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன் பத்திரிகைகளில் அறிவிப்பு ஒன்று வெளியிடப்படும். அத்தகைய அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். விண்ணபத்தின் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணக் கொடுப்பனவுக்குரிய பற்றுச்சீட்டுப் பிரதியினைக் கைவசம் வைத்துக் கொண்டு விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், பரீட்சார்த்தியின் முழுப்பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பனவற்றைக் குறிப்பிட்டு பரீட்சைகள் திணைக்களத்திற்கு கோரிக்கையிடுமாறு தங்களுக்கு அறிவிக்கப் படுகின்றது. மேலேயுள்ள விபரங்களையும் அனுமதி அட்டையின் பிரதி ஒன்றினை அனுப்புவதற்கான தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தையும் குறிப்பிட்டு தொலைநகல் ஊடாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு ஒரு கோரிக்கைக் கடிதத்தினை தொலைநகலில் அனுப்புவது கொழும்புக்கு வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுக்கு பயனுள்ள தாக அமையும். பரீட்சார்த்திகள் அனுமதி அட்டையில் முன்கூட்டியே தமது கையொப்பத்தினை சான்றுறுதிப்படுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளித்தல் வேண்டும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்றினை வழங்குதலானது பரீட்சார்த்தியானவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்று கருதலாகாது.

10. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ள அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏதுவாக அவர்களுக்கான கடமை விடுமுறையினைத் திணைக்களத் தலைவர்கள் அனுமதிக்க வேண்டும். எதுவித பிரயாணச் செலவினமும் செலுத்தப்பட மாட்டாது.

11. எழுத்துப் பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலத்தில் நடாத்தப்படும். அலுவலர்கள் சேவைக்கான நுழைவுப் பரீட்சைக்குத் தாம் தோற்றிய மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழிகளில் ஒன்றில் மூன்று வினாப்பத்திரங்களுக்கு விடையளிக்கலாம். போட்டிப் பரீட்சையின்றி சேவைக்குள் உள்வந்த பரீட்சார்த்திகள் அவர்களின் கல்வி கற்ற மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழிகளில் ஒன்றில் மூன்று வினாப்பத்திரங்களுக்கு விடையளிக்கலாம். விண்ணபத்தில் ஆரம்பத்தில் குறிப்பிட்ட பரீட்சையின் மொழிமூலத்தினைப் பின்னர் மாற்ற முடியாது.

12. அலுவலர்கள் தமது தற்றுணிபின் பேரில் வெவ்வேறான தடவைகளில் ஒவ்வொரு பாடத்திற்கும் வேறு வேறாக தோற்றலாம். எனினும் சித்தி பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் மொத்தப் புள்ளிகளில் குறைந்தது 40% இனை அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். (மேலதிக விபரங்களுக்கு அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் இணைப்பு 6 இனைப் பார்க்கவும்.)

13. இலங்கை பரீட்சைகள் திணைக்களமானது பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் பெறுபேறுகளை விடுவிக்கும் என்பதுடன் வெற்றிபெற்ற பரீட்சார்த்திகளின் பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்படும்.

14. **பரீட்சை நடைமுறை**.- பின்வரும் பாடங்களை உள்ளடக்கும் எழுத்துப் பரீட்சை ஒன்றிற்கு பரீட்சார்த்திகள் தோற்ற வேண்டும் :-

| பாடம் | புள்ளிகள் | காலம் | பாட இல. | வெட்டுப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| தாபன நடை முறை மற்றும் நடைமுறை விதிகள் | 100 | 1 1/ 2 மணித்தியாலம் | 01 | 40 |
| அரச நிதி முகாமைத்துவம் | 100 | 1 1/ 2 மணித்தியாலம் | 02 | 40 |
| தற்காலப் போக்குகள் | 100 | 1 மணித்தியாலம் | 03 | 40 |

14.1 தாபன நடைமுறை மற்றும் நடைமுறை விதிகள்.- இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும் என்பதுடன், ஒரு பகுதியானது அலுவலக முறைமையின் அடிப்படை அறிவு, அவற்றின் முக்கியத்துவம், எழுத்து மூலத் தொடர்பாடல், ஆவணப்படுத்தல் மற்றும் தொகுப்பு மாதிரிகள் மற்றும் அலுவலகச் செயற்பாடுகள் போன்றன தொடர்பில் பெற்றுக்கொண்ட அனுபவத் தேர்ச்சியினைப் பரிசோதிப்பதற்கான வினாக்களைக் கொண்டிருக்கும். ஏனைய பகுதியானது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் தொகுதி I மற்றும் தாபன விதிக் கோவையின்

தொகுதி I மற்றும் II ஆகியவற்றில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பிலான நடைமுறை அறிவைப் பற்றிய அறிவினைப் பரிசோதிப்பதற்கான வினாக்களை உள்ளடக்கும்.

பகுதி I - பல்தேர்வு வினாக்களை உள்ளடக்கும் ஒரு வினாத்தாள் இதுவாகும். (*காலம்* : 30 நிமிடங்கள்)
- (25 புள்ளிகள்)

பகுதி II - அரைவாசி கட்டமைக்கப்பட்ட கட்டுரை வகையான வினாக்களை உள்ளடக்கும் ஒரு வினாத்தாள் இதுவாகும். நான்கில் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். (*காலம்* : 60 நிமிடங்கள்)
- (75 புள்ளிகள்)

14.2 *அரச நிதி முகாமைத்துவம்.*- நிதிக் கட்டுப்பாடு, அரச நிதிப் பாதுகாப்பு, வருமானம் மற்றும் கொடுப்பனவு, வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள், வழங்கல் மற்றும் சேவைகள் (பொருட் கணக்கெடுப்பு மற்றும் களஞ்சியக் காப்பு, நிதிப் பிரமாணங்கள் மற்றும் கணக்காய்வு மற்றும் அடிப்படை வங்கியியல் நடைமுறை பற்றிய அடிப்படை அறிவு) போன்ற அரசாங்க திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் அமைச்சுக்களிலுள்ள விடயங்களில் பரீட்சார்த்திகளின் அறிவினைப் பரிசோதிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

பகுதி I - பல்தேர்வு வினாக்களை உள்ளடக்கும் ஒரு வினாத்தாள் இதுவாகும். (*காலம்* : 30 நிமிடங்கள்)
- (25 புள்ளிகள்)

பகுதி II - அரைவாசி கட்டமைக்கப்பட்ட கட்டுரை வகையான வினாக்களை உள்ளடக்கும் ஒரு வினாத்தாள் இதுவாகும். நான்கில் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். (*காலம்* : 60 நிமிடங்கள்)
- (75 புள்ளிகள்)

14.3 *தற்காலப் போக்குகள்.*- தற்கால உள்நாட்டு மற்றும் சர்வதேச நிகழ்வுகள் தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவினைச் சோதிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட ஒரு பகுதி மற்றும் அலுவலக முகாமை தொடர்பான புதிய போக்குகள், அரச துறையினது சேவை வழங்கல் மற்றும் நல்லாட்சி தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவினைச் சோதிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட ஒரு பகுதி என்பவற்றை இவ்வினாத்தாள் உள்ளடக்கும். பல்தேர்வு வினாக்கள் மற்றும் அரை வாசி கட்டமைக்கப்பட்ட கட்டுரை வகையான வினாக்களை இவ்வினாத்தாள் உள்ளடக்கும். (சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.)

15. இவ்வறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயத்தில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாகும்.

16. இப்பரீட்சை அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

கே. வீ. பி. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

பொது நிர்வாக, முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2016, யூன் 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் I ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2014 (II) (2016)**

## Efficiency Bar Examination for Officers in Grade I of Public Management Assistants' Service – 2014 (II) (2016)

(இப்பரீட்சை அறிவித்தலுக்கமைய இணைந்த சேவைக்குரிய அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் I இலுள்ள அலுவலர்கள் மாத்திரமே விண்ணப்பிக்கத் தகைமை பெறுகின்றனர்.)

தங்களுக்குரிய சேவை : ☐

(இப்பிரிவினை நிரப்புவதற்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 5.0 இனது குறிப்பினைக் கவனமாகப் பார்க்கவும்.)

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |

வர்த்தமானி அறிவித்தலின் பிரிவு 3.0 இற்கமைய தங்களின் விருப்பத் தேர்வுக்கு இணங்க தாங்கள் பரீட்சைக்குத் தோற்ற உத்தேசிக்கும் நகரத்தினைக் குறிப்பிடவும். (இதனைப் பின்னர் மாற்ற முடியாது.)

பரீட்சையின் மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
1.2 முதலெழுத்துக்களை இறுதியில் இட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :——————.
உதா : GUNAWARDHANA, H. M. S. K.
1.3 முழுப்பெயர் (தமிழ்/ஆங்கிலத்தில்) :——————.

2. சேவை நிலையத்தின் பெயர் மற்றும் முகவரி :-

2.1 அலுவலகம்/திணைக்களம்/நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்): ——————.
2.2 அலுவலகம்/ திணைக்களம்/ நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (சிங்களத்தில்/தமிழில்) : ——————.
2.3 அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :——————.

3. பால் :-
பெண் – 1, ஆண் – 0 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. நீங்கள் தோற்றும் பாடம்/பாடங்கள் :

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| | |
| | |
| | |

6. தற்போது வகிக்கும் பதவி :

6.1 பதவி :——————.
6.2 நியமனக் கடித இலக்கம் :——————.
6.3 அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் I இற்கான நியமனத் திகதி :——————.

7. 7.1 நீங்கள் முதற் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்று கின்றீர்களா ? : ——————.
7.2 இல்லையெனின், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் ————.
7.3 தபாலகம் :——————.
7.4 பற்றுச்சீட்டு இலக்கம் :——————.
7.5 திகதி :——————.

> பற்றுச்சீட்டின் விளிம்புப் பகுதியினை கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி ஒன்றினை வைத்துக்கொள்வது உசிதமானது.)

8. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

மேலே தரப்பட்ட தகவல்கள் சரியானது என்றும், மேலே குறிப்பிடப்பட்ட மொழிமூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்குத் தகுதியுள்ளது என்றும் இப்பரீட்சைக்கு நான் முதற் தடவையாகத் தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணத் தினைச் செலுத்த வேண்டியதில்லை/ ...................... ஆந் திகதியில் ...................... அஞ்சல் அலுவலகத்திற்கு ...................... ரூபா கொண்ட பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தியதன் பேரில் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டினை மேலே ஒட்டி யுள்ளேன் என்றும் நான் வெளிப்படுத்துகின்றேன். பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கும் மற்றும் பரீட்சைச் சட்டத்தின் சகல ஏற்பாடுகளுக்கும் இணங்கியொழுகுவதற்கு நான் உடன்படுகின்றேன்.

——————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :——————.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது உரிய திணைக்களத் தலைவர் அல்லது அவரின் சார்பில் கையொப்பமிட குறித்தொதுக்கப்பட்ட ஓர் அலுவலர் முன்னிலையில் தனது கையொப்பத்தினை இடுதல் வேண்டும்.

**கையொப்பத்தினைச் சான்றுறுதிப்படுத்தல்**

எனது அலுவலகத்தின் பணியாளரும் எனக்குத் தனிப்பட்ட ரீதியில் தெரிந்தவருமான திரு./ திருமதி/ செல்வி ...................... என்பவர் .................................. ஆந் திகதி என் முன்னிலையில் தனது கையொப்பத்தினை இட்டார் என்றும், அவர் முதற் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணத்திலிருந்து அவர் விலக்குப்பெறுதல் உசிதமானது/ பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் நான் சான்றுறுதிப் படுத்துகின்றேன்.

——————,
சான்றுறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.

பெயர் :——————.
பதவி :——————.
முகவரி :——————.
திகதி :——————.

**9. திணைக்களத் தலைவரின் சான்றுரை**

நான் பின்வருவனவற்றைச் சான்றுப்படுத்துகின்றேன்,

(i) மேலே தரப்பட்ட தகவல்கள் சரிபார்க்கப்பட்டது மற்றும்,

(ii) அலுவலர் இணைந்த சேவைக்கு உரியவர்,

(iii) அலுவலர் முன்னர் இப்பரீட்சைக்குத் தோற்றியுள்ளார்*/ தோற்றியிருக்கவில்லை,

(iv) அலுவலர் முன்னர் இப்பரீட்சைக்குத் தோற்றியுள்ளார் என்பதுடன் உரிய பரீட்சைக்கான கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினை அவர் ஒட்டியுள்ளார்,

(v) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகுதியுள்ளது.

* பொருத்தமற்ற சொற்களை நீக்கிவிடவும்.

————————,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.

பெயர் :——————.
பதவிப் பெயர் :——————.
முகவரி :——————.
திகதி :——————.

*6-926*

---

## நீதிச்சேவைகள் ஆணைக்குழுச் செயலகம்

### நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவையின் நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் - III இற்குரிய பதவிக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான திறந்தப் போட்டிப் பரீட்சை- 2016

அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களின் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவையின் நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் - III இற்குரிய பதவிக்கு பொருத்தமானவர்களை தெரிவு செய்வதற்காக நீதிச்சேவைகள் ஆணைக்குழுவினால் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

2. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குரியதாகும்.

3. **சம்பள முறைமை**.- மாதத்திற்கு ரூ. 13,990 - 10 x 145 - 11 x 170 - 6 x 240 - 14 x 320 - ரூ. 23,230 எனும் சம்பள அளவு இப்பதவிக்கு உரியதாகும். இப்பதவியின் ஆரம்ப சம்பள படிநிலை ரூ. 13,990 ஆகும். (இச்சம்பள அளவானது பொது நிர்வாகச் சுற்று நிருபம் 03/ 2016 அமைவாக திருத்தப்படும்.)

4. **வயது**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு விண்ணப்பதாரிகள் 18 வயதிற்கு குறையாத மற்றும் 30 வயதிற்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும். (அரச சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.)

5. கல்வித் தகைமைகள்.- விண்ணப்பதாரிகள் கீழ்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாத தடவைகளில் சிங்களம் / தமிழ்/ ஆங்கிலம் மற்றும் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்திபெற்றிருக்க வேண்டியதுடன் சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் உட்பட 5 பாடங்களுக்கு திறமைச்சித்தி பெற்றிருக்க வேண்டியதுடன் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தேசிய பயிலுனர் மற்றும் பயிற்சியளிக்கும் அதிகார சபை, தொழில்நுட்பக் கல்லூரி அல்லது அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிறுவனத்தில் சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து (ஆங்கிலம்) பாடநெறி ஒன்றை சிறப்பான முறையில் பயின்று விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் அப்பாடநெறியினை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

6. விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சையொன்று நடாத்தப் படுவதுடன் அப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைவாக உரிய தேர்ச்சி மட்டத்தை அடைந்த விண்ணப்பதாரிகள் வாய்மொழிப் பரீட்சையின் பின்னர் சேவையில் இணைத்துக்கொள்ளப்படுவார்கள். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் தீவின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு தயாராக இருக்க வேண்டும்.

7. மாதிரி வினாப்பத்திரம் :

(அ) ஆங்கில மொழி மற்றும் கட்டுரையாக்கம் ;

(ஆ) ஆங்கில சுருக்கெழுத்து.- நிமிடத்திற்கு 100 சொற்கள் எனும் வேகத்தில் 5 நிமிடங்களுக்குள் வாசிக்கப்படும் பந்தியை சுருக்கெழுத்து செய்து, அதனை நிமிடத்திற்கு 10 சொற்கள் என்ற வேகத்தில் பிரதி செய்தல் ;

இ) ஆங்கில தட்டெழுத்து.- குறைந்தது நிமிடத்திற்கு 40 சொற்கள் என்ற வேகத்தில் 20 நிமிடங்கள் தட்டெழுத்து செய்தல் ;

(ஈ) வாய்மொழிப் பரீட்சை.

**குறிப்பு**.- விடைத்தாள்களுக்கு புள்ளிகள் வழங்கும் போது சுத்தம் மற்றும் செவ்வைத் தன்மை கருத்திற் கொள்ளப்படும்.

8. இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப்படிவமானது இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக மாத்திரமே தயாரித்தல் வேண்டும். பரீட்சைக்காக

விண்ணப்பிக்கும் போது நிர்வாகக் கட்டணமாக மீளளிக்கப்படாத 500 ரூபாவினை நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரின் பெயரில் மக்கள் வங்கியின் டாம் வீதிக் கிளையில் பேணப்பட்டுவரும் 297100199025039 என்ற கணக்கில் வைப்பிலிட்டு பெற்றுக்கொள்ளும் வைப்புச்சீட்டினை விண்ணபப்படிவத்தின் உரிய கூட்டினுள் ஒட்டவேண்டும்.

9. விண்ணபப்படிவங்கள் 2016, யூலை 15 ஆந் திகதியன்றோ அல்லது முன்னரோ ''செயலாளர், நீதிச்சேவைகள் ஆணைக்குழுச் செயலகம், கொழும்பு 12'' எனும் முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணபப்படிவத்தைக் கொண்ட கடிதவுறையின் வலது பக்க மேல் மூலையில் நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) எனக் குறிப்பிடல் வேண்டும். விண்ணபப்படிவங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணபப்படிவங்கள் நிராகரிக்கப்படும். அரச சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தங்களது விண்ணபப்படிவங்களை திணைக்களத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

10. விண்ணபப்படிவங்கள் தொடர்பாக எழும் பிரச்சினைகள் அனைத்திற்கும் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

பிரதீப் ஜயதிலக,<br>
செயலாளர்,<br>
நீதிச் சேவைகள் ஆணைக்குழு.

நீதிச்சேவைகள் ஆணைக்குழுச் செயலகம்,<br>
கொழும்பு 12,<br>
2016, மே மாதம் 30.

## மாதிரி விண்ணப்பப்படிவம்

### நீதிச்சேவைகள் ஆணைக்குழுச் செயலகம்

### நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவையின் நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016

சுட்டெண் : ☐<br>
(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

(**கவனிக்க**.- விண்ணபப்படிவத்தை செம்மையாகவும் மற்றும் தெளிவாகவும் விண்ணபதாரியின் கையெழுத்தில் நிரப்ப வேண்டும். உரிய கூடுகளில் உரிய இலக்கத்தை இடவும்.)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   (ii) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் : ----.

2. பால் நிலை :

   பெண் 01<br>
   ஆண் 02 ☐

3. நிரந்தர முகவரி :----.

4. அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரி :----.

5. வதியும் மாவட்டம் :----.

6. தொலைபேசி இலக்கம் :

7. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

8. (அ) பிறந்தத் திகதி :----.

   (ஆ) விண்ணபப்படிவங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு வயது :

   ஆண்டு :----. மாதம் :----. நாட்கள் :----.

9. அரச சேவையில் ஈடுபட்டிருப்பின்-

   (i) அமைச்சு/ திணைக்களம் :----.<br>
   (ii) தற்போது வகிக்கும் பதவி :----.<br>
   (iii) அப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.<br>
   (iv) அப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :----.<br>
   (v) அலுவலக முகவரி :----.

10. கல்வித் தகைமைகள் (ஒவ்வொரு பரீட்சையினதும் பெறுபேறுகளை அவற்றின் சுட்டெண்களுடன் வெவ்வேறாக குறிப்பிடுக.) :

   (அ) க. பொ. த. (சா. த.) பரீட்சை :<br>
   வருடம் :----. சுட்டெண் :----.

| இல. | விடயம் | பெறுபேறு |
|---|---|---|
| | | |

வருடம் :----. சுட்டெண் :----.

| இல. | விடயம் | பெறுபேறு |
|---|---|---|
| | | |

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சை :

வருடம் :----. சுட்டெண் :----.

| இல. | விடயம் | பெறுபேறு |
|---|---|---|
| | | |

(இ) பயின்றுள்ள பாடநெறிகள் தொடர்பான விபரம் (வர்த்தமானப் பத்திரத்தின் 05 வது சரத்தின் படி நிரப்பவும்) ;----.

**குறிப்பு**.- விண்ணப்பதாரியினால் சுற்றுநிருபத்தில் குறிப்பிட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி உரிய பெறுமதியை வைப்புச்செய்து பெற்றுக்கொண்ட வைப்புச்சீட்டினை இவ்விடத்தில் ஒட்டவும்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் உண்மையானவை மற்றும் சரியானவை எனவும் இப்பரீட்சைக்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்களைப் பின்பற்றுவதற்கு சம்மதிக்கின்றேன் எனவும் உறுதியளிக்கின்றேன். மேற்குறிப்பிட்ட தகவல்களில் ஏதேனும் உண்மைக்குப் புறம்பானது என நான் தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவருமாயின் அக்காரணத்திற்காக நான் இப்பதவிக்கு தகைமையற்றிருப்பதற்கும், இப்பதவிக்கு நியமனம் பெற்ற பின்னர் இத்தவறு தெரியவருமாயின் எவ்வித நட்டஈடும் வழங்கப்படாமல் சேவையிலிருந்து நீக்கப்படலாம் என்பதனையும் நன்கறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்று**

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரி இவ்வமைச்சில்/ திணைக்களத்தில் பணிபுரிவதுடன் அவரினால் வழங்கப் பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும், அவர் மேற்குறிப்பிட்ட பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் / முடியாது என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :
உத்தியோகப்பூர்வ முத்திரை :
திகதி :----.

6-922

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.